32
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 008 வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 18, புதன் 04.12.2013

இடியுடன் கூடிய மழை
28<sup>C</sup> 24<sup>C</sup>



இலங்கையின் நட்பு நாடா இந்தியா?



பக்கம் 07

பேச்சுகளுக்குத் தயார் பதவி விலக முடியாது



பக்கம் 22

விளையாட்டு விழாவில் வடக்கு மாகாணத்துக்கு 40 பதக்கங்கள்



பக்கம் 23

முதலாவது போட்டியில் வில்லியம்சன் இல்லை

# ராணுவத் தலையீடு குறித்து அழுத்தங்கள் கொடுப்பேன்

## யாழ்ப்பாணத்தில் கூறினார் ஐ.நா. அதிகாரி

யாழ்ப்பாணம், டிசெம்பர்4
தேவையற்ற விடயங்களில் இலங்கை இராணுவத்தினர் தலையீடுசெய்கின்றமைதொடர்பில் அழுத்தங்களைக் கொடுப்பேன் என்று ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானி நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வருகை தந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான ஐ.நாவின் விசேட பிரதிநிதி சலோகா பெயானி, நேற்றுமாலைநல்லூரில் அமைந்துள்ள அகதிகளுக் கான ஐ.நா. தூதரகத்தில் சிவில் சமூகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வலி.வடக்கில் இராணுவத்தால், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் 6 ஆயிரத்து 380 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளமை குறித்தும், இதனால் 24 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்கள், உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசிக்கின்றமை தொடர்பிலும் சிவில் சமூகத்தினர் ஐ.நா. சிறப்புப் பிரதிநிதியிடம் சுட்டிக்காட்டினர்.

உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்கும் மக்களின் வீடுகள் இடித்தழிக்கப்பட்டு வருகின்றமை, கோயில்கள், பாடசாலைகள் நிர்மூலமாக்கப்படுகின்றமை தொடர்பிலும் அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

நலன்புரி நிலையங்களில் தங்



21 ஆம் பக்கம் பார்க்க

## வயிற்றோட்ட பாதிப்பு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4
மழைகாலம் ஆரம்பித்துள்ளதையடுத்து யாழ். குடாநாட்டில் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

கடந்த ஒருமாத காலப் பகுதியில் இவ்வாறு வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டு 14 பேர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை நான்கு பேரும், நேற்றுமுன் தினம் ஒருவரும், கடந்த நவம்பரில் 9 பேரும் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவற்றிலிருந்து அவதானமாக இருக்குமாறு பொது மக்களை சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (த-4)

# மீள்குடியமர்வுக்கு இராணுவமே தடை

## ஐ.நா. பிரதிநிதியிடம் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ.4
இங்கு மீள்குடியமர்வுக்கு ஒரே ஒரு பிரச்சினை இராணுவம் தான். கிழக்கில் சிங்களக் குடியேற்றம் செய்வதைப் போல் இங்கும் செய்ய நினைக்கின்றார்கள். இதனை எம்மால் தடுத்து நிறுத்த முடியா விட்டாலும் சர்வதேச நாடுகள் மூலம் அரசுக்கு அழுத்தம் கொடுத்து அதனூடாக இதற்கு முடிவு கட்டப்படும் என்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

ஐ.நா.சிறப்புப் பிரதிநிதி பெயா

21 ஆம் பக்கம் பார்க்க

# சொந்த மண்ணே வேண்டும் எமக்கு

## ஐ.நா. பிரதிநிதியிடம் வலி.வடக்கு மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.4
"எங்களுக்கு வேறிடம் வேண்டாம். சொந்த மண்ணில்தான் எங்களை குடியமர்த்த வேண்டும். நாங்கள் இல்லாவிட்டாலும் எங்கள் பிள்ளைகள் அந்த மண்ணில் வாழ வேண்டும்" என்று வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் ஐ.நா. சிறப்புப் பிரதிநிதியிடம் ஒரே குரலில்

21 ஆம் பக்கம் பார்க்க



மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் சேறும் சகதியுமான பாதையூடாக பயணித்து மக்களின் அவல நிலைகளைப் பார்வையிடும் ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி கலாநிதி சலோகா பெயானி. (த-21)

# வலி.வடக்கு மக்கள் மீண்டும் சொந்த மண் செல்லவேண்டும்

## வலியுறுத்துகிறார் ஐ.நா. அதிகாரி பெயானி

யாழ்ப்பாணம், டிசெ.4
வலி.வடக்கு மக்கள் அவர்களின் சொந்த இடத்துக்கு திரும்ப வேண்டும். அத்துடன் அவர்களுக்கான சொத்தழிவு, தொழில் இழப்பு ஆகியவற்றுக்கு நட்டஈடுகளும் வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி கலாநிதி சலோகா பெயானி தெரிவித்தார்.

யாழ். நல்லூரில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தில் இடம்பெற்ற சிவில் சமூகத்துடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் அவர்களின் சொந்த இடத்துக்கே திரும்பவேண்டும் என்று விரும்புகின்றனர். மீள்குடியமர்வு (Resettlement) என்ற வார்த்தையை அதற்காகப் பாவிக்க வேண்டாம். மீளத் திரும்புதல் (Return) என்ற சொல்லையே பயன்படுத்துங்கள். மீள்குடியமர்வு (Resettlement) என்றால் அவர்களை வேறு இடத்தில் குடியமர்த்துவதைக் குறிக்கும். எனவே மீளத் திரும்புதல் (Return) என்ற வார்த்தையைப் பயன்படுத்துங்கள்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் குடும்ப அட்டைகளைத் தற்போது தங்கி

21 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றுள் விழுந்த சிறுவன் மீட்க எவருமின்றிச் சாவு

### யாழ். நகரில் நேற்று பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 4
கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கிய மூன்று வயதுச் சிறுவனை உடனடியாக வெளியே எடுப்பதற்கு எவரும் இல்லாமையால் சுமார் 15 நிமிடங்களின் பின்னரே அந்தச் சிறுவன் மீட்கப்பட்டான்.

அவனை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் அவன் முன்னரே உயிரிழந்து விட்டமை தெரியவந்தது.

யாழ். போதனா வைத்தியசாலைக்குப் பின்புறமாக உள்ள யாழ். விக்ரோரியா வீதியி

21 ஆம் பக்கம் பார்க்க

## தொண்டுப் பணியாளர்களை கொன்றது இராணுவம் தான்

### 'அக்ஷன் பாம்' குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 4
மூதூரில் கொல்லப்பட்ட பட்டினிக்கெதிரான அமைப்பின் (அக்ஷன் பாம்) 17 பணியாளர்களும் இராணுவத்தினரால் முழங்காலிட வைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் கொலையாளிகளான இராணுவத்தை இலங்கை அரசு இன்னமும் பாதுகாத்து வருகின்றது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரான்ஸைத் தளமாகக் கொண்ட பட்டினிக்கு எதி ரான நிறுவனம் (அக்ஷன் பாம்) பணியாளர்கள் 17 பேர் 2006

21 ஆம் பக்கம் பார்க்க

## மூதாட்டியின் கைப்பைக்குள் மைக்ரோ பிஸ்டல் ரவைகள்

### வவுனியா பொலிஸார் மீட்டனர்

*வவுனியா, டிசெ. 4*
*வவுனியாவிலிருந்து பஸ்ஸில் புறப்பட்ட வயோதிபப் பெண்ணின் கைப்பைக்குள் இனந்தெரியாதோர் மைக்ரோ பிஸ்டலுக்குப் பயன்படுத்தும் 18 ரவைகளைப் போட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.*

*இந்தச் சம்பவம் நேற்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.*

*சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:*

*வவுனியாவில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த பஸ்ஸில்*

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் குடியமர்வுத் தடைகள் குறித்து யாழில் ஆராய்ந்தார் ஐ.நா. அதிகாரி

யாழ்ப்பாணம், டிசெ.4

மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதில் உள்ள தடைகள் குறித்து வடக்கு மாகாண முதலமைச்சருடன் நேற்று ஆராய்ந்தார் ஐ.நாவின் விசேட பிரதிநிதி.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத் தொடர்பில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான ஐ.நாவின் விசேட பிரதிநிதி கலாநிதி சலோகா பெயானி நான்கு நாள் பயணமாக இலங்கை வந்துள்ளார்.

இவர் யாழ்.மாவட்டத்துக்கு நேற்றுக் காலை விசேட விமானம் மூலம் வந்தார். முற்பகல் 10 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி நிலைமைகள் தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டது.

இதன் பின்னர் யாழ்.மாவட்டச் செயலகத்துக்குச் சென்ற பெயானியை, அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கைலாகு கொடுத்து வரவேற்றார்.

இங்கு யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் மீளக் குடியமர்ந்தோர் விவரம் தொடர்பில் அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது. இந்தச் சந்திப்பு சுமார் 15 நிமிடங்கள் மட்டுமே இடம்பெற்றது.





இதன் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் பெயானி சந்தித்தார். இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனும் பங்குபற்றினார்.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இடம்பெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பில் கலாநிதி சலோகா பெயானி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்;

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி விரிவாக ஆராய்ந்து அவர்களுக்கான நிவாரணம் தொடர்பில் கலந்துரையாடினோம். இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவதில் உள்ள தடைகள் தொடர்பிலும் ஆராய்ந்தோம்- என்றார். (த-5)

## வலி.மேற்கு கடைகளில் நேற்றுத் திருட்டு முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ.4

சங்கானை, சித்தங்கேணிப் பகுதிகளில் நேற்று மட்டும் பல கடைகளில் திருட்டு முயற்சிகள் இடம்பெற்றுள்ளதாக கடை உரிமையாளர்கள் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடைகளின் பூட்டுகளை உடைக்க முற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன. உள்பூட்டுகள் பலமானதாக இருந்தமையால் கடைகளின் கதவுகளைத் திறக்க முடியாமல் திருடர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை - ஆறுகால்மடம் பகுதியில் நேற்று அதிகாலை ஒருவர் தாக்கப்பட்ட நிலையில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(த-4-21-29)

# ஆலயங்களில் திருட்டை தடுக்க சிவனை ஆராதிக்கும் நிகழ்வு

*சுன்னாகம் கதிரமலை தேவஸ்தானத்தில் இன்று*

வலி.வடக்கு, டிசெ.4

ஆலயங்களில் இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துதல், ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாத்தல், மற்றும் மக்களின் வாழ்வு உயர்வடையச் செய்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மூலப் பரம்பொருளான சிவனை ஆராதிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை தேவஸ்தானத்தில் இடம் பெறவுள்ளது.

> “திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. ஆலயங்களின் புனிதத் தன்மை கேள்விக்குரியதாகியுள்ளது. இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. எமது மதத்தையும் மத விழுமியங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமது கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த ஆராதனை நிகழ்வில் சிவாச்சாரியார்கள், திருமுறையாளர்கள், நாதஸ்வர, தவில் வித்துவான்கள், இசை ஆசிரியர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், ஆலய பரிபாலன சபையினர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இந்து மா மன்றப் பிரதிநிதிகள், சாயி சமித்து மன்றங்களின் பிரதிநிதிகள் உட்பட சகலரையும் கலந்துகொள்ளுமாறு குருமார் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக இந்து குருமார் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாடு உள்பட வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள இந்து ஆலயங்கள் அண்மைக் காலமாகப் பாதுகாப்பற்ற தன்மைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன. திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. ஆலயங்களின் புனிதத் தன்மை கேள்விக்குரியதாகியுள்ளது. இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. எமது மதத்தையும் மத விழுமியங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமது கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஞானிகள், சித்தர்கள், நாயன்மார்களால் வளர்க்கப்பட்டு எமது கைகளில் ஒப்படைக்கப்பட்ட இந்து மதத்தை நாம் உரிய விழுமியங்களுடன் பாதுகாத்து அடுத்த சந்ததியின் கைகளில் ஒப்படைக்க வேண்டும். இது எமது ஒவ்வொருவருடைய வரலாற்றுக் கடமையாகும்.

இந்து ஆலயங்களில் இடம்பெற்று வருகின்ற திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்து மகா சபையால் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தச் சூழ்நிலையிலேயே இந்த ஆராதனை நிகழ்வு இன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்துத் தரப்பினரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-400-86)

## உயர்தர பெறுபேறுகள் 24க்கு முன்

கொழும்பு, டிசெ.4

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்று முடிந்த ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 24ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (த-400)

## கடையை உடைத்த திருடர்கள் நேற்று பகல் மடக்கிப் பிடிப்பு

*ஆவரங்கால் மேற்கில் சம்பவம்*

யாழ்ப்பாணம், டிசெ. 4

ஆவரங்கால் மேற்கு பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பட்டப்பகலில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி பொதுமக்களின் உதவியுடன் முறியடிக்கப்பட்டது.

திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர்கள் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் வேளையில் இடம்பெற்றது.

ஆவரங்கால் மேற்குப் பகுதியில் வன்னியசிங்கம் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலைய உரிமையாளர் வர்த்தக நிலையத்தைப் பூட்டிவிட்டு மதிய உணவுக்காக வீட்டுக்குச் சென்றுள்ளார். இதனை அவதானித்த திருடர்கள் குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தின் யன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே புகுந்து பொருள்களைக் களவாடுவதில் ஈடுபட்டுள்ளனர்.

வீடு சென்ற வர்த்தக நிலைய உரிமையாளர் கடைக்கு திரும்பி வருவதை அவதானித்த திருடர்கள் திருடிய பொருள்களை போட்டுவிட்டு தப்பியோட முயற்சித்தனர். எனினும் வர்த்தக நிலைய உரிமையாளர் பொதுமக்களின் துணையுடன் திருடர்களை மடக்கிப் பிடித்து அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (த-17-400)

## கிளி. மாவட்ட கூட்டுறவு சமாச களஞ்சியத்தில் புகுந்தது வெள்ளம்

*உணவுப் பொருட்கள் நாசம்*



கிளிநொச்சி, டிசெ. 4

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைமை அலுவலகம் மற்றும் களஞ்சியம் ஆகியவற்றுக்குள் வெள்ளநீர் புகுந்ததால் பெருமளவான அலுவலக உடைமைகள், உணவுப் பொருள்கள் சேதமடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் முதல் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாகவே வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. களஞ்சியம் அமைந்துள்ள இடத்தில் வடிகால் அமைப்பு சீரின்மை காரணமாகவே வெள்ள நீர் தேங்கி உட் புகுந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

பல லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் மற்றும் உணவல்லாத பொருள்கள் சேதமடைந்துள்ளன.

அத்துடன் அலுவலகத்துக்குள் வெள்ளநீர் புகுந்ததால் அலுவலக கணினிகள், அலுவலகக் பொருள்கள் என்பனவும் சேதமடைந்துள்ளன.

ரயில் பாதை புனரமைக்கப்பட்ட நிலையில் வடிகாலமைப்பு சீர் செய்யப்படாமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-6)

## விபத்தில் இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ்ப்பாணம் அம்பன் பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ-மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் வத்திராணைச் சேர்ந்த தங்கவேல் கலையமுதன் (வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த இவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-400-4)

# பொலிஸார் எம்மைத் தாக்கினர்; குடும்பப் பெண்கள் முறைப்பாடு

மாங்குளம், டிசெ.4

கரவெட்டி இராஜ கிராமம் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண்களத பொலிஸாரினால் தாக்கப்பட்ட தாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலு வலகத்தில் நேற்று முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டி இராஜ கிராமம் பகுதியில் சந்தேக நபரை கைது செய்யும் நோக்கோடு நெல்லியடிப் பொலிஸார் சிவில் உடையில் நேற்றுக் காலை சென்றனர்.

ஓட்டோவில் சென்ற சிவில் உடை தரித்த நெல்லியடிப் பொலிஸார் இராஜ கிராமம் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வீட்டின் உரிமையாளரைக் கைது செய்ய முயற்சித்துள்ளனர்.

இவர்கள் வீட்டுக்குள் நுழைவதை அவதானித்த குடும்பத் தலைவியான இந்திரகுமார் ரஜிதா என்பவர் சிவில் உடையில் வந்தவர்களுடன் நீங்கள் யார் என்று கேட்டார்.

இதன் போது தம்மை நெல்லியடிப் பொலிஸார் என்று அறிமுகப்படுத்திய அவர்கள் அந்தப் பெண்ணுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் அவரை தாக்கியதாகவும் வீட்டின் உரிமையாளரான நல்லதம்பி இந்திரகுமார் (வயது 26) என்பவரைக் கைது செய்துகொண்டு சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தனது கணவரின் கைதுக்கான காரணம் தெரியாத மனைவியும், கைது செய்யப்பட்டவரின் தாயாரான நல்லதம்பி லங்காதேவியும் இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்துடன் தமக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (த-422-400)

## சாதாரண தர வகுப்புகளுக்கு நேற்று நள்ளிரவு முதல் தடை

கொழும்பு, டிசெ.4

எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சி.ஈ.சாதாண தரப் பரீட்சையை முன்னிட்டு நேற்று நள்ளிரவு முதல் சாதாரண தர மாணவர்களுக்கான சகல தனியார் வகுப்புகளுக்கும் அரச தடை விதித்துள்ளது.

கல்வி அமைச்சினால் கடந்த மே மாதம் 30ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பரீட்சைகள் ஆரம்பமாவதற்கு 5 தினங்களுக்கு முன்னர் குறித்த பரீட்சைக்கான சகல தனியார் வகுப்புகளும் நிறுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதன்அடிப்படையில்நேற்று நள்ளிரவு முதல் இந்தத் தடை நடைமுறைக்கு வருகிறது.

சாதாரண தரப் பரீட்சை சார்ந்த தனியார் வகுப்புகளை நடத்துவது, விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல், மாதிரி வினாத்தாள்கள் மற்றும் விடைகளை அச்சிட்டு வழங்குவது, சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். 1968ஆம் ஆண்டு 25ஆம் இலக்க பரீட்சைகள் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (த-400-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னம் பிள்ளை விநியோகம் நாளை

தென்மராட்சி, டிசெ.4
சாவகச்சேரி, கல்வயல் தென்னை அபிவிருத்திச் சங்கத்தின் 100 உறுப்பினர்களுக்கு தென்னை மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டப் பயிராக நடுவதற்கு தென்னம்பிள்ளைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

நாளைக் காலை 9 மணிக்கு கல்வயல் சண்முகானந்தா பொதுநோக்கு மண்டபத்தில் தென்னம் பிள்ளைகள் விநியோகிக்கப்படவுள்ளதாக சங்கச் செயலாளர் அ.பற்குணநாதன் அறிவித்துள்ளார்.

இதேவேளை எட்டுப் பரப்புக்கு மேல் காணிகளில் தென்னை பயிரிடுவோருக்கு விசேட செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடன் வசதி, நீர்ப்பாசன வசதி, மாட்டுத் தொழுவம் அமைத்தல், கைத் தொழிற் பயிற்சி, பசளை உற்பத்தி, கடன் வழங்கல் போன்றவை மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பாக பிரதி புதன் கிழமைகளில் கமநல சேவைகள் நிலையத்தில் தென்னை அபிவிருத்திப் பிரிவு பட்டதாரி பயிலுநருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.
(வ-9)

# மாற்றுவலுவுடையோருக்கும் வேலை வாய்ப்பு அவசியம்

## போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.4
மாற்றுவலுவுள்ளவர்கள் கல்வியில்சிறந்தபெறுபேறுகளைப்பெற்றுப் பட்டதாரிகளாக வெளியேறுகின்ற போதும் அவர்களுக்கான உரியவேலைவாய்ப்புவழங்கப்படுவதில்லை. இந்த நிலை மாற்றம் பெற்று ஏனையவர்களைப் போன்று மாற்றுவலுவாளர்களது திறமைகளும் சரிசமமாக மதிக்கப்பட வேண்டும் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் தெரிவித்தார்.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "தடைகளை வெற்றி கொண்டு உள்ளீட்டு சமூகத்தை நோக்கிப் பிரவேசிப்போம்" என்ற தொனிப் பொருளிலான விசேட தேவையுள்ள மாணவர் தினம் நேற்று மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேலும் கூறியதாவது:
வருடந்தோறும் மாற்று வலுவுடையோர் தினம் கொண்டாடப்படுகிறது. கடந்த வருடம் "தடைகளை வென்றெடுப்போம்" என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்பட்ட இந்தத் தினம் இந்த வருடம் சற்று வித்தியாசமாக 'தடைகளையும் தாண்டி, சமூகத்தை வென்றெடுப்போம்' என்ற தொனிப் பொருளில் கொண்டாடப்படுகிறது.

சமூகத்தில் வெளிவராத மாற்று வலுவுடைய பிள்ளைகள் இன்று பெற்றோரின் வழிகாட்டல்களால் வெளியில் கொண்டு வரப்பட்டுள்ளனர். பிள்ளைகளுடைய திறன்களை மதிக்கின்றனர். பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு கல்வியைப் பெற்றுக் கொடுப்பது வீண் செலவு என்று நினைத்தால் அவர்களுடைய எதிர்காலமும் வீணாக்கப்படும் என்பதை நினைத்துக் கொள்ள வேண்டும்.

மாற்றுவலுவுள்ளவர்கள் இன்னொருவர் மீது தங்கி வாழக் கூடாது. தமது சொந்த முயற்சியால் வாழப்பழக வேண்டும். இதற்கு ஆரம்பமாக அவர்களுக்கான கல்வி பெற்றுக் கொடுக்கப்படவேண்டும் என்பது மனித உரிமையாகக் கொள்ளப்படுகிறது.

கடந்த காலங்களில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விசேட கல்வி அலகுகள் செயற்பட்டன. எனினும் தற்போது அவை ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இது நன்மை தரக் கூடிய விடயம். விசேட தேவையுடைய மாணவர்களது தேவைகளை சாதாரண மாணவர்களும் அறிந்து கருத்து ஒன்றிப்புடன் கல்வியைத் தொடர வாய்ப்பாக இருக்கும். விசேட தேவையுடைய மாணவர்களது திறன்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது கல்விப் பெறுபேற்றுக்கு ஏற்ப வேலை வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும். -என்றார்.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வாழ்வகத் தலைவர் ஆ.இரவீந்திரன், ஓய்வு பெற்ற விரிவுரையாளர் பொன்.ஸ்ரீவாமதேவன் உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதந்த விசேட தேவையுடைய மாணவர்களது கலை நிகழ்வுகளும், சமூக சேவையாளர் கௌரி பொன்னையாவை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன.
(வ-14)

# பளை மருத்துவமனை நேற்றுத் திறக்கப்பட்டது



பளை, டிசெ.4
ஐக்கிய அமெரிக்கா பசுபிக் கட்டளைப் பீடத்தின் (எய்ட்ஸ்) நிதி உதவியுடன் பத்து மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பளைப் பிரதேச மருத்துவமனைக்கான இரு மாடிக் கட்டடம் நேற்று வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சர் ப.சத்தியலிங்கம், 'எயிட்ஸ்' நிறுவனப் பிரதிநிதி ஷெரி எவ்.கார்தின், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் மருத்துவமனைக் கட்டடத்தைத் திறந்து வைத்தனர்.

மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட பிரசவ விடுதி, அவசர சிகிச்சைப் பிரிவு, சிறுவர் விடுதி ஆகியவற்றை பார்வையிட்ட மாகாண சுகாதார அமைச்சர் இரு நோயாளர்களைப் பதிவு செய்து விடுதியில் அனுமதித்தார்.

இந்த நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்களான ப.அரியரத்தினம், க.பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் சுகாதார வைத்திய அதிகாரிகள் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி திருமதி மைதிலி சிவானந்தன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.
(வ-9)

# புயல் அறிவிப்பால் நெடுந்தீவுக்கான படகுச்சேவை நேற்று நிறுத்தம்

யாழ்ப்பாணம்.டிசெ.4
நெடுந்தீவு-குறிகாட்டுவான் அரச படகுச் சேவையான குமுதினிப் படகு நேற்று செவ்வாய்க் கிழமை 24 மணி நேர புயல் அபாயம் காரணமாக சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படவில்லை என்று நெடுந்தீவு பிரதேசசபை உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை துறைமுகத்துக்கு வந்த பயணிகள் படகுச் சேவை இல்லாததால் நீண்டநேரம் துறைமுகத்தில் காத்திருக்க நேர்ந்தது. இதனையடுத்து நெடுந்தீவு பிரதேச சபையுடன் தொடர்புகொண்டபோது மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் படகு ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆகியோருடன் தொடர்பு கொண்டவேளை புயல் அபாயம் உள்ளதால் கடற்படையினர் கூறுவதற்கு அமைய செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டது. அதனால் நேற்றையதினம் படகுச்சேவை இடம்பெறவில்லை என்று படகு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.
(வ-7)

# கூட்டுறவு பெரியாரின் நினைவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.4
யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுப் பெரியார் அமரர் வி.வீரசிங்கத்தின் 49 ஆவது நினைவு தினமும், 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா பரிசில் வழங்கலும் நாளை மு.ப.10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சபைத் தலைவர் இ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், இலங்கை தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் லலித் ஏ.பீரிஸ் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், சு.சுகிர்தன் வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், மக்கள் வங்கி கன்னாதிட்டி கிளை முகாமையாளர் கே.சுசீந்திரன் பிரதான நிதி கிளை முகாமையாளர் அ.பிரான்சிஸ் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கூட்டுறவுச் சங்கங்களின் முன்னாள் தலைவர்கள், பொது முகாமையாளர்களைக் கௌரவித்தல், மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் கௌரவிப்பு, 81 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கல் ஆகியனவும் இடம்பெறும்.
(வ-9)

## வலி. மேற்கில் நேற்று பாதீனியம் ஒழிப்பு

வலி.மேற்கிலும் வேகமாக பரவிவரும் பாதீனியத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக நேற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், சபையின் உறுப்பினர்கள் மற்றும் சபையின் செயலாளர், உப அலுவலக பொறுப்பதிகாரிகள், ஊழியர்கள் . பாதீனியக் களை ஒழிப்பில் ஈடுபட்டனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னெல் மைதானத்திலும், அதனை சுற்றியுள்ள பிரதேசத்திலுமாக முதற்கட்டப் பணி நேற்று நிறைவு பெற்றது. அத்துடன் களைகள் உடனுக்குடன்தீயிட்டுகொளுத்தப்பட்டன.

## திருட முற்பட்டவர் சிக்கிக் கொண்டார்

யாழ்.போதனா வைத்தியசாலையில் சைக்கிள் திருட முற்பட்ட ஒருவரை வைத்தியசாலை பணியாளர் கண்டு கொண்டதனால் பாதுகாப்பு ஊழியர்கள் மூலமாக அவர் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸில் ஒப்படைப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் 5.30 மணியளவில் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை வீதியிலுள்ள வாயில் ஊடாக சைக்கிளைத் திருடமுற்பட்ட அவர் குறித்த சைக்கிளின் பூட்டை உடைத்துள்ளார். அதன்போது வைத்தியசாலைப் பணியாளர் ஒருவர் கண்டு கொண்டார்.

திருட முற்பட்டவர் மானிப்பாயைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# பற்றைக்காணியிலிருந்து கைக்குண்டுகள் மீட்பு

வலி.வடக்கு, டிசெ.4
ஏழாலை கிழக்கு பகுதியில் பற்றைக் காணி ஒன்றில் இருந்து கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டுகள் நேற்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஏழாலை கிழக்கு புனித இசிதோர் பாடசாலைக்கு அருகில் உள்ள பராமரிப்பற்ற காணிக்கு அருகில் உள்ள காணியை அயல் காணிக்காரர் துப்புரவு செய்ய முயன்ற வேளையில் கைக் குண்டுகள் ஆறும் மற்றும் ஒரு தொகுதி வயர் என்பவற்றை அவதானித் தார்.

அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதி கிராம அலுவலருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சுன்னாகம் பொலிஸாருக்கு கிராம அலுவலரால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் குண்டுகளை மீட்டதுடன் இராணுவத்தினருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இராணுவத்தினர் குண்டுகளை [illegible] சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
(வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் விடயத்தில் ஐ.நா. தலையிடுக

## தமிழக படகு உரிமையாளர் சங்கத் தலைவர் கோரிக்கை

சென்னை, டிசெ.4

இலங்கையில் இந்திய மீனவர்கள் மனிதாபிமானமற்ற வகையில் நடத்தப்படுகின்றனர்.

இது இந்திய மீன வர்களுக்கு மட்டும் அல்ல. இந்தியாவுக்கும் மரியாதைக் குறைவான செயல் என்று தமிழக படகு உரிமையாளர் சங்க தலைவர் என் ஜே போஸ் குற்றம் சுமத் தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எல்லையைத் தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் மனிதாபிமான முறையில்நடத்தப்படுவதாக இலங்கை கூறுகிறது.

எனினும் அவர்கள் விலங்கிடப்பட்டு குற்றவாளிகளை போலநடத்தப்படுவதை உறுதிப்படுத்த புகைப்பட ஆதாரங்கள் உள்ளன. எனவே இந்த விடயத்தில் ஐக் கிய நாடுகளின் மனித உரிமை கள் ஆணையகம் தலையிட வேண்டும்.

இதுதொடர்பில் இந்திய வெளியுறவு அமைச்சும் உரிய கவனம் செலுத்த வேண்டும்- என்றார்.

**இந்திய கடற்படை அதிகாரி கருத்து**

இதேவேளை இந்திய கடற் பகுதியில் எந்தத் தமிழக மீனவர்களும் தாக்கப்படுவதில்லை. கடல் எல்லையை தாண்டிச் செல்லும்போதே அவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் இடம்பெறுவதாக இந்திய கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படை பொறுப்பதிகாரி அமர் கே.மகாதேவன் சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதாக தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

தற்போது நாட்டுக்கு பல்வேறு வகைகளில் அச்சுறுத்தல்கள் உள்ளன. நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதனிடையே, இலங்கை யைச் சேர்ந்த ஆறுபேர் இந் திய கடல் எல்லையில் நுழைந்து சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டமை தொடர்பில் கடலோரக்காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணித்த படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 10 நாள்களில் இதுவரை 56 பேர் கைதானதாக அதிகாரிகள் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# வவுனியா விகாராதிபதிக்கு தொடர்ந்து விளக்கமறியல்

வவுனியா, டிசெ. 4

வவுனியா விகாராதிபதிக்கு எதிராகத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருவதனாலும் முறைப்பாட்டாளர்களின் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டும் அவரின் விளக்கமறியல் எதிர்வரும் 17ஆம் திகதி வரைக்கும் நீடிக்க நீதவான் உத்தரவிட்டார்.

வவுனியா அட்டமஸ்கட பிரதேசத்தில் அமைந்திருந்த சிறுவர் இல்ல காப்பாளரான கல்யாண திஸ்ஸதேரர் சிறுவர்களைப் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி வி.இராமகமலன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதன்போது விகாராதிபதியைப் பிணையில் விடுவிக்குமாறு கோரப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். ரட்ண வேல், விகாராதிபதிக்கு எதிராகத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாகவும் இவரை விடுவித்தால் முறைப்பாட்டாளருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதனையும் சுட்டிக் காட்டினார்.

கடந்த வழக்குத் தவணையில். மன்றினால் சொல்லப்பட்ட விடயங்கள் செய்து முடிக்கப்படவில்லை என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களிடமிருந்து முழுமையான விசாரணை முடிவடையாத அதே வேளை மன்றில் முற்படுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்த விகாராதிபதியின் பாதுகாவலர்கள் இருவர் இது வரை மன்றில் முற்படுத்தப்படவில்லை என்பதையும் சட்டத்தரணிகள் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து விகாராதிபதியின் விளக்க மறியலை நீடிக்க நீதிவான் உத்தரவிட்டார். (த-5)

# உரத்துக்காக தனியார் கடைகளை நாடும் மக்கள்

மழை பெய்து வயல்களில் நீர் தேங்கயுள்ள போதிலும் அதற்கு இடுவதற்கான உர வகைகள் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் இல்லாததால் நெற்செய்கையாளர்கள் தனியார் கடைகளை நாடிச் செல்கின்றனர்.

குறித்த கமநல நிலையத்தில் முதல் கட்டமாக ஒரு சிலருக்கு மானிய உர வகைகள் வழங்கப்பட்டன. எனினும் பலருக் கு கிடைக்கவில்லை. நீண்ட நாள்களாக மழை இல்லாததால் உர வகைகள் தொடர்பாக நெற் செய்கையாளர்கள் அக்கறை செலுத்தவில்லை.

கடந்த மூன்று தினங்களாகப் பெய்து வரும் மழையால் வயல்களில் நீர் தேங்கியுள்ளது. கமநல சேவைகள் நிலையத்துக்குச் சென்றால் இன்னமும் மானிய உரம் வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் நெற் செய்கையாளர்கள் அதிக விலை கொடுத்து தனியார் கடைகளில் உர வகைகளைப் பெற்று நெற்பயிருக்கு விசிறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் நெற் செய்கையாளர்களுக்கு ஆகக் கூடியது ஒரு அந்தர் வரை உரம் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தனர். (வ-9)

# தமிழக மீனவர்களின் பிரச்சினையை விசாரிக்க ஆய்வுக்குழு அமைக்குக

சென்னை, டிசெ.4

தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து ஆய்வு செய்ய மத்திய மாநில அரசு அதிகாரிகள் கொண்ட குழுவொன்றை அமைக்க வேண்டும் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை இணை அமைச்சர் இ.எம். சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்தார்.

மத்திய அரசின் பெற்றோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டு அமைப்பு சார்பில் பட்டாசுத் தொழிற்சாலை கண்காணிப்பாளர்களுக்கான பாதுகாப்பு பயிற்சி வகுப்பு ஆரம்ப விழா சிவகாசி ரெங்க நாயகி வரதராஜ் பொறியியல் கல்லூரியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடை பெற்றது. பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டிலிருந்து சுமார் 6000 விசைப்படகுகள் மூலம் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். இதில் இரண்டு அல்லது நான்கு படகில் செல்பவர்களுக்கு பிரச்சினை ஏற்படுகிறது. இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் மீனவர்களைப் பார்த்துச் சுட்டனர். வலை உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர் என்று செய்திகள் வெளியாகின்றன. இது குறித்த ஆய்வு செய்ய உயர் நிலைக் குழுவொன்றை அமைக்க வேண்டும்.

தமிழக உயர் பொலிஸ் அதிகாரிகள், மீன்வளத் துறை அதிகாரிகள், மத்திய அரசின் றோ அல்லது சி.பி.ஐ. அதிகாரிகள், இந்திய கடற்படை அதிகாரிகள், இலங்கைக் கடற்படை அதிகாரிகள், வெளியுறவுத் துறை, அமைச்சக அதிகாரிகள் கொண்ட உயர் நிலைக் குழுவை மத்திய, மாநில அரசுகள் அமைக்க வேண்டும். அந்தக் குழு மீனவர்கள் பிரச்சினை குறித்து ஆய்வு செய்து, அறிக்கை வழங்க வேண்டும். இந்த அறிக்கையின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் இதுவரை 27 மாநில முதல்வர்களைச் சந்தித்து விட்டேன். தமிழக முதல்வரை இதுவரை சந்திக்கவில்லை. விரைவில் சந்திப்பேன் என்று எண்ணுகிறேன்.

வெளி நாட்டவர்கள் பலர் தமிழகத்தில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருகிறார்கள்.



அவர் களைச் சந்தித்துப் பேச தமிழக முதல்வர் முன்வர வேண் டும்- என்றார். (வ)

# பரிசளிப்பு

மாங்குளம், டிசெ. 04

வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் திருமதி பரமேஸ்வரி - சோதிலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.செல்வராசா கலந்து கொள்வார். (ங-422)


## மரண அறிவித்தல்

### சின்னையா சின்னத்துரை (சின்னத்தம்பி)



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சின்னத் துரை நேற்று(03.12.2013) செவ்வாய்க்கிழமை இயற்கை மரணமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பித் துரை-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், வர்ணலக்ஷ்மியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், அன்னலக்சுமி, வைத்திலிங்கம், சரவணமுத்து மற்றும் பரிமளம் (ஹொலண்ட்) சரஸ்வதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவனேஸ்வரன் (நோர்வே), காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் சிவகாந்த ரூபி (இந் தியா), சுலோசனாதேவி (நோர்வே), சியாமளா (ஊரெழு), ஸ்ரீரஞ்சன் (மலேசியா), ஸ்ரீஸ்கந்தராஜா (இந்தியா), சிவமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜேஸ்வரி, சிவதாஸ், விஜயராஜா, ஜெயதேவன், குலதேவன், சத்திய பிறேமா, மதியழகி, அருள்மாறன் ஆகி யோரின் அன்பு மாமனும், ஸ்ரீரஞ்சன், சியாமளா, சிவதீபன், நிலாணி, லக்சினி, சுகந்தன், பிரகினி, சுகதாஸ், சுரேகா, யோகின், ஜோகிதா, ஜெனா, சிநேகா, சுமிர்தா, சுகிர்தா, துலஸ்திகன், நிர்மலன், நிறோசன், சாரங்கி, கிரிசாந்த் ஆகியோரின் அன்பு பேரனும், பூஜா, கரோன், நிறோன், சாதனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2013) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரெழு, பொக்கணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(40824)(10.14)

தகவல்:
குடும்பத்தினர்.


# மின் தாக்கி இருவர் படுகாயம்

கொட்டடிப் பகுதியில் உள்ள மருந்தகம் ஒன்றில் மின்சார இணைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த இருவர் மின்சார தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொட்டடி பகுதியிலுள்ள மருந்தகம் ஒன்றிற்கான பெயர்ப்பலகை பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இந்த அனர்த்தம் நேற்று இடம் பெற்றது.

இதில் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவிலும், முதியவர் ஒருவர் சாதாரண விடுதியிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

படுகாயமடைந்த[illegible] விபரங்கள் தெரியவரவில்லை. (த-4)


## மரண அறிவித்தல்

### பொன்னுச்சாமி ஞானபண்டிதன் (பண்டிதர்)



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி (கரடிப்போக்கு) இல் வசித்த வரும், தற்போது பிரான்ஸை(பரிஸ்) வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி ஞான பண்டிதன் (01.12.2013) ஞாயிற்றுக் கிழமை பிரான் ஸில் இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான - பொன்னுச்சாமி (ஓவசியர்), புவனேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்ற செல்லத்துரை- இரத்தினம் தம்பதியரின் மருமகனும், தங்கேஸ்வரியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், திருமதி நிசாந்தி, திருமதி ஞானரஞ்ஞினி, திருமதி சஞ்சுதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சன், ரவிசங்கர், பிரதீபன் ஆகியோரின் மாமனும், நிவேதிதா தேவி, மங்கையர்க்கரசி (Rtd - Nursing Officer) ஒப்பிலாம்பிகை, செகராசசேகரம் (Rtd.Sri Lanka Telecom), சிறிவித்தியாசாகரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வாமிகா, சபிதா, பபிஸ்கர், வர்சா, அனிஸ், அஸ்சினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2013) புதன்கிழமை பிரான்ஸ் (பரிஸில்)இல் நடைபெற்று நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வடக்கு.
தொ.பே. 021 321 8787

(சி/14128)(45.6.3)

தகவல்:
திருமதி ஒப்பிலாம்பிகை
ஆனந்தகிருஸ்ணன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலாளியைத் தாக்கி பாடசாலையில் கொள்ளை

தென்மராட்சி, டிசெ.4
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்குள் புகுந்த இனந்தெரியாதோர் அங்கிருந்த அறைகளை உடைத்து பொருள்களை அடித்து நொருக்கியதுடன் காவலாளியையும் தாக்கிக் காயப்படுத்திவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

"-"

**காவலாளியின் கூக்குரலைக் கேட்ட அயலவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்தனர். பொலிஸ் அங்கு வரவே பின்பக்கமாக ஓடித் தப்பியுள்ளனர்.**

கல்லூரி மதிலால் பாய்ந்து உட்சென்ற சிலர் கல்லூரி அதிபரின் அலுவலகம், ஆய்வு கூடம், கணினிச் செயற்பாட்டறை, நூலகம் போன்றவற்றின் கதவுகளை உடைத்து அங்கிருந்த பொருள்களை உடைத்துச் சேதப்படுத்தினர். அவர்கள் உள்நுழைந்ததை அவதானித்த காவலாளி கூக்குரலிடவே அந்த இடத்துக்கு வந்த இருவர் அவரின் வாயைப் பொத்தி தாக்கி அறை ஒன்றில் அவரைத் தடுத்து வைத்துள்ளனர். காவலாளியின் கூக்குரலைக் கேட்ட அயலவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்தனர். பொலிஸார் அங்கு வரவே தாக்குதல் மேற்கொண்டோர் பின்பக்கமாக ஓடித் தப்பியுள்ளனர். காயங்களுக்கு இலக்கான காவலாளியான சங்கரப்பிள்ளை லோகநாதன் (வயது-54) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதிபரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த 10 ஆயிரம் ரூபா பணம் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)



பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலைக்கு நிர்மாணிக்கப்படவுள்ள இருமாடி வகுப்பறைத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத் திட்ட முகாமையாளர் மார்ட்டீன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், பளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் அழைத்து வரப்படுகின்றனர். (வ-9)

# புற்றரைகளாக காட்சியளிக்கும் வயல் நிலங்கள்

வலி.தென்மேற்கு, டிசெ.4
பருவமழை பெய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தால் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பெரும்பாலான விவசாயிகள் காலபோக நெற்செய்கையைக் கைவிட்டுள்ளனர். இதனால் நெல் விளையும் வயல் நிலம் புற்றரையாகக் காட்சியளிக்கின்றது.

இந்த வருடத்துக்கான பருவமழை உரிய காலத்தில் பெய்யாமல் காலம் தவறி பெய்ததால் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் வன்னி விளாங்குளம், கொல்லவிளாங்குளம், அம்பாள்புரம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் பெரும்பாலான விவ சாயிகள் காலபோக நெற்செய்கையைக் கைவிட்டுள்ளனர். (வ-115)

# பராமரிப்பற்ற கட்டடத்தால் டெங்கு பரவும் அபாயம்

பளை, டிசெ.4
பளை நகர்ப் பகுதியில் ஏ-9 வீதியுடன் இணைந்து காணப்படும் பராமரிப்பில்லாத கட்ட டத்தால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் உருவாக்கியுள்ளதாக பிரதேசமக்கள் அச்சம் தெரிவித்தனர்.



பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அருகில் படையினரால் பயன்படுத்தப்பட்ட கட்டடங்கள் அவர்கள் அங்கிருந்து வெளியேறிய பின்னர் பராமரிப்பின்மையால் வெள்ளம் தேங்கி நின்றும் சுற்றாடலில் புற் செடிகள் வளர்ந்த நிலையிலும் காணப்படுகின்றன. இதனால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கட்டடத்தில்1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் தன்னியக்கப் பரிவர்த்தனை நிலையம் இயங்கி வந்ததாகவும் அதன் பின்னர் பலரால் பயன்படுத்தப்பட்டு 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்தக் கட்டடத்தை படையினர் உரியதிணைக்களத்திடம் கையளித்துவிட்டு வெளியேறியுள்ளனர். தற்போது இதுவும் பயன்படுத்தப்படாமல் உள்ளதாகத் தரிவிக்கப்பட்டது. (வ-9)

# 'கோயில் நகரம்' இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.4
வடமாகாண கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் 'கோயில் நகரம்' இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் நடைபெறும்.

பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவருமான பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண கல்வி கலாசார விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசாவும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி வி.பி.சிவ நாதனும் கலந்து கொள்வர்.

இறுவட்டின் முதல் பிரதியை கொனிக்கா கலர்லாப் உரிமையாளர் வீ.சிறிதரன் பெற்றுக் கொள்வார். நூலின் மதிப்பீட்டுரையை பேராசிரியர் ச.சத்தியசீலன் நிகழ்த்துவார்.

கலாநிதி செ.திருநாவுக்கரசு யாழ்.பல்கலைக்கழக ஊடகங்கள் மற்றும் பயிற்சி நிலைய பணிப்பாளர் தே.தேவானந் நல்லூர் கலாசார உத்தியோகத்தர் திருமதி கு.ரஜனி ஆகியோரும் உரையாற்றுவர். (வ-7)

# புற்று நோயாளிகளுக்கு போஷாக்குப் பொதிகள்

அச்சுவேலி, டிசெ.4
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் புற்றுநோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி இருப் போருக்கு உரும்பிராய் லயன்ஸ் கழகம் போஷாக்கு உணவுகள் உள்ளடங்கிய பொதிகளை வழங்கி உதவுகின்றது. வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் புற்றுநோய்க்கான கொடுப்பனவை மாதாந்தம் பெறுவோர் இதற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

போஷாக்கு உணவுப் பொருள்கள் உள்ளடங்கிய உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி. கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

புற்றுநோய் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் வறுமைக் கோட்டு நிலையில் உள்ளவர்கள் தவறாது கலந்துகொண்டு போஷாக்கு உணவுப் பொதியை பெற்றுக்கொள்ளுமாறு வலி. கிழக்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

குறித்த பிரதேச செயலர் பிரிவில் 122 பேர் புற்றுநோய் பாதிப்புக்கான உதவு தொகையை மாதாந்தம் சமூக சேவை பிரி வில் பெற்று வருகின்றனர். (வ-11)

# சண்டிலிப்பாயில் டெங்கு ஒழிப்புப் பணி தீவிரம்

வலி.தென்மேற்கு, டிசெ.4
வடமாகாண சுகாதார அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அறிவுறுத்தலுக்கமைய சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு கிராம மட்டத்தில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு நுளம்புக் கட்டுப்பாட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பருவமழையைத் தொடர்ந்து டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கலாம் என்ற அச்சத்தால் வடமாகாண சுகாதார அமைச்சு கடந்த 29 ஆம் திகதியிலிருந்து இம்மாதம் 5 ஆம்திகதிவரைஏழுதினங்களை டெங்குக் காட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

அதையடுத்து சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார தொண்டர்கள் மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் இணைந்து வீடு வீடாகச் சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதுடன் நுளம்புப் பெருக்கத்தை ஏற்படுத்தும் தடயப் பொருள்களை அவதானித்து அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைளையும் மேற்கொண்டு வருகின்றனர்.


இதேவேளை கடந்த காலங்களில் நுளம்புப் பெருக்கம் காணப்பட்ட இடங்களை முன்னிலைப்படுத்தி நடவடிக்கை எடுத்து வரும் சுகாதாரப் பகுதியினர் கிராம மட்டத்தில் கண்காணிப்புக் குழுக்களை அமைத்துச் செயற்படுத்தி வருகிறார்கள். (வ-115)

# மூடப்படாத வடிகாலால் பயணிப்போர் அச்சத்தில்

*பளை, டிசெ.4*
*பளை நகரப் பகுதியில் வீதி அகலிப்பின் பின்னர் அமைக்கப்பட்ட வடிகால் களுக்கு பாதுகாப்பு மூடிகள் போடப்படாததால் ஏ-9 வீதியில் செல்வோர் அச்சத்துடன் பயணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.*

*பளை மருத்துவமனையிலிருந்து பளை நகரம் வரையான பகுதியின் இருமருங்கிலும் அமைக்கப்பட்ட வடிகால்களுக்கு நீண்ட காலமாக பாதுகாப்பு மூடிகள் போடப்படவில்லை. இதனால் வீதியோரத்தில் நடந்து செல்வோரும் சைக்கிள்களில் செல்வோரும் வடிகாலுக்குள் விழும் அபாயம் காணப்படுகின்றது. ஏ-9 வீதியூடாக நடத்திக் கொண்டு வரப்படும் கால்நடைகள் வீதியோரத்துக்கு செல்ல முயலும்போது வடிகாலுக்குள் வீழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.*

*பிரதான வீதியில் பாதுகாப்பு மூடி போடப்படாததால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளதால் உடனடியாக பாதுகாப்பு மூடிகளை இடுவதற்கு உரிய அதிகாளறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*
*(வ-9)*



# கரவெட்டி பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிப்பு

வடமராட்சி, டிசெ.4
கரவெட்டிப் பிரதேச சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இன்று புதன் கிழமைசபையின் மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள் ளது.

சபை உறுப்பினர்களுக்கு கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான அபிவிருத்திப் பணிகளுக்கு பரிந்துரை செய்யவென நிதி ஒதுக்கப்பட்டும், அவை சீரான முறையில் நடைமுறைப் படுத்தப் படவில்லை என்று உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்துள்ள நிலையில் இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் படவுள்ளது. (வ-8)

# கால்நடை வளர்ப்போருக்கு விசேட பயிற்சி வழங்குக

## *கால்நடை வளர்ப்போர் சங்க முன்னாள் தலைவர் வேண்டுகோள்*

வலி.தென்மேற்கு பிரதேச கால்நடை வளர்ப்போருக்கான விசேட பயிற்சிகளை வழங்க வடமாகாண கால்நடை வைத்திய பணிப்பாளர் முன்வர வேண்டும் என்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் ச.செல்வரத்தினம் வேண்டுகோள்விடுத்துள்ளார். இதுதொடர்பில் அவர் விடுத்த கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:- கடந்த காலங்களுடன் ஒப்பிடுமிடத்து தற்போது கால்நடை வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எனினும் தகுந்த தொழில் நுணுக்க பயிற்சி, உணவு [illegible] தடுப்பு, சந்தை வாய்ப்பு தொடர்பில் கால்நடை வளர்ப்போர் சங்கங்களின் உறுப்பினர்கள் பயிற்சி இன்றி உள்ளனர்.

எனவே கடந்த காலங்களில் [illegible] வழங்கப்பட்ட பயிற்சி போன்று தற்போது போதுமான பயிற்சி வழங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முன்வரவேண்டும்-என்றார். இந்தவிடயம்தொடர்பில் மாகாண கால் நடை பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (வ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நட்பு நாடா இந்தியா?

## *கேள்வி எழுப்புகின்றார் கருணாநிதி*



> **இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவின் எந்தப் பாகத்திலும் பயிற்சிகள் வழங்கக் கூடாது என்பது தமிழக மக்களின் கோரிக்கை.**

சென்னை, டிசெ.4

இந்தியா இலங்கையை நட்பு நாடு என்று கூறிக்கொண்டிருக்கின்றது. ஆனால் இலங்கை இந்தியாவை நட்பு நாடாகக் கருதுகின்றதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்திய இராணுவம் பயிற்சிகளை வழங்குவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது.

"இலங்கைத் தமிழர்கள் பல்லாயிரம் பேரின் உயிர்களைப் பறித்த இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவின் எந்தப் பாகத்திலும் பயிற்சிகள் வழங்கக் கூடாது என்பது தமிழக மக்களின் கோரிக்கை. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் அதையே வலியுறுத்துகின்றன.

இந்தநிலையில் இலங்கைக் கடற்படையினருக்குப் பயிற்சியளிப்பதற்கு இந்தியா மீண்டும் விருப்பம் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தினரால் தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் இன்னல்களுக்கு உள்ளாகி வரும் நிலையில் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா பயிற்சிகள் வழங்குவது ஏற்றுக் கொள்ள முடியாதது.

இந்திய மத்திய அரசு, இலங்கை நட்பு நாடு என்ற ரீதியிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று காரணம் கற்பிக்கின்றது. ஆனால் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு இந்தியாவுக்கு எந்த உரிமையும் இல்லை என்று இலங்கை அமைச்சர் கூறியுள்ளார். இலங்கையை நட்பு நாடு என்று இந்தியா கூறிக்கொண்டிருக்கும் நிலையில், இந்தியாவை நட்பு நாடாக இலங்கை கருதுகின்றதா என்பது கேள்விக்குறியே.

இந்திய மத்திய அரசு, இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சிகள் அளிக்கும் திட்டங்களைக் கைவிட்டு, அதனை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## பிருத்வி - 2 வெற்றிகரமாக சோதனை

புவனேஸ்வர், டிசெ.4

பிருத்வி-2 ஏவுகணை சோதனையை இந்தியா வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் உள்நாட்டுத் தொழில் நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட 'பிருத்வி - 2' ஏவுகணை நேற்றுக் காலை ஓரிசாவில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. (ற)

## ஹெலி ஊழல்: ஆவணங்களை வழங்கியது இத்தாலி

புதுடில்லி, டிசெ.4

வி.வி.ஐ.பி. ஹெலிகொப்டர் ஊழல் விவகாரம் தொடர்பான முக்கிய ஆவணங்களை இந்திய பாதுகாப்பு அமைச்சகத்திடம் இத்தாலி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் போன்ற மிக முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்வதற்காக இத்தாலியின் அகஸ்டா வெஸ்ட்லேண்ட் நிறுவனத்திடம் இருந்து 3,600 கோடி இந்திய ரூபா மதிப்பில் 12 வி.வி. ஐ.பி. ஹெலிகொப்டர்களை வாங்க இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது

இந்த ஒப்பந்தத்தை பெறுவதற்கு 362 கோடி இந்திய ரூபா லஞ்சம் கொடுக்கப்பட்டது என்று குற் றச்சாட்டு எழுந்தது. அது தொடர் பாக அகஸ்டா வெஸ்ட்லேண்ட் நிறுவனத்தின் பிரதான நிறுவன மான பின்மெக்கானிக்காவின் தலைமை செயல் அதிகாரியை இத்தாலிப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தியாவிலும் இப்பிரச்சினை எதிரொலித்ததால், இந்திய மத்திய அரசு ஒப்பந்த முறைகேடு குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது.

அண்மையில் மிலன் நீதிமன்றத்தில், அகஸ்டா வெஸ்ட்லேண்ட் நிறுவனம் தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்றது. அப்போது, இந்தியாவில் நடைபெற்று வரும் விசாரணைக்கு, தங்கள் நாட்டிடம் உள்ள முக்கிய ஆவணங்களை வழங்க இத்தாலி சட்டத்துறை அதிகாரிகள் அனுமதி வழங்கினர்.

அதையடுத்து, முக்கிய ஆவணங்களை இத்தாலி சட்டத்துறை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் வழங்கினர். (ற)

## தேர்தல் விதிமீறல்: 'ஜெ'யிடம் தேர்தல் ஆணையம் விளக்கம்

சென்னை, டிசெ.4

தேர்தல் பரப்புரைகளின்போது விதிகள் மீறப்பட்டன என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் விளக்கம் கோரியுள்ளது இந்திய தேர்தல் ஆணையம்.

ஏற்காடு இடைத்தேர்தல் பரப்புரைகளின்போது முதலமைச்சர் ஜெயலலிதா தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறினார் என்று தி.மு.க. தெரிவித்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்காட்டில் மின்னம்பள்ளி பகுதியில் பரப்புரை செய்த போது முதலமைச்சர் ஜெயலலிதா பல்வேறு சிறப்புத் திட்டங்களை அ.தி.மு.க. அரசு நிறைவேற்றித் தரும் என்று வாக்குறுதி அளித்துள்ளார். இது தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறிய செயலாகும்.

"தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து அரச பொறுப்புகளில் உள்ளவர்கள் வாக்குறுதிகள் அளிக்கக் கூடாது என்று என்பது தேர்தல் ஆணையத்தின் விதிமுறையாகும். எனவே முதலமைச்சர், கல்வி அமைச்சர், கல்வித் துறை செயலாளர், சேலம் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தி.மு.க. தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தது.

குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பாக தமிழக முதலமைச்சர் ஜெயலிலதா உடனடியாக விளக்கமளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. (ற)

## பணக்காரர் பட்டியலில் இருந்து சோனியா நீக்கம்

### *காங்கிரஸின் எதிர்ப்பை அடுத்து*

புதுடில்லி, டிசெ.4

உலக அரசியல் தலைவர்களில் 12ஆவது பெரிய பணக்காரராக காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி திகழ்கின்றார் என்று செய்தி வெளியிட்டிருந்த 'ஹஃபிங்டன்போஸ்ட்' இணையத் தளம், காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்பைத் தொடர்ந்து சோனியாவின் பெயரை அந்தப் பட்டியலில் இருந்து நீக்கி உள்ளது.

உலக அரசியல் தலைவர்கள் 20 பேர்களது சொத்து மதிப்பு எவ்வளவு என்பது குறித்த பட்டியலை'ஹஃபிங்டன்போஸ்ட்' என்ற ஆங்கில இணைய தளம் நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்தது.


அதில் சோனியா காந்தியின் சொத்து மதிப்பு 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள், அதாவது இந்திய மதிப்பில் 12 ஆயிரம் கோடி ரூபாய் என்றும், இங்கிலாந்து ராணி 2ஆவது எலிசபெத்தைக் காட்டிலும் சோனியா முன்னணியில் இருக்கின்றார் என்றும் கூறப்பட் டிருந்தது.

2009 ஆம் ஆண்டு நாடாளுமன்றதேர்தலின்போது சோனியா காந்தி தாக்கல் செய்த வேட்பு மனுவில், அவரது சொத்து மதிப்பு 1.38 கோடி இந்திய ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் தமக்கு இந்தியாவில் சொந்த காரோ அல்லது வீடோ கிடையாது என்றும், இத்தாலியில் மட்டும் குடும்பப் பரம்பரை வீடு உள்ளதாகவும், அதன் மதிப்பு 18.2 லட்சம் இந்தியரூபாய் என்றும் சோனியா காந்தி தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் மேற்கூறிய இணையத்தளம் வெளியிட்ட தகவல் ஊடகங்களில் பரபரப்பாக பரவியதை தொடர்ந்து, காங்கிரஸ் கட்சி கோபத்துடன் அந்தச் செய்திக்கு மறுப்பு வெளியிட்டது. இது சோனியாவின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் முயற்சி என்றும், அவர் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வருவதாகவும் காங்கிரஸ் கட்சி கூறியிருந்தது.

எதிர்ப்புகளைத் தொடர்ந்து மேற்கூறிய பட்டியலிலிருந்து சோனியா காந்தியின் பெயரை 'ஹஃபிங்டன்போஸ்ட்' இணைய தளம் நீக்கி உள்ளது.

அது தொடர்பாக ஏற்பட்ட குழப்பத்திற்காக வருந்துவதாகவும் அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)



இந்தியாவுக்கு 6 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜப்பான் மன்னர் அகிடோ மற்றும் ராணி மிசிகோ ஆகியோர் புதுடில்லியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். (ற)

## எனது தலைமையை ஏற்றால் தேர்தல் கூட்டணிக்குத் தயார்

### *தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூறுகின்றார்*



புதுடில்லி, டிசெ.4

தமது தலைமையை ஏற்கும் கட்சியுடன் மாத்திரமே கூட்டணி வைத்துக்கொள்வேன் என்று தெரிவித்துள்ளார் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த்.

தே.மு.தி.க. காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி குறித்துப் பேசி வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது.

"தமிழகம் மற்றும் தமிழர்களின் நலனில் அக்கறையுள்ள எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அது பா.ஜ.க.வோ அல்லது காங்கிரஸோ, அவர்கள் எனது தலைமையை ஏற்க வேண்டும்.

புதுடில்லியில் வாழும் தமிழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலை உள்ளது. அவர்களை நாங்கள் சந்தித்த பிறகு மற்ற கட்சிகள் தமிழில் சுவரொட்டிகள் ஒட்டிப் பரப்புரை செய்யும் நிலை உருவாகியுள்ளது.

இந்தத் தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது முக்கியம் அல்ல. இங்குள்ள தமிழர்கள் படும் கஷ்டங்களை அறிந்தே தேமுதிக போட்டியிடுகிறது. அதன்மூலம் அவர்களுக்கு ஆதரவுக் குரல் தர நாங்கள் இருக்கிறோம்என்பதை உணர்த்துவதற்காகவே இங்கு போட்டியிடுகிறோம்.

தமிழகத்தில் மின்வெட்டு அதிகரித்து விட்டது. கருணாநிதி மற்றும் ஜெயலலிதா ஆகிய இருவருமே தமிழர்களுக்காக எந்த நல்ல காரியத்தையும் செய்யவில்லை. ஏற்காடு இடைத்தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என அங்குள்ள மக்களுக்குத் தெரியும். அது பற்றி நான் எதுவும் சொல்லத் தேவையில்லை" என்று தெரிவித்தார். (ற)

## தெலுங்கானா மாநிலத்துக்கு புதிதாக இரு மாவட்டங்கள்

### *இந்திய மத்திய அரசு முடிவு*

ஹைதராபாத், டிசெ.4

புதிதாக உருவாக்கப்படவுள்ள தெலுங்கானா மாநிலத்தில் புதிதாக இரு மாவட்டங்களை இணைப்பதற்கு இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ராமயசீமா பகுதியில் உள்ள அனந்தப்பூர், கர்னூல் ஆகிய இரு மாவட்டங்களை மத்திய அரசு தெலுங்கானா மாநிலத்துடன் இணைக்க முடிவு செய்துள்ளது என்று தெரியவருகின்றது. அதனால் தெலுங்கானா விவகாரம் மேலும் சிக்கலடைந்துள்ளது.

தெலுங்கானா மாநிலத்தின் எல்லைகளை உருவாக்குவது தொடர்பாக இந்திய மத்திய அரசு தீவிர ஆலோசகைளை நடத்தி வருகின்றது. ஹைதராபாத் உட்பட தெலுங்கானாவில் உள்ள 10 மாவட்டங்கள் மற்றும் ராயலசீமாவை சேர்ந்த அனந்தப்பூர், கர்னூல் மாவட்டங்களை இணைத்து 'ராயல தெலுங்கானா' என்ற பெயரில் மாநிலம் அமைக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி ஆகியோர் புதிதாக இரண்டு மாவட்டங்களை தெலுங்கானாவுடன் இணைப்பதில் உறுதியாக உள்ளனர் என்று தெரியவருகின்றது. தெலுங்கானாவில் ராஷ்டிரிய சமிதியின் செல்வாக்கைக் குறைக்கும் முயற்சியாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்று கூறப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நோய் பரப்பிய மருத்துவருக்கு 39 ஆண்டுகள் சிறை

நியூயோர்க், டிசெ.4
ஊசி மூலம் மஞ்சள் காமாலை நோயைப் பரப்பிய மருத்துவர் ஒருவருக்கு 39 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது அமெரிக்க நீதிமன்றம்.
அமெரிக்காவில் உள்ள நியூஹம்ப்ஷியர் பகுதியைச் சேர்ந்தவர் டேவிட் கியாட் கோவ்ஸ்கி (வயது-34). இருதய நோய் மருத்துவரான இவர் 3 மாகாணங்களில் 18 மருத்துவமனைகளில் பணி புரிந்தார். 2011ஆம் ஆண்டு இவர் 46 பேருக்கு மஞ்சள் காமாலை நோயை பரப்பினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், அவர் தடை செய்யப்பட்ட மருந்துகளைப் பலருக்குச் செலுத்தியமையும், பல மருந்துகளை திருடியமையும் தெரியவந்தது. இவர் வலி நிவாரண மருந்துகளைத் திருடி அதனுடன் மதுசாரத்தைக் கலந்து கெட்டுப்போன ஊசி மூலம் நோயாளிகளின் உடலில் செலுத்தினார். அதனால்பலர்மஞ்சள்காமாலை, கல்லீரல் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டனர்.
அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு 39 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது அமெரிக்க நீதிமன்றம். (ற)


டேவிட் கியாட்

# பேச்சுகளுக்குத் தயார் பதவி விலக முடியாது

## தாய்லாந்துப் பிரதமர் திட்டவட்டம்


பொலிஸாருக்கு எதிராக தாக்குதலில் ஈடுபடும் அரச எதிர்ப்பாளர்கள்.

பாங்ஹொக், டிசெ.4
அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருபவர்களுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறேன். ஆனால் பதவி விலகுவதற்குத் தயாரில்லை என்று தெரிவித்துள்ளார் தாய்லாந்து பிரதமர் சினவத்ரா.
தாய்லாந்தில் பெண் பிரதமர் யுங்லுக் சினவத்ரா தலைமையிலான ஆட்சி நடைபெறுகிறது. அவர் அண்மையில் கொண்டு வந்த பொதுமன்னிப்பு சட்டத் திருத்தத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.
ஆர்ப்பாட்டங்கள் காரணமாக இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர். 45 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அதனால் பாங்ஹொக்கின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.
இந்தநிலையில் ஆர்ப்பாட்டங்களில் பங்கெடுத்திருக்கும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுதீப், "பிரதமர் பதவியிலிருந்து விலக 2 நாள்கள் கெடு விதிப்பதாகவும், ஆட்சி அதிகாரத்தை மக்கள் மன்றத்திடம் ஒப்படைக்கவேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சினவத்ரா இருநாள் காலக்கெடுவை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.
"கலவரத்தை அடக்கி அமைதியை நிலைநாட்டத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன். கலவரத்தைக் கட்டுபடுத்த இராணுவம் தயார் நிலையில் உள்ளது. ஆனால் பதவியை விட்டு விலகமுடியாது. அரசமைப்புச் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்படாத மக்கள் மன்றத்திடம் பொறுப்பை அளிக்க முடியாது. அதற்குச் சட்டத்தில் இடமில்லை. அனைவருடனும் நிபந்தனைகள் இன்றி பேச்சு நடத்தத் தயாராக உள்ளேன்" என்று தெரிவித்துள்ளார்.
பிரதமரின் இந்த அறிவிப்பால் தாய்லாந்தில் மேலும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (ற)


தாய்லாந்துப் பிரதமர்

# ஐஸ்லாந்தில் சூடு

## ஒருவர் உயிரிழப்பு: அந்தநாட்டு வரலாற்றில் முதற் சூட்டு சம்பவம்

ரெய்க்ஜவிக், டிசெ.4
ஐஸ்லாந்து நாட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பம் ஒன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஐஸ்லாந்து நாட்டு வரலாற்றில் முதன்முறையாக நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமாக இது கருதப்படுகின்றது.
உலகிலேயே மிகக் குறைவான மக்கள் (3 லட்சத்து 22 ஆயிரம்) தொகையை கொண்ட நாடான ஐஸ்லாந்து, குற்ற விகிதங்கள் மிகவும் குறைவாக கொண்ட நாடு என்ற சிறப்பை பெற்றுள்ளது.
இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முதன் முறையாக அங்கு துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று நடந்துள்ளது. அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ஐஸ்லாந்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்துத் தெரிவித்த பொலிஸ் அதிகாரி ஹெரால்டர் ஜோஹநெசன்,
" கிழக்கு ரெய்க்ஜவிக்கில் உள்ள குடியிருப்பு வளாகம் ஒன்றில் வசித்துவந்த 50 வயது மதிக்கத்தக்க மனிதன் ஒருவன் நேற்றுமுன்தினம் தன்னுடைய வீட்டில் பலமுறை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளான். அதில் ஒருவர் உயிரிழந்தார். அது குறித்து எமக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குடியிருப்பில் இருந்தவர்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர்.
அதன்பின்னர் துப்பாக்கிச் சூடு நடத்தியவருடன் தொடர்புகளை ஏற்படுத்தி சமாதானப்படுத்த முயன்றோம். எனினும் அது பயனளிக்கவில்லை. அதையடுத்து அவன் சுடுவதைத் தடுக்கும் முயற்சியாக அவர்கள் அவன் வீட்டு ஜன்னல் வழியே வாயுத்திரவத்தைப் பிரயோகித்தோம்.
அதையடுத்து அந்த மனிதன் ஜன்னல் வழியே வெளியே சுட ஆரம்பித்தான். வேறுவழியில்லாது பொலிஸ் குழு ஒன்று அவனது வீட்டுக்குள் நுழைய முயற்சித்தது. அப்போது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒரு அதிகாரியின் கவசத்திலும், மற்றொருவரின் ஹெல்மெட்டிலும் குண்டுகள் தாக்கின. ஆனால் யாருக்கும் அதில் பாதிப்பு ஏற்படவில்லை. அதிரடியாக உள்ளே நுழைந்த பொலிஸ் குழு குறித்த மனிதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அவனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளான்.
துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் குறித்துத் தற்போது பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# சிரிய ஜனாதிபதி போர்க்குற்றவாளி

## ஐ.நா. சபை ஆணையாளர் நவிப்பிள்ளை தெரிவிப்பு



ஜெனிவா, டிசெ.4
சிரிய ஜனாதிபதி ஒரு போர்க் குற்றவாளி என்று தெரிவித்துள்ளார் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.
சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத் மற்றும் சிரிய உயரதிகாரிகள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
"சிரிய ஜனாதிபதி மீது போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. அது தொடர்பான விசாரணைகளுக்காக சாட்சியங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன" என்று இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போது நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டினார்.
சிரியாவின் ஜனாதிபதி அஸாத் மீது ஐ.நா. சபையால் நேரடியாக போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவையாகும். ஐ.நா. சபையின் மதிப்பீட்டின்படி சிரிய உள்நாட்டு போரில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். (ற)

# உக்கிரமடைகின்றது உக்ரைன் போராட்டம்

## ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் வீதிகளில் இறங்கினர்



கீவ், டிசெ.4
ஐரோப்பிய யூனியன் அமைப்பில் உக்ரைனை இணைக்க வலியுறுத்தி நடத்தப்பட்டு வரும் போராட்டங்களில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இணைந்துள்ளனர். ஐரோப்பிய யூனியனில் உக்ரைன் இணைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட, அந்த நாட்டின் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் மறுத்ததை அடுத்தே மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. அந்தப் போராட்டங்களை அந்த நாட்டு எதிர்க்கட்சிகள் ஊக்குவித்து வருவதுடன், நாளுக்கு நாள் புதிய போராட்டங்களையும் அறிவித்து வருகின்றன. போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் ஜனாதிபதி யானுகோவிச் பதவி விலக வேண்டும் அல்லது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற கோரிக்கைகளை விடுத்து வருகின்றன. இந்த நிலையில் கீவ் நகரின் சுதந்திரச் சதுக்கத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதையடுத்து ஆயிரக்கணக்கான பொலிஸார் சுதந்திரச் சதுக்கத்தில் குவிக்கப்பட்டுள்ளனர். போராட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றுள்ளன. அதையடுத்து பொலிஸார் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
அதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவி வருகின்றது. அதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸாரும், போராட்டக்காரர்கள் பலரும் காயமடைந்தனர். (ற)

# சீன நாட்டுக்காக உளவு; கனேடிய பிரஜை கைது

றொறண்றோ, டிசெ.4
சீன நாட்டுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டில் கனேடிய பிரஜையொருவர் அந்தநாட்டுப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கனடாவின் போர்க் கப்பல் கொள்வனவு தந்திரோபாயங்கள் தொடர்பான தகவல்களை சீனாவிற்கு விற்பதற்கு குறித்த சந்தேகநபர் முயற்சித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கப்பல் உருவாக்கத்துடன் தொடர்புடைய நிறுவனமொன்றில் கைது செய்யப்பட்டுள்ள 53 வயதான குவாங் என்ற நபர் பணியாற்றிவந்துள்ளார் என்று கூறப்படுகின்றது
ஒன்ராரியோவைச் சேர்ந்த குவாங்கின் செயற்பாடுகளில் சந்தேகம் ஏற்பட்டதை தொடர்ந்து றொரன்றோவில் வைத்து அவர் கனேடிய பொலிஸரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக காணப்படும் பட்சத்தில் அவருக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# சீனப் பிராந்திய நாடுகளிடையே பதற்றம்

## விரைகின்றார் அமெரிக்கத் துணை ஜனாதிபதி

நியூயோர்க், டிசெ.4
சீனாவின் சர்ச்சைக்குரிய வான் பாதுகாப்பு மண்டல அறிவிப்பை அடுத்து அதன் பிராந்திய நாடுகளான ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கிடையே பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜோ பிடன் இந்த நாடுகளுக்கான சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.
இது குறித்துவெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், "கிழக்கு ஆசியப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்த அமெரிக்காவின் கவலையை துணை ஜனாதிபதி ஜோ பிடன் சீனாவிடம் எடுத்துரைப்பார்.
ஆசிய பசிபிக் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டும் சக்தியாக அமெரிக்கா தொடர்ந்து செயலாற்றும் என்பதை உறுதிப்படுத்துவதே இந்தச் சுற்றுப் பயணத்தின் நோக்கம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த மாத இறுதியில் சீனா வெளியிட்ட அறிக்கையில், "கிழக்குச் சீனக் கடல் பகுதியில் ஜப்பான் உரிமை கொண்டாடி வரும் பகுதிகளையும் உள்ளடக்கியே வான் பாதுகாப்பு மண்டலம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் பறக்கும் விமானங்கள் சீனாவின் அனுமதியைப் பெறவேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது.
அதற்கு ஜப்பானும், அமெரிக்காவும் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தன. அத்துடன் சீனாவின் உத்தரவைமீறி அமெரிக்கா தனது 'பி-52' போர் விமானங்களை சர்ச்சைக்குரிய பகுதிகளில் பறப்பில் ஈடுபடுத்தியது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சிப் பெட்டி விழுந்து சிறுமி சாவு

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி மீது தொலைக்காட்சிப் பெட்டியும் அதன் நிறுத்தியும் சரிந்து விழுந்ததில் சிறுமி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பெரிய கல்லாறில் இடம்பெற்றுள்ளது. பெரியகல்லாறைச் சேர்ந்த என்.ஆரக்ஷியா என்ற 4 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சிறுமி வீட்டினுள்ளே விளையாடிக் கொண்டிருந்தபோது தொலைக் காட்சிப் பெட்டி அதன் நிறுத்தியுடன் சேர்ந்து சரிந்து சிறுமி மீது விழுந் துள்ளது. சிறுமி மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (ச)

# எந்த அழுத்தங்களுக்கும் இலங்கை அடிபணியாது

## காலக்கெடுவைத் தூக்கி வீசினார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு,டிசெ.4

"மனித உரிமை விவகாரம் இன்று அரசியல் ஆயுதமாக மாற்றப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் காலக்கெடுவை ஏற்று அச்சுறுத்தல்களுக்கு அடிபணிவதற்குஇலங்கை ஒருபோதும் தயாரில்லை" என்று நாடாளுமன்றில் கூளுரைத்தார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜனாதிபதி செலவின தலைப்புகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"புலிகள் அமைப்பு போரில் தோல்வியடைந்திருந்தாலும் அதன் அரசியல் ரீதியிலான செயற்பாடுகள் இன்னமும் முன்னெடுக்கப்படுகின்றன. புலம்பெயர் அடிப்படைவாத குழுக்களிடம் நிதிப்பலம் இருக்கின்றது.

பொதுநலவாய மாநாடு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க சிலகருத்துகளை முன்வைத்திருந்தார்.

குறித்த அமைப்பில் தற்போது 53 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆனால், சகல மாநாடுகளிலும் அனைத்து தலைவர்களும் பங்கேற்பதில்லை. ஜனாதிபதிகள், உப ஜனாதிபதிகள், பிரதமர்கள் என 32 பேரும் இலங்கையில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்றிருந்தனர். அண்மைக் காலங்களில் நடைபெற்ற மாநாடுகளுடன் ஒப்பிடுகையில் இது சாதகமான பெறுபேறாகும்.

பொதுநலவாய மாநாட்டின் அமைச்சர்கள் மட்ட நடவடிக்கைக் குழு விரைவில் நடைபெறவுள்ளது. கென்யா நாட்டின் சுதந்திர தினத்தன்று இந்த நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நடைபெறும். இதில் ஜனாதிபதியும் பொதுநலவாய அமைப்பின் தலைவர் என்ற அடிப்படையில் பங்கேற்பார்.

பொதுநலவாய அமைப்பின் அடுத்த இரண்டுவருடங்களுக்கான நிகழ்ச்சி நிரல்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் அங்கத்துவ நாடுகளுடன் கலந்துரையாடப்படும். மனித உரிமைப் பிரச்சினை உங்களுக்கு மட்டுமல்ல, எமது நாடுகளுக்கும் இருக்கின்றன என்று பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வந்திருந்த பிரதிநிதிகள் சிலர் குறிப்பிட்டனர்.

இன்று மனித உரிமை விவகாரம் அரசியல் ஆயுதமாக மாறியுள்ளது. இதனால், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளன. இது தொடர்பில் பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் வளர்முக நாடுகளும் கவலை வெளியிட்டுள்ளன.

எனவே, ஏதாவது ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் பிறிதொரு நாடு தலையிடுவதை எவரும் விரும்புவதில்லை. அந்த அடிப்படையில் எமக்கு விதிக்கப்படும் காலக்கெடுக்களை நாம் நிராகரிக்கின்றோம்".- என்றார். (ச-சி)

**பணியாளர்கள் தேவை**

பருத்தித்துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் விடுதிக்கு (Guest House)தங்கி நின்று பணிபுரிவதற்கு ஆண்கள் தேவை. (40796)(12.3.6)

தொடர்பு: 077 766 7715

**பணிப் பெண் தேவை**

கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கு தங்கியிருந்து பணிபுரிவதற்குப் பண்பான பெண் பணியாளர் தேவை. (40797)(12.3.6)

தொடர்பு: 077 386 6250

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் 2014 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

01. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 11.12.2013 நண்பகல் 12 மணிவரை
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 12.12.2013 முற்பகல் 10 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 12.12.2013 முற்பகல் 11 மணி.
04. கேள்வி தொகையின் 2/3 பகுதியைச் செலுத்தி ஒப்பந்தம் செய்யவேண்டிய இறுதித்திகதி : 19.12.2013

**2014 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல. | குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்பத்திரக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) (இதர வரிகள் தவிர) |
|---|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக்கடை இல.01 | 1,400,000.00 | 14,000.00 | 1,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை இல.02 | 1,400,000.00 | 14,000.00 | 1,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை இல.01 | 600,000.00 | 6,000.00 | 1,000.00 |
| 04 | ஆட்டிறைச்சிக் கடை இல.02 | 600,000.00 | 6,000.00 | 1,000.00 |
| 05 | கோழி இறைச்சிக் கடை இல.01 | 850,000.00 | 8,500.00 | 1,000.00 |
| 06 | கோழி இறைச்சிக் கடை இல.02 | 850,000.00 | 8,500.00 | 1,000.00 |

**குறிப்பு:** நகராட்சிமன்றத்தின் கோழி இறைச்சிக் கடைகளிலிருந்து 01 km சுற்று வட்டராத்திற்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.மேலதிக விவரங்களை 06.11.2013 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பார்வையிடவும்.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
03.12.12013

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(சி.2796) (45.6.3)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்)

சந்தைகள், இறைச்சிக்கடைகள், என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான

### மீள்கேள்வி அறிவித்தல் 2014

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 17.12.2013 செவ்வாய்க்கிழமை பி.ப 3.00மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 18.12.2013 புதன்கிழமை நண்பகல் 12.00மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 18.12.2013 புதன்கிழமை பி.ப 2.00மணி

| இல | குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 25,000.00 | 1000.00 | 1000.00 |
| 02 | இறால் மடம் சந்தை | - | 1,000.00 | 250.00 | 250.00 |
| 03 | மல்லாகம் ஆட்டிறைச்சிக்கடை | 1050.00 | 40,000.00 | 1000.00 | 1000.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி சந்தை கோழிக்கடை இல - 06 | 650.00 | 50,000.00 | 1000.00 | 1000.00 |
| 05 | அளவெட்டி மலைவேம்படி சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல - 07 | 650.00 | 40,000.00 | 1000.00 | 1000.00 |
| | தெல்லிப்பழை உப அலுவலகம் | | | | |
| 06 | கூத்தன்சீமாச் சந்தை | - | 30,000.00 | 1000.00 | 1000.00 |
| | மயிலிட்டி உப அலுவலகம் | | | | |
| 07 | வீமன்காமம் பொதுச்சந்தை | - | 30,000.00 | 1000.00 | 1000.00 |

குறிப்பு :
- மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவங்களை மேற்படி உப.அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தை, கூத்தன்சீமா சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- மல்லாகம் சந்தை, அளவெட்டி மலைவேம்படி சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் கோழிஇறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
04.12.2013

(சி.14234) (6.3)

சோமசுந்தரம் சுகிர்தன்.
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை (மல்லாகம்).

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.நகருக்கு அண்மித்ததாக நல்ல சுற்றுச்சூழல் நிலையில் இருக்கக்கூடிய இரண்டு படுக்கையறைகளைக் கொண்ட வீடு ஒன்று தைமாதத்திலிருந்து தேவைப்படுகின்றது.

தொடர்பு: 077 574 8095

(40799)(12.3.6)

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்.நகரில் தமது வணிகநடவடிக்கைகளைத் தொடங்க இருக்கும் மிகப் பிரபல்யமான வலையமைப்பைக் கொண்ட இரண்டு நிறுவனங்களுக்கு முகாமைத்தர ஊழியர்கள் தேவைப்படுகின்றனர். வயது எல்லை 18 - 28 ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் உங்களது சுயவிவரங்களுடன் 7ஆம், 8ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) நேரில் வரவும்.

இல.19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 021 222 1422/1423

**JAFFNA COLLEGE**

Jaffna College carol Service is postponed due to unavoidable circumstances to 8th December 2013 at 4.00 p.m.

- Principal.

(C/14238)(2.6.3)

**தென் இந்திய யாத்திரை**

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000ம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை நலன்கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.

இது தமிழ்நாடு, ஆந்திர, பாண்டிச்சேரி ஆகிய மூன்று மாநிலங்களுக்கூடான யாத்திரை சேவை

நாட்கள் 12 யாத்திரீகர்கள் 10 பேர் ஆரம்பம் 19.12.2013 நிறைவு : 31.12.2013

தரிசிக்கும்ஆலயங்கள்:மலைக்கோட்டைவிநாயகர், காஞ்சிகாமாட்சிஅம்மன்,பஞ்சபூதத்திருத்தலங்கள், ஆறுபடைவீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, உத்திரகோசமங்கை, தஞ்சாவூர், அலமேலுமங்கா, 9நவக்கிரக ஆலயங்கள் தனித்தனியாக ஆஞ்சநேயர்,மேல்மருவத்தூர், திருச்செந்தூர், பழனி,திருத்தணி,சுவாமிமலை,பழமுதிர்சோலை, திருப்பரம்குன்றம், அழகர்கோயில், மதுரை மீனாட்சி, நவபாஷாணம், உட்பட 35 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

எமது சேவை, விமான டிக்கட், மூன்று வேளை உணவு, 4 மணிக்கு டீ, 2பேருக்கு குளியலறையுடன் கூடிய ரூம்கள், A.C. வாகனம், நாளொன்றுக்கு 1 லீற்றர் குடிநீர், 1நாள் சென்னையில் ஷொப்பிங், விருப்பமுடையவர்கள் விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க.

இந்த யாத்திரைகள் தோஷ நிவர்த்தி செய்பவர்கள் வயதானவர்களின் மன ஆறுதலுக்காகவும், ஏனையோரின் இந்திய ஆலய தரிசனத்திற்குமான குறைந்த கட்டணத்திலான சேவை

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்

Office : City Center Shopping Complex, 3rd Floor, No. 59,C 3/3, Sea Street, Colombo - 11.

Tel : 0777 680102, 0724 - 222989, 0777 362154 Web : www.sridevipilgrims.com

சென்ற யாத்திரைகளில் கலந்துகொண்டவர்கள்

மட்டக்களப்பில் K. ராஜகோபால் - Tel : 065 3653719

யாழ்ப்பாணத்தில் M. குமாரசிங்கம் - 021 3206314, 075 6144476

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதியோரக் குழிகளால் வர்த்தகர்களுக்கு சிரமம்



மல்லாவி நகர்ப் பகுதியில் நடை பாதை அமைக்கவென வெட்டப்பட்ட குழிகளினால் அப்பகுதி கடைத்தொகுதிகளின் வர்த்தகர்கள் பல இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
நகர்ப் பகுதியின் குறித்த வீதியின் புனரமைப்பு பணிகள் இடம் பெற்று வரும் நிலையில் மல்லாவி நகர்ப் பகுதியில் வீதியோரமாக வெட்டப்பட்ட அகலக் குழிகள் நீண்ட நாள்களாக மூடப்படாமல் காணப் படுகின்றன. இதனால் தற்போது பெய்து வரும் மழையினால் குழிகளில் மழை நீர் தேங்கிக் காணப் படுவதால் வர்த்தகர்கள் பெரும் சிரமமடைந்துள்ளனர். (ஐ-415)

## காட்டேரிக் களைகளால் நெற்செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4
கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளம், வன்னேரிக் குளம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்பயிர் செய்கைகளில் காட்டேரிக் களையான பன்றி நெல்லின் தாக்கம் கடந்த ஆண்டுகளை விட தற்போது அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் விளைச்சலில் பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
நெற் செய்கை நிலங்களின் தாழ்நிலப் பகுதிகளில் அதிகளவில் காணப்படும் பன்றி நெல்லைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இத்தகைய பன்றி நெல் இனம் சாதாரண நெல்லின் ஒத்த தன்மையை கொண்டிருப்பதனால் அதனை இலகுவில் அடையாளம் காண்பதோ அல்லது களை நாசினிகள் மூலம் கட்டுப்படுத்தவோ முடியாத நிலை காணப்படுகிறது.
இக் களையை நாற்றுப் பருவத்தில் இனம் காண முடியாத போதும் மட்டம் வெடிக்கும் பருவத்தில் அதிக மட்டங்களை கொண்டு செழிப்பாக வளருவதன் மூலம் இவற்றை இனம் காணமுடியும் என்றும், அப்போது கையினால் பிடுங்கியோ அல்லது பயிர் செய் கைகளுக்கு முன்னர் உரிய பண்படுத்தல்கள் மூலமோ கட் டுப்படுத்த முடியும் என்றும் கிளிநொச்சி மாவட்ட விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் பாதுகாப்பு பிரிவி னால் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-6)

# கிராஞ்சி பிரதேச மக்கள் அடிப்படை வசதியின்றி அவதி

துணுக்காய், டிசெ.4
கிளிநொச்சி, பூநகரி, கிராஞ்சிப் பகுதியில் அடிப்படை வசதிகள், போக்குவரத்து வீதிகள் சீரின்மை காரணமாக சுமார் 442 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 600 பேர் வரையில் பல்வேறு சிரமங் களை எதிர்நோக்கிவருகின்றனர்.
கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள கே. என்/75 கிராம அலுவலர் பிரிவில் தற்போது 442 இற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 654 பேர் வாழ்ந்து வருகின்றனர்.
குறித்த கிராம அலுவலர் பிரிவில் உள்ள வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் ஆகிய கிராமங்களில் உள்ள பிரதான வீதிகள் மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றன. உள்ளக வீதிகளும் பல வருடங்களாகப் புனரமைக்கப்படவில்லை.
வீதிச் சீரின்மை காரணமாக சீரான போக்குவரத்து வசதிகளும் இல்லை. இதனால் இங்குள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் வேறு தேவைகளுக்கு வெளி இடங்களுக்குச் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
இங்குள்ள கூடுதலான குடும்பங்களில் அதிகம் கடற்றொழிலையே வாழ்வாதாரத் தொழிலாக கொண்டுள்ளதுடன், தொழில் சார் உபகரணங்கள் இன்றியும் பெரும் சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். (ஐ-6)

# துணுக்காய் பிரதேசத்தில் 16 உள்ளக வீதிகள் சேதம்

### *பயணிப்பதில் மக்கள் சிரமம்*

துணுக்காய், டிசெ.4
துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட 16 உள்ளக வீதிகள் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.
"ஜெகா" நிதியுதவியுடன் இந்த வீதிகளை திருத்துவதற்கு முன்மொழியப்பட்டதாகவும் எனினும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் அதற்கான வேலைகளை ஆரம்பிக்காததால் பணிகள் கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேசத்துடன் மல்லாவியை இணைக்கும் பாரதி நகர் பிரதான வீதி, முதலாம் யூனிட்



மல்லாவி மத்திய கல்லூரி வீதி உட்பட பல வீதிகள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தற்போது பருவ மழை பெய்து வருவதால் மக்கள் இவ் வீதியூடாக போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.
எனவே தமது சிரமத்தைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் உள்ளக வீதிகளைத் திருத்தித் தர முன் வர வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-415)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபர் பதவிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
அதிபர் தரம் இரண்டு மற்றும் மூன்று ஆகிய தகுதியைக் கொண்டவர் கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப் பங்களை வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்கு மாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-18)

## புலமை பரிசில் பாராட்டு நிகழ்வுகள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வு வவுனியா பம்பைமடு செக்கடிப்புலவு அ.த.க. பாடசாலையில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.
முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் இராஜ்குமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) லதாங்கி அம்பிகைபாலனும் கௌரவ விருந்தினராக 'காகிள்ஸ்' நிறுவனத்தின் முகாமையாளர் ஏ.வி. பீடிலும் சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மு.பாலசிங்கமும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-421)

◆◆◆

நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பாராட்டு விழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அன்ரன் சோமராஜா பிரதம விருந்தினராகவும், வவுனியா கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி நடராஜா சிறப்பு விருந்தினராகவும், வவுனியா தெற்கு கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி எம்.தேவசேனா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.
மேலும் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.விஜயகாந்தன், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ப.தர்மலிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ப.தர்மலிங்கம் உட்படப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
இந்த நிகழ்வில் 2013 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படுவதுடன், அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (எ-402)

## சிதம்பரபுரம் வைத்தியசாலைக்கு புதிய மருத்துவ ஆய்வு கூடம்

யாழ்ப்பாணம், டிசெ.4
வவுனியா சிதம்பரபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு புதிய மருத்துவ ஆய்வு கூடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.
கிராமப்புற வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சினால் இந்த வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது.
1992 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து சிதம்பரபுரம் பகுதியில் தங்கிய மக்களின் வைத்திய சேவை கருதி அமைக்கப்பட்ட இந்த வைத்திய சாலை ஆய்வு கூட வசதிகள் இன்றி இயங்கி வந்தது.
இந்த நிலையில் குறித்த வைத்தியசாலையில் ஆய்வு கூடம் அமைக்கும் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது.
மேற்படி ஆய்வு கூடத்தில் இரத்தம், சலம், சளி போன்றவை ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை இந்த வைத்தியசாலையில் நாள் ஒன்றுக்கு 70 தொடக்கம் 100 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ-42)

## வெள்ளாங்குளம் வீதி புனரமைப்பு துரிதம்

துணுக்காய், டிசெ.4
மாங்குளத்தில் இருந்து வெள்ளாங் குளம் செல்லும் பி 269 வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு வருகிறது. தற்போது வீதியின் 20 கிலோ மீற்றர் வரையான தூரம் காப்பெற் இடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.
சுமார் 40 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதியில் பாலங்களும், மதகுகளும் அமைக்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதில் எஞ்சியுள்ள வீதியின் புனரமைப்புப் பணிகள் தற்போது பெய்து வரும் மழை காரணமாக தாமதமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்திய நிறுவனத்தின் மூலம் கடந்த இரண்டு வருடமாக இவ் வீதி புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-415)




BSc (Hons) / BA (Hons) / BEng (Hons) / LLB (Hons)
BTEC HND
Full Time / Part Time
Foundation Course
O/L
After A/L

இலங்கையில் சர்வதேச உயர்கல்வி கற்கை நெறிகளை வழங்கும் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனம் எனும் Edexcel, UK நிறுவனத்தின் சான்றிதழுடன் வெற்றி நடைபோடும் BCAS Campus வழங்கும் Access Programme (Degree Foundation) எனும் பாட நெறியினை GCE A/L பரீட்சையினை எழுதி முடித்திருக்கும் மாணவர்களாகிய உங்களுக்கு கணனி, ஆங்கிலம் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றில் திறமைகளை விருத்தி செய்வதற்கான முறையான பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதோடு 6 சர்வதேச வரவேற்பை பெற்ற சான்றிதழ்களையும் இப்பயிற்சி நெறி முடிவில் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்பும் கிடைக்கின்றது.
அத்தோடு குறுகிய காலத்திற்குள் UK, USA, Australia, Canada போன்ற நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களினூடாக (Hons) Degree பட்டப்படிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை இதன் மூலம் இலகுவாக கிடைக்கிறது.

IELTS
Dip. in English

கொழும்பிலிருந்து வருகை தரும் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஐரோப்பிய ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில் முழுமையான ஆங்கிலச் சூழலில் பாடநெறிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன | FREE Study Pack
உயர்கல்வி மற்றும் உயர்தரத்திற்கு பின்னரான கற்கை நெறி தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கு BCAS Jaffna Campus இனை நாடுங்கள்.

5 Certificates by BCAS | 2 Certificates from Edexcel, UK

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus (C/14243)(2.6)
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910 | E: info@bcas.lk
தொடர்புகளுக்கு 0777 102131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்பொழுது ஏற்பட்டுள்ள கடற்கொந்தளிப்பால் அம்பாறை மாவட்டத்திலுள்ள மீனவர்கள் தமது படகுகளை பாது காப்பான இடங்களை நோக்கி அப்புறப்படுத்துகின்றனர்.

# ரூ.2500 அபராதம்

கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு திங்கட்கிழமை தலா 2500ரூபா வீதம் பொத்துவில் நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேசத்தில் பிரதான வீதிகளில் கட்டாக்காலிகளாக உலவின என்று தெரிவித்து திருக்கோவில் பொலிஸாரால் பிடித்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சுமார் 27 மாடுகளின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

அதனையடுத்து பொத்துவில் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் மாடுகளை மகாஓயா பிரதேச செயலரின் ஊடாக மகாஓயா பிரதேசத்தில் உள்ள மேய்ச்சல்தரைக்கு அனுப்பி வைப்பதற்கு உத்தரவிட்டுள்ளார். அதனையடுத்து மாடுகள் அனைத்தும் மகாஓயாவுக்கு கொண்டு செல்வதற்கு லொறி களில் ஏற்றப்பட்டபோது. மாடுகளின் உரிமையாளர்கள் திருக்கோவில் பொலிஸ் நிலையத்துக்கு சென்றிருந்தனர்.

அதனையடுத்து மீண்டும் பொத் துவில் நீதிமன்றத்தால் ஐம்ப தாயிரம் சரீரப்பிணையில் மாடுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அதனையடுத்து உரிமையாளர்களுக்கு திங்கட்கிழமை தலா 2500 ரூபா வீதம் பொத்துவில் நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டது. (ச)

# எலும்புக்கூடு மீட்பு



மட்டக்களப்பு.டிசெ.4

மட்டக்களப்பு.முறுத்தானைப் பகுதியில் காணமற்போனதாகக் கருதப்பட்ட விவசாயி ஒருவரின் எலும்புக்கூடுகள் ஒரு மாதத்தின் பின்னர் சனிக்கிழமை மீட்கப்பட்டது.

இந்த நபர் கடந்த ஒக்ரோபர் மாதம் வயலில் காவல் பரண் அமைப்பதற்காக காட்டுப் பகுதிக்கு கம்பு வெட்டச் சென்றபோது காணாமல் போயிருந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

சிறுதேன்கல்வெட்டை கிராம வாசியான கோபாலன் ரவேந்திரன் (வயது-35) என்பவருடைய உருக்குலைந்த எலும்புக்கூடே மீட்கப்பட்டுள்ளது.

காட்டுப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் மனித எலும்புக்கூடொன்று கிடப்பதாகபொது மக்கள் மூலம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.வி.எம். ஹுஸைன் சடலத்தை மீட்குமாறு உத்தரவிட்டார்.

மீட்கப்பட்ட எலும்புக்கூடு இரசாயனப் பகுப்பாய்வுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்ப வம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இனம்தெரியாதோரால் சமுர்த்திவங்கி உடைப்பு

அம்பாறை.டிசெ.4

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட நாவிதன் வெளி சமுர்த்தி வங்கி ஞாயிற் றுக்கிழமை நள்ளிரவு இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளது.



சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் அறையின் பின்புறமாகவுள்ள ஜன்னல் கண்ணாடியை உடைத்து அதன் கம்பிகளை வெட்டி உள்ளே நுழைந்த நபர்களால் ஆவண காப்புப்பெட்டி உடைக்கப்பட்டுள்ளது. பணக் காப்புப் பெட்டியையும் உடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் பணக்காப்புப் பெட்டியை உடைக்கப்படமுடியாது போனதால் வேறு எந்தவொரு ஆவணங்களுக்கும் சேதம் விளைவிக்காது குறித்த நபர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

திங்கட்கிழமை காலை வங்கி உத்தியோகத்தர் ஒருவர் கடமையின் நிமித்தம் வங்கியை திறக்கின்றபோது வங்கி உடைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதனையடுத்து சம்பவம் தொடர்பாக பிரதேச செயலர் மற்றும் பிர தேச பொலிஸ் நிலையத்துக் குத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது. சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு மேப்ப நாய்கள் சகிதம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)

# கிழக்கில் தொடர்ந்து கொட்டுகிறது மழை

## வெள்ளத்தில் மூழ்கின வீதிகள்; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

மட்டக்களப்பு.டிசெ.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று நாள்களாக கடும் மழை பெய்து வருகின்றது. அடை மழையால் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை, 8.30 மணியுடன் முடிவடைந்த 72 மணி நேரத்தில் 68.4 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி கே.சூரியகுமார் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் ஆரம்பம் முதல் இன்று வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 1750.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி யுள்ளது என்று அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 1606.6 மில்லிமீற்றர் ஆகும். ஆனால், 1750.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியானது வருடாந்த மொத்த மழைவீழ்ச்சியைத் தாண்டியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

### கடற்றொழில் முற்றாகப் பாதிப்பு

கடும் மழையுடன் காற்றும் வீசி வருவதால் கடற் கொந்தளிப்பும் காணப்படுகிறது. அதனால் கடற்றொழில் நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

கடும் மழையினால் அன்றாட கூலித்தொழில் புரிவோர் முதல் அங்காடி வியாரிகள் வரை தமது நாளாந்த வருமானத்தை முற்றாக இழந்துள்ளனர்.





புதிய காத்தான்குடி, ஆரையம்பதி, நாவற்குடா, தாளங்குடா, மாமாங்கம், பூம்புகார் உட்பட பல வீதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளதால் போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

### கடலுணவுகளின் விலை உயர்வு

மட்டக்களப்பில், இறால், நண்டு மற்றும் வாவி மீன்களின் விலை கள் அதிகரித்துள்ளன. இதுவரை கிலோ 400 ரூபாவாக விற் பனை செய்யப்பட்ட இறால் இப்போது கிலோ 600 ரூபா வரை உயர்ந்துள்ளது.

சீரற்ற காலநிலை யால் கடலுக்கு மீனவர்கள் செல்லாததால் மீனுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடலுணவுகளின் விலையும் அதிகரித்துள்ளது. மட்டக்களப்பு வாவியில் மீனவர்கள் ஆர்வத்துடன் மீன் பிடி யில் ஈடுபட்டனர்.

### சீரற்ற காலநிலை தொடரும்

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் நிலவிவரும் மழையுடன் கூடிய குழப்பமான கால நிலை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இடியுடன் கூடிய மழை பெய்வதுடன், வடக்கு, ஊவா மற்றும் வட மத்திய மாகாணங்களிலும் மழை பெய்யக்கூடும் என்று திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பிற்பகல், இரவு வேளையில் பெய்யும். சில பகுதிகளில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது கடும்காற்று வீசும். மின்னல் தாக்கம் குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ச)

# வீதிக்கு வந்தது குரங்கு கூட்டம்; மரத்துடன் மோதி ஒருவர் சாவு

திருகோணமலை,டிசெ.4

திருகோணமலை,உப்புவெளி, அபயபுர வீதியில் 3 ஆவது மைல்கல் பிரதேசத்தில் குரங்குக் கூட்டமொன்று திடீரென்று வீதிக்குள் வந்ததால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் ஞாயிற் றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

குரங்குகள் கூட்டமாக வீதிக்குள் வந்ததால் அந்த வீதியில் பயணம் செய்தவர் தான் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளை கட்டுப்படுத்த முடியாது மரத்துடன் மோதுண்டு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் திருகோணமலை, பஸ்தியன், ஹஸ்கிசன் வீதியை சேர்ந்த பாக்கியராஜா கௌரிசங்கர் (வயது-27) என்ற நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மாற்று வலுவுள்ளோர் தின நிகழ்வு

மருதமுனை ஹியுமன் லின்க் நிறுவனத்தின் ஆறு வருட நிறைவையொட்டி நடத்தப்படுகின்ற சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினவிழா எதிர்வரும்7 ஆம்,8 ஆம் திகதிகளில் மருத முனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்வில் காலை 9 மணிக்கு உற்பத்திப்பொருள் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக கல்முனைப் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிற்பகல்2.30 மணிக்கு கலை. கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்தநிகழ்வில் பிரதம விருந் தினராக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர் கலந்து கொள்வார். (ச)

# சட்ட வைத்திய அதிகாரி இல்லை

## கல்முனை மக்கள் அவலம்

அம்பாறை.டிசெ.4

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு நிரந்தர சட்டவைத்திய அதிகாரியொருவர் இல்லாததால் நாவிதன் வெளி பிரதேசத்தில் இருந்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கொண்டு செல்லப்படும் சடலங்களை உடன் திருப்பி பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

அதனால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று நாவிதன் வெளிபிரதேசசபை தவிசாளர் சி. குணரெத்தினம் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேசத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லுமாறான நீதிவானின் உத்தரவுக்கமைய சடலத்தை எடுத்துச் சென்றால், அங்கு நிரந்தர சட்டவைத்தியர் இல்லா ததால் தற்காலிக சட்ட வைத்தியர் வரும்வரை காத்திருக்க வேண்டி ஏற்படுகிறது என்று அவர் கூறினார்.

கல்முனை பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்கள் தமது நோய்க்கான சிகிச்சையைப் பெற்று வருகின்ற இந்த வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் இன்றுவரை செய்யப்படவில்லை என்று அவர் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்திய நாடுகளால் எம்மை மண்டியிட வைக்கவே முடியாது

## அவற்றுக்கு எதிரான சக்திகளுடன் கைகோர்த்துள்ளோம் என்கிறார் அமைச்சர் வாசு



பலம் பொருந்திய ஏகாதிபத்திய நாடுகளால் சர்வதேசத்தின் முன்னிலையில் எம்மை மண்டியிட வைக்கவே முடியாது. அவற்றின் அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணிய மாட்டோம். ஏனெனில் அவற்றுக்கு எதிரான சக்திகளுடன் கை கோர்த்தே நாம் பயணிக்கிறோம் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி செலவினத் தலைப்புகள் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பலமிக்க நாடுகளுக்கு அடிபணியாது துணிவுடன் செயற்படுவதன் காரணமாகவே எமது ஜனாதிபதிக்கு எதிராக எதிர்ப்புகள் தலைதூக்குகின்றன.

இவற்றை எம்மால் தோல்வியடையச் செய்ய முடியும். ஏனெனில் ஏகாதிபதியவாதிகளுக்கு எதிரான சக்திகளுடனேயே நாம் கைகோர்த்துப் பயணிக்கிறோம்.

**சம்பந்தனின் உரைக்கு இடையூறு விளைவித்தது தவறு**

வடமாகாண சபையுடன் இணைந்து செயற்பட அரசு தயாராகவுள்ளது. அதேபோல வட மாகாணமும் எம்முடன் இணைந்து செற்படவேண்டும்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஆற்றிய உரைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது. அது தவறானதாகும். அவரது கருத்துடன் நாம் இணங்கவில்லை. இருப்பினும் கருத்து வெளியிடுவதற் காக அவருக்கு இருக்கின்ற உரிமையை நாம் மதிக்கி றோம். அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எமக்கும் இடையில் கருத்து வேறுபாடு இருக்கிறது. அவர் களின் கருத்தை நாம் ஏற்க வில்லை. ஆனால் கருத்து வெளியிடும் அவர்களது உரிமையை நாம் மதிக்கிறோம்.

இதுபோன்ற உரிமைகளை மற்றவர்களுக்கும் வழங்கி நாம் ஜனநாயகத்தை மதித்துச் செயற்படுகிறோம். அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றோம். எனவே, இதனைக் கருத்திற்கொண்டு எமது உள்விவகாரத்தில் சர்வதேசம் தலையிட நாம் அனுமதிக்கக் கூடாது. அதற்கான ஒற்றுமையை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

1988, 89 ஆண்டுகளிலிருந்து காணாமல்போனோர்களை நினைவுகூரும் வகையில், நாடாளுமன்ற வளாகத்தில் நினைவுத்தூபி ஒன்றை அமைத்துள்ளோம். ஆரம்ப காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் அவதானம் செலுத்திய அவற்றை நினைவுகூர்ந்து நாம் நினைவுச் சின்னத்தையும் நிறுவியுள்ளோம். நாட்டில் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டுள்ளமைக்கு இதுவும் ஒரு சான்றாகும்.

**கமரூன் ஒரு சர்வதேசக் குருடர்**

பிரிட்டன் பிரதமர் பற்றி நான் குறிப்பிடவேண்டும். கமரூன் ஒரு சர்வதேச குருடராக இருக்கின்றார். காணவேண்டியவற்றைக் காணமலும், கேட்கவேண்டியவற்றைக் கேட்காமலும் அவர் இருக்கின்றார். - என்றார்.

# பொலிஸ் எனக் கூறி கப்பம் பெற்றவர் கைது

பொலிஸார் எனக் கூறி தொலைபேசி மூலம் பலரிடம் கப்பம் பெற்றுவந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலபிட்டிய, மொரோட்டிவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பலபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதான சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# வடக்கு, கிழக்கில் சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழில் சேவை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ்மொழிமூலம்சேவையை பெற்றுக் கொள்ள முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் மொழி தெரிந்த உத்தியோகத்தர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தெரண தொலைக்காட்சியில் '360' எனும் அரசியல் நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்ச்சியில், வட மாகாணத்திலுள்ள எந்தவொரு பொலிஸ் நிலையத்திலும் தமிழ் மொழி மூலம் முறைப்பாட்டை பதிவு செய்வதற்கு உத்தியோகத்தர்கள் எவரும் இல்லை என சுமந்திரன் எம்.பி. தெரிவித்திருந்தார்.

இதன்போது, வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் மொழி மூலம் சேவைகள் வழங்கப்படுகின்றன என்று தொலைபேசியில் கருத்துத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

# சிப்பாய் நேற்றுச் சாவு

பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர், பயிற்சி முகாமில் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார்.

புத்தளத்தைச் சேர்ந்த பீ.டி. செஹான் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் பயிற்சி முகாமிலுள்ள வேப்ப மரத்தில் நேற்றுத் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

உயிரிழந்தவர் கடந்த சில நாட்களாக சுகவீனமுற்றிருந்தார் எனப் பயிற்சி முகாம் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# கணவன் மீது 'அசிட்' வீசிய மனைவி கைது

தனது தந்தையின் உதவியுடன் கணவன் மீது அமிலம் (அசிட்) வீசிய குற்றச்சாட்டில் பெண்ணொருவரை கேகாலைப் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்தப் பெண்ணின் கணவர் தனது ஓட்டோவை ஹெட்டிமுல்ல, மாலவிட்டயில் உள்ள மனைவியின் வீட்டின் பின்பக்கமாக நிறுத்திவிட்டு அதற்குள் நித்திரையாக இருந்தபோது அவரது மனைவியும் மாமனாரும் அவர்மீது அமிலத்தை விசிறியுள்ளார்கள். பலத்த எரிகாயங்களுக்குள்ளான அவர் மிகவும் ஆபத்தான நிலையில் கேகாலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

கேகாலை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட பெண்ணையும் அவரது தந்தையையும் கேகாலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# திருமலை ஐந்து மாணவர் கொலை வழக்கு ஜன.7 இற்கு ஒத்திவைப்பு

திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுக்கொலப்பட்ட கொலை வழக்கு எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எல். அஸ்ஹர் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது 2006ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதியன்று திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கபட்ட 12 அதிரடிப் படையினரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

நேற்றைய விசாரணைகளின் பின்னர் வழக்கு எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு திருகோணமலை கடற்கரையில் வைத்து 5 மாணவர்களையும் கொலை செய்த குற்றச்சாட்டே 12 அதிரடிப்படையினர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட மாணவர் ஒருவரின் சார்பில் சட்டத்தரணியும் பதில் நீதவானுமாகிய சுபாசினி தனது சாட்சியத்தை வழங்கினார்.

கொலை செய்யப்பட்ட மாணவரில் ஒருவர் தனது அக்காவின் மகன் எனக் கூறி அவர் தனது சாட்சியை முன்வைத்ததுடன் தான் உறவினர் என்பது மட்டுமல்லாது பதில் நீதிவானாகவும் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு திட்டமிட்ட கொலை நடந்ததை அவதானித்தேன். எனவே, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தகுந்த தண்டனைகள் வழங்க வேண்டும் எனவும் கூறினார்.

# பாணின் விலை உயரும்

அடுத்த மாதம் முதல் பாணின் விலையை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அடுத்தமாதம் முதல் கோதுமை மாவுக்கு வரி விதிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதுஎன்று சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்த்தன குறிப்பிட்டார். அதனால் ஏற்படும் நட்டத்தைக் குறைப்பதற்காகவே, பாணின் விலை அதிகரிக்க நேர்ந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பன்றியுடன் மோதிய சனத்தின் வாகனம்

பிரதியமைச்சர் சனத் ஜயசூரியவை ஏற்றிக்கொண்டு சென்ற ஜீப் வாகனம் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் காட்டுப்பன்றியொன்றுடன் மோதியுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ள இந்த விபத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சனத் ஜயசூரிய எந்தவித காயமுமின்றி தப்பியுள்ளார். இருப்பினும் வாகனம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

# எய்ட்ஸ் நோயின் தாக்கம் அதி தீவிரம்

## எய்ட்ஸ் தடுப்பு மையம் அபாய எச்சரிக்கை



இலங்கையில் எய்ட்ஸ் நோயின் தாக்கம் மிகவும் தீவிரமடைந்துள்ளதாகவும் அதனைக் கட்டுப்படுத்தத் தவறினால் எதிர்கால விளைவுகள் மிகவும் மோசமாகிப்போய் விடும் என்றும் எய்ட்ஸ் நோய்த் தடுப்பு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த மையத்தின் தலைவரான டாக்டர் சிசிர லியனகே கருத்துத் தெரிவிக்கையில், ஆயிரத்து 808 இலங்கையர்கள் இந்த ஆட்கொல்லி நோய்க்கு இதுவரை இலக்காகியுள்ளதாகவும் அவர்களுள் 451பேர் நோய் முற்றிய நிலையில் காணப்படுவதாகவும் கூறினார்.

எய்ட்ஸ் நோய்க்கு இலக்கானவர்களில் 95 சதவீதமானோர்க்குப் பாதுகாப்பற்ற உடலுறவு மூலமே நோய் தொற்றியுள்ளது எனவும், நான்கு சதவீதமான பிள்ளைகளுக்குக் கர்ப்பிணித் தாய்மார்கள் மூலமாகவும், ஒரு சதவீதமானவர்களுக்கு இரத்த மாற்றீடு மூலமாகவும் இந்த நோய் தொற்றியுள்ளது எனவும் தெரிவித்த டாக்டர் லியனகே, இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தாவிட்டால் எதிர்காலத்தில் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் எனவும் எச்சரித்திருக்கிறார்.

# நத்தார் தினத்தையொட்டி தபால் முத்திரைகள் வெளியீடு

எதிர்வரும்நத்தார் தினத்தையொட்டி தபால் திணைக்களம் இரண்டு புதிய முத்திரைகளை வெளியிட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிலாபம் தேவாலயத்தில் சிலாபம் ஆயர் வண. தேவ்ஸ்ரித்த வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையினதும் பிரதமர் டி.எம். ஜயரத்னவினதும் தலைமையில் நடந்த வைபவத்தின்போது வெளியிடப்பட்டன.

வடமேல் மாகாணத்தின் தபால் மா அதிபர் ஆர். பிரேமசந்திர முதல்நாள் கடிதவுறைகளைப் பிரதம விருந்தினர்களுக்கு வழங்கினார். இந்த முத்திரைகள் 5 மற் றும் 30 ரூபா பெறுமதி கொண்டவை.

இவ்வைபவத்தில் பிரதியமைச்சர் விக்டர் அந்தனி பியன்விலவும் கலந்துகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அமெரிக்கா அனுமதிக்கிறது இலங்கை தடுக்கிறது

அல்குவைதா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடனை நினைவுகூருவதற்கு அமெரிக்கா அனுமதிக்குமா? இப்படியொரு முக்கியமான கேள்வியை அண்மையில் எழுப்பியிருக்கிறார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.

விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தைத் தமிழர்கள் கடைப்பிடிப்பதற்கு அனுமதிக்க முடியாது என்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்காக அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

ஒசாமா பின்லேடனை அமெரிக்கா இரகசிய நடவடிக்கை மூலம் கொன்றது. பின்னர் அவரது சடலத்தை தனது போர்க் கப்பல் ஒன்றுக்கு எடுத்துச் சென்று இறுதி மத மரியாதைகளைச் செய்த பின்னரே கடலினுள் அடக்கம் செய்தது.

பின்லேடனின் சடலத்தை அடையாளம் காண முடியாத ஓர் இடத்தில் அமெரிக்கா அடக்கம் செய்ததற்கான காரணம், அவரைத் தமது கதாநாயகராக யாரும் வழிபட்டு பின்பற்றிவிடக்கூடாது என்பதுதான். இதனை அமெரிக்க அரசு பகிரங்கமாகவே தெரிவித்திருக்கிறது.

ஆனால், அமெரிக்கக் குடிமகன் ஒருவர் பின்லேடனை நினைவு கூர்ந்து ஒரு நிகழ்வு நடத்த விரும்பினால் அமெரிக்க அரசும் அந்த நாட்டு சட்டம் ஒழுங்கு அமைப்புகளும் அதனைத் தடுத்து நிறுத்திவிட முயலுமா? முடியுமா? என்று கேட்டால் இல்லை என்பதுதான் அதற்கான தெளிவான பதில்.

இயற்கையாக ஒரு மனிதனுக்கு உள்ள உரிமைகளை அமெரிக்க அரசு ஒருபோதும் தடுத்துவிட முடியாது என்பது அந்த நாட்டின் அரசமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால்தான் வெறுப்பூட்டும் – வசைபாடும் – பேச்சுக்களைக்கூட ஒருவர் பொது இடத்தில் நிகழ்த்துவதை அமெரிக்க அதிகாரிகளால் தடுத்துவிட முடிவதில்லை. அது அவரது உரிமை என்கின்றன அமெரிக்க அரசமைப்பும் அரசியல் சுதந்திரமும்.

ஒசாமாவின் நினைவு நிகழ்வுகளை அமெரிக்காவில் யாராவது நடத்துவார்களானால் அமெரிக்க அதிகாரிகளால் அதனைத் தடுத்துவிட முடியாது. அதனை அவர்கள் தீவிரமாகக் கண்காணிப்பார்கள், அந்த நிகழ்வுகள் அமெரிக்காவுக்கு எதிரான சதிக்களமாக மாறுகிறதா என்று உளவு பார்ப்பார்கள், நிகழ்வுகளை நடத்தும் அமைப்புகள் தீவிரவாதத்தை ஊக்குவிக்கின்றனவா என்று ஆராய்வார்கள். ஆனால் அமைதியாக, வன்முறையைத் தூண்டாத விதத்தில், தீவிரவாதத்துக்கு ஆதரவு தெரிவிக்காத விதத்தில் ஒசாமாவை யாராவது நினைவுகூர முயன்றால் அதனைத் தடுப்பதற்கு அமெரிக்க அதிகாரிகளால் ஒருபோதும் முடியாது. அந்தச் சுதந்திரத்தை அந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கி உறுதிப்படுத்தியிருக்கிறது அரசு.

விடுதலைப் புலிகள் விடயத்தில்கூட இப்போதும் அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. அமெரிக்காவால் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகள் என்று பட்டியலிடப்பட்டுள்ள அமைப்புக்களில் விடுதலைப் புலிகள் இயக்கமும் அடக்கம். அங்கு அந்த இயக்கத்துக்காக நிதி சேகரித்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்த அங்கு தடையேதும் இல்லை. அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் மாவீரர் தினங்கள் நடக்கின்றன. அதனை அமெரிக்க அதிகாரிகள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இத்தகைய உண்மையான அரசியல் காலாசாரமும் பெருந்தன்மையும் எமது அரசியல் வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் இல்லாமல் போனமை கவலைதான்.

# தமிழரின் உரிமைகளை நசுக்குவது நல்லதல்ல

கந்தவனம் கோணேஸ்வரன்.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரையிலே தமிழ் மக்களது உரிமைகள், அவர்கள் பெறுகின்ற அதிகாரங்கள் எல்லாமே ஜனாதிபதியின் விருப்பு வெறுப்புக் கேற்பமாறுபடும் தன்மை கொண்டவை என்ற பிழையான கருதுகோள் இனவாதச் சிங்கள அரசியல்வாதிகளிடம் மாத்திரமல்ல, இணக்கவாதத் தமிழ் அரசியல்வாதிகளிடமும் பரவலாகக் காணப்படுகின்றது.

இந்தக் கருதுகோளின் காரணமாகத்தான் அரசுடன் ஒத்துப்போகாவிட்டால் தமிழ் மக்கள் வதைபட நேரிடும் என்று சிங்கள் அரசியல்வாதிகள் எச்சரிக்கை விடுவதும், ஐயையோ, இவர்கள் நியாயம் கேட்கிறோம் என்று கூறித் தமிழ்மக்களை அழிவு பாதைக்கு இட்டுச் செல்கிறார்கள் என்று சரணாகதி தமிழர்கள் ஓலமிடுவதும் நெடுங்காலமாகவே நடந்து வருகிறது.

### தந்தை செல்வாவின் போராட்ட உணர்வு

இலங்கை சுதந்திரமடைந்த சில மாதங்களுக்குள்ளாகவே தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள். அன்று தந்தை செல்வா கொதித்து எழுந்திரா விட் டால் இன்று வடக்குக் கிழக்குத் தமிழர்கள் அனைவரையும் ஆகக்குறைந்தது வீடற்றவர்களாகவேனும் ஆக்கியிருப்பார்கள் சிங்கள அரசியல்வாதிகள். சரணாகதி அரசியல் செய்பவர்களுக்கும் தமிழர் நிலத்தில் ஒரு தளமேனும் இருக்கிறது என்றால் அது போராட்ட உணர்வால் காப்பாற்றப்பட்டவற்றின் ஒரு பகுதியே என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது.

### வரலாறு காட்டும் பாடம்

வடக்குக் கிழக்கு மக்களிடையே தோன்றி அரசுடன் சரணாகதிப் போக்கில் இணைந்து கொண்ட அரசியல்வாதிகளால், தாங்கள் வாழ முடிகிறது: தங்கள் உறவினர் நண்பர்களை வாழவைக்க முடிகிறது என்பதைத் தவிர அவர்கள் சாதித்தவை எவையுமேயில்லை. பலம் தம்மிடமிருக்கிறது என நம்பும் காலம் வரைக்கும் வீரம் பேசிக்கொண்டு அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டங்க ளைக்கூட நிகழ்த்துவது: பலம் குறைந்து விட்டது என உணரும் போது போராட்டத்துக்கான நியாயங்களையெல்லாம் புதைத்து விட்டுத் தப்பியோடி அரசின் புகழ்பாடி உயிரைத் தக்க வைத்துக்கொள்வது என்பவை யெல்லாம் வீரத்தின்பாற்பட்டனவோ, விவேகத்தின் பாற்பட்டனவோ அல்ல என்பதை வரலாறு காட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

### அரசின் குறியும் மாகாணசபைகளும்

தமிழர்களின் கைகளுக்கு எந்தவிதமான அதிகாரங்களும் போய்விடக் கூடாது என்ற நினைப்பு அரசிடமிருப்பதுபோல் இலங்கையின் ஏழு மாகாண சபைகளிடமும் தாராளமாகவே விரவிக்கிடக்கிறது. தங்கள் அதிகாரங்களைக்கூட வேண்டாம் என்றுக்கூறி நிராகரித்துவிடும் போக்கு இவர்களிடையே ஏகமனதாகக் காணப்படுகிறது. ஏழு மாகாண சபைகளது ஆளுந்தரப்பினர் எதிர்த் தரப்பினர் அனைவரும் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ளவோ புரிந்து கொள்ளவோ விரும்பாதவர்கள். ஏழு மாகாணசபைகளதும் ஆளுங்கட்சிகள் அரச தரப்பாகவே இருக்கின்றன.

### தமிழ் - முஸ்லிம்களின் உணர்வை புதைத்துள்ள கிழக்கு மாகாணம்

ஜனாதிபதியின் சொல்கேட்டு நடக்கின்ற முதலமைச்சரும் அவரின் இலட்சியத்தை நடைமுறைப்படுத்தும் அமைச்சரவையும் என இருப்பதால் அவர்களைப் பொறுத்த வரையில் அவர்களது போக்குச் சரியாகவே தென்படுகிறது. எட்டாவது மாகாணசபை தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழ் கின்ற கிழக்கு மாகாணத்துக்குரியது. நாங்கள் தமிழ்பேசும் மக்களேயொழிய தமிழர்கள் அல்லரே என்ற வகையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் அமைச்சுப் பதவிகளுக்கு விலைபோய் அரசின் காலடியிற் கிடந்து, தமிழ்மக் களின் விடுதலை உணர்வை மட்டு மல்ல முஸ்லிம் மக்களின் வாழ்வுரிமையையும் சேர்த்துப் புதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### தமிழ் பேசும் மக்களின் அடையாளம் வடமாகாணம்

ஆக இப்போது வடமாகாணசபை ஒன்று தான் வடக்குக் கிழக்கு மக்களின் எண்ணங்களுக்கும் இலட்சியத்துக்கும் அடையாளமாக அமைந்திருக்கிறது எனலாம். அதிற்கூட குற்றங்குறைகள் இல்லாமல் இல்லை. எனினும் ஒன்பதிலே ஒன்றாவது உருப்பட்டதே என்ற ஆறுதலையாவது பெற்றுக் கொள்ளமுடிகிறது. வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டதன் பின்னர்தான் மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் தொடர்பான பேச்சே எழுந்திருக்கிறது. எட்டு மாகாண சபைகளின் முதல்வர்களும் அமைச்சர்களும் தங்களுக்குரிய பதவிகளை ஜனாதிபதியின் கருணையினாலும் செல்வாக்கினாலும் தானமாகப் பெற்றிருக்கலாம். எனவே தானங் கிடைத்த மாட்டின் பல்லை பரிசோதிக்கும் தைரியம் அவர்களுக்கு இல்லாமற் போனதில் நியாயமிருக்கிறது.

ஆனால் வடமாகாணசபை பவ்வியமாகக் கைகட்டிநின்று அரசிடம் நல்ல பிள்ளைப் பெயர் எடுக்கும் நோக்குடன் இயங்க முடியாது. அறுபதாண்டு காலமாகத் தொடர்ந்தும் நசுக்கப்பட்டு வரும் இனத்தின் உரிமைக்குரலாக ஒலிக்கவேண்டிய தேவை அதற்கிருக்கிறது. கிடைக்கின்ற அதிகாரங்களைப் பற்றிப் பிடித்து தனக்கு வாக்களித்த மக்களின் விடிவுக்காகச் செயற்படவேண்டிய கட்டாயம் அதற்கிருக்கிறது.

### அதிகாரங்களுக்காக போராடும் வட மாகாணம்

ஆயினும், தொடர்ந்துவந்த ஜனாதிபதிகள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தி மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்களை இருபத்தைந்து வருடகாலமாக இடைநிறுத்தி வைத்திருக்கிறார்கள். தென்னிலங்கையிலுள்ள ஏழு மாகாண சபைகளும் இவ்வதிகாரங்கள் தமக்குத் தேவையற்றவையென கூறுகின்றன. எட்டாவது மாகாணசபையான கிழக்கு மாகாண சபையோ காணி, பொலிஸ் அதிகாரங்கள் கிடைத்தால் நல்லது: அதற்காகப் போராடப் போவதில்லை என்று தூங்கி வழிகின்றது. ஆனால் வடக்கு மாகாண சபை ஒன்றே அவ்வதிகாரங்களுக்காகப் போராடத் தொடங்கியிருக்கிறது.

### வடக்கு, கிழக்கில் தாக்குதல் பின்னணியில் அரசின் கரம்

மேலதிகமாக, பிரதேசசபை உறுப்பினர்களின் வீடுகளும் தாக்கப்பட்டிருக்கின்றன. திருகோணமலையிலும் பங் குத் தந்தையொருவர் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். மூதூர் மேன்காம சந்தியில் அமைந்துள்ள சிவன்கோவிலில் நடைபெற்ற பொங்கல் வழிபாடு குழப்பப்பட்டிருக்கிறது. இத்தகைய அராஜகங்களை யார் செய்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்படாது விட்டாலும் இவற்றின் பின்னணியில் அரசின் கரங்கள் இருக்கின்றன .

வடபகுதியில் உயிரிழந்தோரின் நினைவுகளை நடத்தத் துடித்தவர்களது வீடுகள்தாம் தாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் என்ன தவறு காணமுடியும் என்ற பாணியில் அரச தரப்பைச் சேர்ந்தவர்கள் விளக்கம் சொல்ல முன் வரலாம். ஆனால் அது சரியாகாது. ஏனெனில் தாக்குதல்களை நடத்த வந்தவர்கள் எவரும் தம்மை அடையாளங் காட்ட முன்வரவில்லை. தாக்குதல்கள் இரவிலேயே நடத்தப்பட்டிருக்கின்றன. வீடுகளைத் தாக்குவதும் உயிர் அச்சுறுத்தல் செய்வதும் பொலிஸாரினதோ படையினரினதோ நடவடிக்கை களாக இருக்க முடியாது. எனவே இச்செயல்களுக்கென்று சட்ட விரோத கும்பல்கள் ஏவையும் அரச அனுசரணையுடன் செயல்படுகின்றனவா என்று கேட்கத் தோன்றுகிறது. இறந்தவர்களின் நினைவில் பங்குபற்றுவது அரச சட்டப்படி குற்றச் செயலாக இருப்பின் அதற்கெதிரான நடவடிக்கைகளை பொலிஸார்தான் எடுத்திருக்க வேண்டும். வன்முறை எதுவும் நடைபெறாத நிலையில் பொலிஸாரின் நடவடிக்கைகளே பயன்தரக்கூடியதாக அமைந்திருக்கும். ஆனால், உண்மையில் இவற்றைத் தடுத்தவர்கள், இச்செயல்களுக்கெதிராக நடவடிக்கையை எடுத்தவர்கள் படைத்தரப்பினராகவே இருந்தார்கள்.

### சாவடைந்தோரை அஞ்சலிப்பது புலிகளின் எழுச்சியாகாது

உண்மையில் இப்போது இடம்பெறும் இறந்தோர் நினைவு நிகழ்வுகள் எவையும் விடுதலைப்புலிகளின் எழுச்சி ஆகா. எம்மக்களுக்காக உயிர்நீத்த உறவுகளுக்கான ஒரு வணக்க முறைமை மட்டுமே. உணர்வு சார்ந்த இந்நிகழ்வு பற்றி அரசு அலட்டிக்கொள்ளாமல் விட்டிருந்தால் அது ஒரு சமயநிகழ்வு போலவே அமைதியாக முடிந்திருக்கும். பொது இடங்களில் மக்கள் கூடுவதைத் தவிர்த்துத் தத்தம் வீடுகளிலிருந்தே உறவுகளை நினையுங்கள் என்று பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தால் எவ்வித முறுகல் நிலையும் ஏற்பட்டிருக்காது. அரசின் நடவடிக்கை குறித்து தமிழர்கள் வெறுப்புக்கொள்ளவும் நேர்ந்திருக்காது.

தமிழர்களின் இயல்பான மனவுணர்வுகளை அரசு தொடர்ந்து நசுக்க முனைந்தால் விளைவுகள் பாரதூரமாகலாம் என மரநடுகை விழாவின்போது முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறிய கூற்றையும் அரசு மனதிற்கொள்ள வேண்டும். தொடர்ந்து அச்சுறுத்தல்கள் செய்வதன் மூலமோ, அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதன் மூலமோ, அழிவுகளை ஏற்படுத்துவதன் மூலமோ தமிழர்களின் போராட்டங்களை நசுக்கி விடலாமென அரசு எண்ணக்கூடாது. இனியும் அரசு அப்படிச் செயற்படுமானால் எதிர்வரும் ஆண்டில் அதன் பலாபலன்களை அனுபவிக்க நேரிடலாம்.

தனது ஆளுகைக்குட்பட்ட மண்ணின் சில பகுதிகளுக்கு காலடி எடுத்து வைக்கவோ, அப்பகுதியில் உடைக்கப்பட்டிருக்கும் ஆலயங்கள், பாடசாலை, வீடுகள் என்பவற்றை பார்வையிடவோ முடியாமல் வடபகுதி முதலமைச்சர் திணறு வதும் தமிழ்மக்களுக்கு வழங்கப்ப டுகின்ற அதிகாரங்கள் தாம் போடுகின்ற பிச்சையென ஜனாதிபதி எண்ண முற்படுவதும் எதிர்கால இலங்கைக்கு மகிழ்ச்சி தரக்கூடிய அறிகுறிகளல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதின்ம வயதினரை

## எப்படிக் கையாள்வது.....



அருவி

குழந்தைப் பருவத்துக்கும், வளரிளம் பருவத்துக் கும் இடையேயான பதின்ம வயதுக் குழந்தைகளை எப்படிக் கையாள்வது என்பது இன்று பெற்றோருக்குப் பெரும் பிரச்சனையாக இருக்கின்றது.

இந்தப் பதின்ம வயதினைக் குழந்தைகள் அடையும்போது, அவர்களின் செயற்பாடு, எண்ணங்கள் மற்றும் பேச்சுகளில் பல மாறுதல்கள் தோன்றும். இதனைக் கண்டு பெற்றோர்கள் அதிகம் குழப்பமடைவர் பயமும் கொள்வர். காரணம், அவர்களின் குழந்தையிடம் ஏற்பட்டிருக்கும் ஒருவிதமான இனம்புரியாத மாற்றங்கள்தான். தங்களின் குழந்தை ஏதோ, தவறான வழியில் செல்கிறதோ என்ற எண்ணமே அதற்குக் காரணம். ஏனெனில், அதுவரை அவர்கள், தங்கள் பிள்ளைகளைக் குழந்தைகளாகவே பாவித்துப் பழகியிருப்பார்கள். எனவே, அத்தகைய நிலையில் குழந்தைகளிடம் தென்படும் வித்தியாச குணநலன்கள் மற்றும் அவர்களிடம், பெற்றோர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய ஆலோசனையை இக்கட்டுரை தருகிறது.

சில சமயங்களில் உங்கள் பதின்ம வயதுப் பிள்ளைகள் பருவ வயதினரைப் போன்று நடந்துகொள்வார்கள். குடும்பத்தினருடன் இருப்பதைவிட, அதிகநேரம் நண்பர்களுடன் இருப்பதையே இவர்கள் விரும்புவார்கள்.

புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புவதுடன் சிலவிடயங்களில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவும் விரும்புவார்கள். குடும்பத்தில் தொன்றுதொட்டு வரும் சில பழக்கவழக்கங்கள் மற்றும் சம்பிரதாயங்களைப் பற்றிக் கேள்வி யெழுப்புவார்கள்.

அவர்களுக்கான ஒரு தனி முக்கியத்துவத்தை எதிர்பார்ப்பார்கள்.

அடிக்கடி சில விடயங்களைப் பற்றி வாதம் செய்வார்கள் சிலவேளை பேரம் பேசுவார்கள். அதேசமயம், பொம்மைகள் மற்றும் இதர விளையாட்டுச் சாமான்களைப் பயன்படுத்தி, விளையாடவும் செய் வார்கள்.

### பெற்றோர்களுக்கான ஆலோசனைகள்

பதின்மப் பருவ குழந்தைகளை கையாள்வதற்கு பெற்றோர்களுக்கென சில பக்குவங்கள் வேண்டும்.

### நண்பர்களுடன் மகிழ்தல்

குடும்பத்தைவிட, நண்பர்களுடன், அதிகநேரம் செலவிட விரும்பும் இப்பருவத்தில், அதற்கு தடைபோடுவது தவறு. அதேசமயம், நண்பர்களுடன் சென்று விளையாடு என்று நம் கண்ணுக்கு அப்பால் அவர்களை அனுப்பிவைப்பதை விட, உங்கள் குழந்தையின் நண்பர்களை உங்கள் வீட்டுக்கே வரவழைக்கலாம். அங்கேயே அவர்கள் விளையாட ஏற்பாடு செய்து, அவர்களுக்கு தின்பண்டங்களை அளித்து, அதன் மூலம், உங்களின் கண் பார்வையிலேயே அவர்களை வைத்துக் கொள்ளலாம். இதன்மூலம், வெளியில் அவர்களுக்கு நேரும் ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கலாம்.

### தனி அறை ஒதுக்குதல்

பெற்றோர் அரவணைப்பையே பெரிதும் விரும்பும் குழந்தைப் பருவத்திலிருந்து விடுபட்டு, சிறிது தனிமையை விரும்பும் நேரமிது. எனவே, அவர்களுக்கென்று ஒரு தனி அறையை ஒதுக்குவது சிறந்தது. அப்படி ஒதுக்கும்போது, அந்த அறையைச் சுத்தம் செய்வது மற்றும் பராமரித்தல் உள்ளிட்ட வேலைகளை, அவர்கள் வசமே ஒப்படைக்க வேண்டும். அப்போது, தானாகவே அவர்களுக்கு ஒரு பொறுப்புணர்வு உண்டாகும்.

தனக்கென ஒரு தனியறை ஒதுக்கப் படுகையில், உங்களின் குழந்தை வீட்டில் தனக்கு ஒரு தனி முக்கியத்துவம் கிடைக்கிறது என்று உணரும். அத்தோடு அதன் நம்பிக்கையும் அதிகரிக்கும். அதேசமயம், அறைக்குள் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் தேவையானபோது கண்காணிப்பதும் கட்டாயம். ஏனெனில், இன்றைய நவீன தொழில் நுட்ப யுகத்தில் பல ஆபத்துக்கள் நம் வீட்டிற்குள் எளிதாக நுழையும்.

> குழந்தைகளிடம் தென் படும் வித்தியாச குணநலன்கள் மற்றும் அவர்களிடம், பெற்றோர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்

தனி அறை ஒதுக்க முடியாத அளவுக்கு சிறிய வீடாக இருந்தால், குறைந்தபட்சம் உங்கள் குழந்தைக்கு ஒரு புத்தக அலுமாரியாவது ஒதுக்கலாம். இதன்மூலம், அது தனக்கான தனி முக்கியத்துவ உணர்வைப்பெறும். அந்த அலுமாரியையும் அழகாக பராமரிக்கும்.

### அடம் பிடித்தல்

இந்த பருவத்தில் குழந்தைகள் அடம் பிடிப்பதும் அதிகமாக இருக்கும். ஆனால், நாம் அதற்காக உடனே கோபப்பட்டு, அடிப்பதோ அல்லது கடுமையாக திட்டுவதோ கூடாது. அவர்களுடன் பொறுமையாக பேசி, காரணங்களை விளக்கிக் கூறித்தான் வழிக்குக் கொண்டுவர வேண்டும். தவறான விடயங்களால் ஏற்படும் பின்விளைவுகளை பொறுமையாக எடுத்துக்கூறி, அதன்மூலம், அதை நோக்கிய அவர்களின் பிடிவாதத்தை தடுக்க வேண்டும். அதே சமயம், நீங்கள் சொல்ல ஆரம்பித்தவுடனேயே அவர்கள் பொறுமையாக அமர்ந்து கேட்டு விடுவார்கள் என்று எதிர்பார்த்தல் கூடாது. மாறாக, சிறிதுநேரம் பொறுமையாக இருந்து, அவர்கள் அமைதியாகும்வரை காத்திருக்க வேண்டும்.

மேலும், சில நேரங்களில், இதுபோன்று அடம் பிடிக்கையில், அவர்களின் சந்தோஷத்துக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ள சில சலுகைகள் ரத்து செய்யப்படும் என்று எச்சரிக்கையும் விடுக்கலாம். உதாரணமாக, வெளியிடம் ஒன்றுக்கு செல்லுதல் அல்லது சினிமாவுக்குச் செல்லுதல் போன்று, ஏற்கனவேபேசிவைக்கப்பட்ட சலுகைகளை ரத்துசெய்வதாகக் கூறி எச்சரிக்கலாம்.

### எதிர்ப் பாலினக் கவர்ச்சி

குழந்தைகளுக்கு, எதிர் பாலினத்தின் மீதான கவர்ச்சி, இந்த வயதில் தொடங்குகிறது எனலாம். அதுவும், இன்றைய தொழில்நுட்ப யுகத்தில், முறையான வழிகாட்டல் இல்லையென்றால், குழந்தைகள் வழிதவறிச் செல்லும் வாய்ப்புகள் மிக அதிகம்.

தேவையான அளவு பாலியல் விழிப்புணர்வு மற்றும் குடும்ப மதிப்பீடுகள் பற்றிய கல்வியை உங்கள் குழந்தைக்கு, இந்த வயதில் கட்டாயம் கொடுக்க வேண்டும். மேலும், இந்த வயதில், அவர்கள் வெளியாள்கள் அல்லது உறவினர்களின் பாலியல் அத்துமீறல்களுக்கும் ஆளாகும் வாய்ப்புகள் உண்டு. அதுமாதிரி ஆபத்துக்களை அவர்கள் சந்திக்க நேர்ந்தால், அதைப்பற்றிப் பெற்றோரிடம் சொல்ல அவர்கள் நினைப்பார்கள்.

எனவே, அவர்கள் உங்களிடம் ஏதாவது தயங்கித் தயங்கிப் பேச வந்தால், உங்கள் வேலைப் பளுவைக் காரணம் காட்டி, அவர்களை புறக்கணிக்காமல், அவர்கள் சொல்வதை பொறுமையாகக் கேட்க வேண்டும். அவர்களின் தயக்கத்தை அகற்ற வேண்டும். இதன்மூலம், அவர்களுக்கு ஏதேனும் அநீதி ஏற்பட்டிருந்தால், அதை முளையிலேயே கிள்ளி எறியமுடியும்.

### இவர்களும்குழந்தைகள்தான்

உங்கள் பதின்ம பருவ குழந்தை, ஒப்பீட்டு அளவில் குழந்தைதான் என்றாலும், குழந்தைப்போன்று அவர்களை நடத்தினால், அவர்களுக்கு கோபம் வரும். அவர்கள், தங்களுக்கான செயல், சுதந்திரம் மற்றும் தனிமையை எதிர்பார்ப்பார்கள். அதேசமயம், திடீரென்று குழந்தை மனோநிலைக்கும் மாறுவார்கள். எனவே, எதற்கும் நீங்கள் தயாராக இருந்து, அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இப்போது தொடங்கி, 20 வயது வரை, உங்கள் குழந்தையை சரியாக கண்காணித்து வளர்த்து விட்டால் போதும். பின்னர், ஆயுள் முழுவதும் கவலைப்படத் தேவையில்லை.

---




> பாதீனிய ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

**"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்அந்நிலம்
பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்"**
**—தொல்காப்பியம்**

போர்கள் எல்லாமே சூழலுக்குக் கேடானவை. ஈழத்தின் மீதான அடுத்தடுத்த போர்களில் அதன் சுற்றுச்சூழல் மோசமாகப் பாதிக்கப்பட்டு வரும் அதேவேளை, அதன் மீது சத்தமில்லாத இன்னொரு போர் தொடுக்கப்பட்டுள்ளது. இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் போது அதனோடு சேர்ந்து வந்த பாதீனியம், இன்னுமொரு அந்நிய இராணுவமாக ஈழத்தின் இயற்கைச் சூழலை சூறையாடி வருகிறது. இந்திய இராணுவம் ஈழத் தமிழர்களின் அரசியல் சூழலில் ஏற்படுத்திவிட்டிருக்கும் காயங்களுக்கு காலம் சிலவேளைகளில் களிம்பு தடவக்கூடும். ஆனால் இந்தப் பச்சை இராணுவம் சுற்றுச் சூழலில் ஏற்படுத்தி வரும் ரணங்கள் காலா காலத்துக்கும் ஆற்றமுடியாத பெரும் வலிகளாகவே இருக்கப் போகின்றன.

பாதீனியச் செடிகள் இந்தியாவில் இருந்து ஈழத்துக்குள் நுழைந்த போதும் இவற்றின் தாயகம் இந்தியா அல்ல. மெக்சிக்கோ வளைகுடாக் கரையை அண்டிய வெப்ப மண்டல அமெரிக்க நாடுகளே இவற்றின் பூர்வீகம். அமெரிக்காவில் 1954 இல் அபரிமிதமாகக் கோதுமை விளைந்த போது அதைக் கடலில் கொட்டாமல் வறுமையால் வாடும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடிவு செய்தார்கள். வல்லரசுகளின் உதவிகளிலே கூட ஏதேனும் ஓர் உபத்திரவம் ஒளிந்து கொண்டிருக்குமே!

அப்படி, மும்பைத் துறைமுகத்தில் வந்திறங்கிய கோதுமை தானியங்களோடுதான் இந்தியாவுக்குள் பாதீனிய விதைகளும் கலந்து வந்திறங்கின.

இந்திய இராணுவம் ஈழத்தில் புகுந்த போது அவர்களது இராணுவ வாகனங்களுடனும் உணவுக்காக கொண்டுவரப்பட்ட செம்மறி ஆடுகளுடனும் கடுகு விதைகளுடனும் அங்கிருந்து சேர்ந்து வந்த பாதீனிய விதைகளே ஈழமண்ணில் பாதீனியச் செடிகளுக்கான முதல் விதைப்பு. காங்கேசன்துறை முதல் திருகோணமலை துறைமுகம் வரை இந்திய இராணுவம் பாசறைகள் அமைத்த இடங்களில் எல்லாம் பாதீனியச் செடிகளும் சேர்ந்தே குடியேறின. இன்று இந்திய இராணுவம் இல்லை.

ஆனால் அது அழைத்து வந்த பாதீனியச் செடிகள் பல்கிப் பெருகி முகாம்கள் இருந்த பகுதிகளில் எல்லாம் இயற்கைச் சூழலை தமது கட்டுக்குள் கொண்டு வந்துள்ளன. அங்கிருந்தவாறே, ஓர் இராணுவத்தைப் போன்று பசுமைப் போர் வையில் தம்மை உருமறைத்த வாறு பயிர்ச் செய்கை நிலங்கள், கைவிடப்பட்ட காணிகள், வீதியோ ரங்களில் எல்லாம் புதிது புதிதாக நிலை எடுத்து வருகின்றன. *(வளரும்)*

*(நன்றி: ஏழாவது ஊழி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நீரியல் வளத்துறை திணைக்கள கட்டடப் பணி ஆரம்பம்

கிளிநொச்சி, டிசெ.4

கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்கான கட்டடப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த திணைக்களம் கிளிநொச்சியில் 155 ஆம் கட்டையில் வசதியீனங்கள் மத்தியில் சிறிய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்தத் திணைக்களத்துக்கு புதிய கட்டடத்தை அமைக்க முன்வந்துள்ள கடற்றொழில் அமைச்சு இதற்காக 30 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிகழ்வில் முதற் கட்டமாக 6 மில்லியன் ரூபா திணைக்களத்துக்கு அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து 155 ஆம் கட்டையில் இயங்கி வரும் கடற்றொழில் திணைக்களத்துக்கு அருகில் புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. (வ-115)



தகவல் தொழில்நுட்ப அமைச்சின் 'நெசனல' அறிவகத் திட்டத்தில் வழங்கப்பட்ட கணினிகளில் பயிற்சி பெற்ற புவேந்தன் முன்பள்ளி சிறார்களுக்கான கணினிப் பரீட்சை திங்கட்கிழமை நடத்தப்பட்டது. சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெற்ற கணினிப் செய்முறைப் பரீட்சையில் புவேந்தன் முன்பள்ளியில் கற்கும் அடுத்த வருடம் பாடசாலைகளில் இணையவுள்ள 40 மாணவர்கள் பங்கு பற்றினர். இந்தப் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அமைச்சால் சான்றிதழ்கள் வழங்கப்படுமெனவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## நடமாடும் சேவை மூலம் உதவிப் பணத்தை வழங்குக

*கரியாலை நாகபடுவான் பிரிவு மக்கள் கோரிக்கை*

பூநகரி, டிசெ.4

பூநகரி கரியாலை நாகபடுவான் பிரிவில் உதவிப் பணம் பெறும் மக்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளை நடமாடும் சேவை மூலம் வழங்குமாறு பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

இந்தப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம், நோய் உதவி, 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஆயிரம் ரூபா ஆகிய கொடுப்பன வுகளைப் பெறுவதற்கு 15 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள முழங்காவில் தபால் அலுவலகத்துக்கு பெரும் சிரமத்தின் மத்தியில் சென்று வருகின்றனர்.

பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் மற்றும் முழங்காவில் தபாலதிபர் ஆகியோர் இணைந்து மாதத்தில் ஒரு நாள் தமக்குரிய கொடுப்பனவை நடமாடும் சேவை மூலம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இதனால் கொடுப்பனவு பெறச் செல்வோரின் பயணக் கஷ்டங்கள் நீங்கும் என்றும் தெரிவித்தனர்.

இதேவேளை கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு கிராம மக்களுக்கு நடமாடும் சேவை மூலம் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மலையாளபுரம், பாரதிபுரம் , கிருஷ்ணபுரம், விவேகானந்த நகர் போன்ற பிரிவு மக்களுக்கு கிளிநொச்சி தபாலதிபர் ஊடாக நடமாடும் சேவை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (வ-9)

## கஞ்சாவுடன் சிக்கினார் நாவற்குழி வாசி

தென்மராட்சி, டிசெ.4

போதைப் பொருளான கஞ்சா வைத்திருந்த நாவற்குழி வாசி சாவகச்சேரி பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

இந்த நபரை ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். (ஒ-9)

## கரைச்சிப் பிரதேச செயலக மூத்த பிரஜைகள் கௌரவிப்பு

கிளிநொச்சி, டிசெ.4

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் கிராம மூத்த பிரஜைகள் அமைப்பின் முதியோர் கௌரவிப்பும் ஒன்று கூடலும் நாளை வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு ஊற்றுப்புலம் சேவை நிலையத்தில் இடம்பெறும்.

அமைப்பின் தலைவர் நா.சின்னையா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக கரைச்சி பிரதேச சபைத் தலைவரும், கிராமத்தின் முன்னாள் திட்ட இணைப்பாளருமாகிய நா.வை.குகராசா, சோஆ.நிறுவன கிளிநொச்சி மாவட்ட திட்ட இணைப்பாளர் ஜென்ஸ்வரன், தபாபரன், நைல்ஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். கிராமத்தின் மூத்த பிரஜைகள் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.(வ-9)

## அதிபர்களுக்கான கூட்டம்

வடமராட்சி, டிசெ.4

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாதாந்த முன்னேற்ற அறிக்கை மீளாய்வு செய்யப்படவிருப்பதால் அதிபர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் இ.நந்தகுமார் கேட்டுள்ளார். (வ-8)

## 'ஞானச்சுடர்' சஞ்சிகை வாசகர்களுக்குப் போட்டி

வடமராட்சி, டிசெ.4

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மிக சஞ்சிகை வாசகர்களிடையே போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரை வெளியான 'ஞானச்சுடர்' சஞ்சிகையிலிருந்து இந்தப் போட்டிக்கான வினாக்கள் கேட்கப்பட்டுள்ளதால் விடைகளும் அந்தச் சஞ்சிகையிலிருந்தே எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பங்களை வாசகர் போட்டிக் குழு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை செல்வச்சந்நிதி, தொண்டமானாறு என்ற முகவரிக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். போட்டியின் பெறுபேறுகள் தை மாத ஞானச் சுடரில் வெளியிடப்படுவதுடன் பரிசில்கள் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டு விழாவில் வைத்து வழங்கப்படும். (வ-8)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.



**இடபம்:** மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். முன்கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும்.



**மிதுனம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.



**கடகம் :** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**சிங்கம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**கன்னி:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச கரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**நாளை**

கார்த்திகை-19 வியாழக்கிழமை 05.12.2013

திதி: திருதியை பி.இ.11.56 வரை

நட்சத்திரம்: பூராடம் பி.இ.01.53 வரை

சுபநேரம்: 07.46 - 09.16 வரை

இராகுகாலம்: 01.46 - 03.16 வரை



**துலாம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.



**விருச்சிகம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும். மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிட வேண்டாம்.



**தனுசு:** எதிர்மறை எண்ணங்கள் வந்து போகும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியைக் கலந்தாலோசிப்பது நல்லது.



**மகரம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.



**கும்பம்:** சில தினங்களாகத் தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.



**மீனம்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவை பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் ...ள மகிழ்ச்சி தரும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 6 | | 9 | 3 | | | |
| | 9 | | | 4 | 7 | 8 | 6 | 5 |
| | | | | | | | | 4 |
| 8 | | | 9 | 6 | | | 1 | 7 |
| | | | | | | | | |
| 5 | 1 | | | 7 | 2 | | | 3 |
| 3 | | | | | | | | |
| 9 | 6 | 7 | 8 | 5 | | | 2 | |
| | | | 2 | 3 | | 7 | | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 2 | 3 | 4 | 7 | 5 | 9 | 8 |
| 7 | 3 | 4 | 5 | 8 | 9 | 2 | 6 | 1 |
| 5 | 8 | 9 | 1 | 6 | 2 | 3 | 7 | 4 |
| 3 | 9 | 6 | 2 | 7 | 8 | 4 | 1 | 5 |
| 1 | 2 | 5 | 4 | 9 | 3 | 6 | 8 | 7 |
| 8 | 4 | 7 | 6 | 1 | 5 | 9 | 2 | 3 |
| 9 | 5 | 1 | 7 | 2 | 4 | 8 | 3 | 6 |
| 2 | 7 | 3 | 8 | 5 | 6 | 1 | 4 | 9 |
| 4 | 6 | 8 | 9 | 3 | 1 | 7 | 5 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டாங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மாதப் போட்டியில் வெற்றியீட்டியோர்

சாவகச்சேரி நுணாவில் பொது நூலகத்தினரால் முன்பள்ளி சிறார்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள் ளன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**முன்பள்ளிகளுக்கான போட்டிகள்**

**சொல் சேர்த்தல்**

பாரதி முன்பள்ளி- நி.அபிஷா, ச.வி.பிரித்திகா, த.மகிஷன், கலைமகள் முன்பள்ளி -சு.சுலக்ஸன், லோ.தண்ணிலா, சி.அபர்ணா, அம்பாள் முன்பள்ளி- இ.கீர்த்தனா, நி.பிரியலதா, பி.கரணி.

**வர்ணம் தீட்டல்**

பாரதி முன்பள்ளி-ச.தமிழிசை, யோ.வினுஷிகா, ந.யாழரன், கலைமகள் முன்பள்ளி- கு.சுலக்ஸன், ர.கஜலசிகா, சி.அபர்ணா, அம்பாள் முன்பள்ளி- இ.கீர்த் தனா, நி.பிரியலதா, பி.கரணி.

**பாடசாலை மாணவர்களுக்கான போட்டி (வாசிப்பு- கீழ்ப் பிரிவு)**

சி.வனோஜா-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, ந.சரண்யா-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, அ.மோகன் ராஜ்-மட்டுவில் தெற்கு சரஸ் வதி வித்தி.

**உரத்து வாசிப்பு (ஆங்கிலம் - கீழ்ப் பிரிவு)**

சி.வனோஜா-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, ஆர்.தவி னுகன்-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, ஆ.மோகன் ராஜ் - மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி.

**பந்தி வாசித்தல் (ஆங்கிலம் -கீழ்ப் பிரிவு)**

வை.அருள்மொழி -சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ஆர்.தவினுகன் -சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, ஆ.மோகன் ராஜ்-மட்டுவில் தெற்கு சரஸ் வதி வித்தி.

**சித்திரப் போட்டி**

வி.வைஸ்ணவி-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, உ.சஞ்சஸ்- சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

(வ-9)


## பிறந்தநாள் வாழ்த்து

இன்று (04.12.2013) தனது பிறந்த நாளை கொண்டாடும்

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த

**குனகரட்ணம் விஷாந்தன்**




அண்ணா நீங்கள் இன்னும் பல்லாண்டு காலம் பதினாறும் பெற்று நீடூழி வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.
எல்லோரதும் அன்பும் ஆசியும் என்றென்றும் உங்களுக்கு கிடைக்கவேண்டுமென எல்லாம் வல்ல சந்நிதி முருகனை அருள்வேண்டி பிரார்த்தித்து நிற்கின்றோம்

நண்பர்கள்.

(40795)(10.6.3)


## களை பிடுங்குவதில் ஆர்வம்

ஆனைக்கோட்டை நவாலிப் பகுதி வயல்களில் விவசாயிகள் தற்போது களை பிடுங்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்தப் பகுதிகளில் கடந்த இருநாள்களாக தொடர்ந்து பெய்த மழை காரணமாக விவசாயி கள்களை களைப் பிடுங் குவதில் மும்முரம் காட்டி வருகின்றனர். ஆயினும் வயல்களில் வெள்ளம் போதாத காரணத்தால் உரம் விசிற முடியாதுள்ள தாக விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது. (ந-100)

## பதவி ஏற்பு

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக ஜி.றஜீப் கடந்த 22 ஆம் திகதி முதல் பதவியேற்றுள்ளார். இங்கு வைத்திய அதிகாரியாக பணியாற்றிய எஸ்.சுகனுஷா கோப் பாய் வைத்திய அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ந-100)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை

2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற

Best Wishes

Congratulations

| | |
|---|---|
| செல்வி லதாங்கி விஜயகாந் | -170 |
| செல்வன் பிரான்சிஸ் சாம்பெஸ்கி | - 167 |
| செல்வி தர்சனா முல்லைக்குமரன் | -156 ஆகியோரையும் |

100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களான

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப.தர்சிகா | 152 | ரா.டவின்சன் | 138 | மை.சுவேதினி | 111 |
| இ.அபிதா | 144 | ச.டிவானா | 123 | ரூ.டொறின் | 109 |
| தே.அன்ரனிசஜீபன் | 143 | மு.காசிம் | 118 | எ.தேனுஜா | 109 |
| ர.சுஜீவன் | 142 | வி.சாம்ஷன் | 117 | ஜெ.கொலினா | 107 |
| ச.இசைவாணன் | 141 | ம.லக்ஸ்மகாந்தன் | 112 | கோ.தனுஸ்ஸியன் | 107 |

ஆகியோரையும் வழிகாட்டிய ஆசிரியர்களான திரு.சோ.ஜிரோசன், திருமதி ச. குலேந்திரராஜா ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம். எமது பாடசாலைக்குப் பெருமையையும், நன்மதிப்பையும் தேடித்தந்து சாதனை படைத்த மாணவர்கள் மேன்மேலும் வளரவும், ஆசிரியர்கள் பணி என்றும் சிறப்புறவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மு/முல்லைத்தீவு றோ.க.த.க பாடசாலை

(கி/14210) (7.6.3)



## பாராட்டி வாழ்த்துகிறோம்





CONGRATULATIONS!

எமது வித்தியாலய முதல்வர்
**ஐயம்பிள்ளை தேசவன்** அவர்களுக்கு அதிபர் தரம் கிடைத்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி **கொன்சிய ரூபராணி கிருபானந்தன்** புலமைப் பரிசில் கல்விச் சுற்றுலாவில் கொரியா சென்று வந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர்கள், மாணவர்கள்
கிளி/கிராஞ்சி அ.த.க. பாடசாலை, சிவபுரம், பூநகரி.

(40764)(7.6.3)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

CONGRATS!

சாமஸ்ரீ தேசமானிய

## தணிகாசலம் ஜெயரூபன் J.P.

**(கணக்காய்வாளர்/வருமானவரி ஆலோசகர்)**





Congratulations

பருத்தித்துறைசு, கற்கோவளம் பகுதியில் வசிப்பவரும், நெல்லியடிப் பிரதேசத்தில் கணக்காய்வு நிறுவனத்தை நடத்திவரும் கணக்காய்வாளரும், வருமானவரி ஆலோசகரும், யா/கற்கோவளம் மெ.மி.த. க. பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவராகவும், பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் ஆகவும் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வரும் இவர் சர்வதேச லயன் கழக உறுப்பினராகவும், யா/ஹாட்லிக்கல்லூரி பருத்தித்துறை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்காய்வாளராக சேவையாற்றுவதோடு, கற்கோவளம் கிராம முன்னேற்ற சங்கம் மற்றும் சனசமூக நிலையத்தின் உபதலைவராகவும் சேவையாற்றிவரும் சமூக சேவையாளருமான தணிகாசலம் ஜெயரூபன் அவர்கள் **சமாதான நீதிவான் பட்டம்** மற்றும் **அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் கௌரவிக்கப்பட்டு** வழங்கப்பட்ட **சாமஸ்ரீ தேசமானிய** விருதினைப் பெற்றுக்கொண்டமைக்காக அவரை உளமாரவாழ்த்தி அவர் மேன்மேலும் பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்று நலமுடன் வாழ ஸ்ரீ வல்லிபுர மாயவனின் அருள்வேண்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

**பொ.[illegible] குடும்பம்**

**கூவில், புலோலி தெற்கு, புலோலி.**

(40032)(45.3.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறைகள் வாடகைக்கு**

யாழ்.குமாரசாமி வீதியில் (பல்கலைக் கழகத்துக்கு மிக அருகில்) பாதுகாப்பான, அமைதியான சூழலில் பெண்களுக்கான அறைகள் வாடகைக்குஉண்டு. (40740) (12.3.6)

**தொடர்பு: 077 431 9797**

**மலிவு விலையில்...**

நிப்போன் சிமெந்து சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள

**றோயல் ஹாட்வெயர்**

129,ஸ்ரான்லி றோட், யாழ்.

தொடர்பு: 021 221 9300 (40718) (45.6.3)

## வவுனியாவில் காணி விற்பனைக்கு

4 பேர்சஸ் கொண்ட காணித்துண்டு கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

62A, அம்மன் கோவில் வீதி, பண்டாரிக்குளம், வவுனியா.

மேலதிக தொடர்புகளுக்கு:

**077 3268989**

(C/14124) www.adinnovations.lk

## NEW PANASONIC VIDEO CAMERA விற்பனைக்கு உண்டு

Model:- Panasonic AG - AC 90



(C14233)(2.6.3)

தொடர்பு:

**077 772 5258, 077 387 6615**

## வசந்த மண்டபம் புனரமைப்பு

நீர்வேலி கந்தசாமி கோயில் வசந்த மண்டபம் புனரமைப்புச் செய்யப்படுகின்றது. முன் மண்டபம் அலங்கார வளைவுகளுடன் கூடிய மூடு மண்டபமாக புனரமைப்பு செய்யப்பட்டு முடிந்ததை அடுத்து வசந்த மண்டப புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இந்தப் புனரமைப்பு வேலைகளுக்காக பல லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது. (ஓ-11)

## இலக்கியமன்ற கலந்தாய்வு

யாழ்ப்பாணத்தில் தற்போது வீழ்ச்சி கண்டுவரும் இலக்கியத்துறையை எழுச்சி காண வைக்க திசைகாட்டி தனியார் நிறுவனம் தனது சொந்த நிதி ஊட்டத்தில் திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் என்ற அமைப்பைத் தோற்றுவித்துள்ளது. சுதந்திரமாக இயங்கவுள்ள மேற்படி அமைப்புக்கு வருடம் தோறும் 2 லட்சம் நிதி ஊட்டம் திசைகாட்டியிடம் இருந்து கிடைக்கு மெனவும், இது தொடர்பான கலந்தாய்வு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு திசைகாட்டி அலுவலகத்தில் நடை பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் 0212219016, 0215689090 என்ற தொலைபேசி இலக்கங்களூடாகத்தொடர்புகொண்டு முற்பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## மாற்று வலுவுடையோர் தின விழா

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் சர்வதேச மாற்று வலுவுடையோர் தின விழா ரி.சி.ரி.சொர்ணாம்பிகை மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராசநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணியும், நொத்தாரிசுமான ஞானலோஜினி சிவஞானமும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா, யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந)

**தவறிவிட்டது**

உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் சிவானந்தம் சிவானுஜா 885010652V இலக்கமுடைய தேசிய அ.அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது.

(40792) (12.3.6) **தொடர்பு: 075 869 0193**

# கேள்வி அறிவித்தல் - 2014

## கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட நிலையங்களை 01.01.2014 தொடக்கம் 31.12.2014 ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்: | அலுவலக நாள்களில் மு.ப 8.30- பி.ப 3.00 மணி வரை 04.12.2103 - 18.12.2013 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியும் நேரமும்: | 19.12.2013 - மு.ப 9.30 மணி வரை |
| கேள்வி திறக்கும் திகதி: | 19.12.2013 மு.ப 10.30 மணி |
| கேள்வி திறக்கும் இடம்: | கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம் |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும் என்பதுடன் அதன் நிழல்படப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT, நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **மாட்டிறைச்சிக் கடைப் பெயர்** | | | |
| 1 | கல்லாறு | 10,000.00 | 1,000.00 | 352,000.00 |
| 2 | ஸ்கந்தபுரம் | 20,000.00 | 1,000.00 | 782,100.00 |
| 3 | முரசுமோட்டை | 10,000.00 | 1,000.00 | 244,530.00 |
| 4 | ஜெயந்திநகர் | 10,000.00 | 1,000.00 | 397,100.00 |
| 5 | ஊற்றுப்புலம் | 10,000.00 | 1,000.00 | 435,710.00 |
| 6 | உருத்திரபுரம் D/10 | 10,000.00 | 1,000.00 | 220,330.00 |
| 7 | இராமனாதபுரம் | 10,000.00 | 1,000.00 | 327,250.00 |
| 8 | வன்னேரி | 10,000.00 | 1,000.00 | 185,240.00 |
| 9 | அம்பலப்பெருமாள் சந்தி | 10,000.00 | 1,000.00 | 187,715.00 |
| 10 | கண்டாவளை | 10,000.00 | 1,000.00 | 134,200.00 |
| 11 | பரந்தன் | 20,000.00 | 1,000.00 | 649,561.00 |
| 12 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | 720,500.00 |
| 13 | இரணைமடு | 40,000.00 | 1,000.00 | 1,210,110.00 |
| 14 | புன்னைநீராவி | 10,000.00 | 1,000.00 | 181,610.00 |
| 15 | வட்டக்கச்சி | 20,000.00 | 1,000.00 | 635,800.00 |
| 16 | கிளிநொச்சி | 40,000.00 | 1,000.00 | 3,305,500.00 |
| 17 | உருத்திரபுரம் D/8 | 10,000.00 | 1,000.00 | 66,000.00 |
| | **கோழி இறைச்சிக் கடை** | | | |
| 1 | இரணைமடு | 10,000.00 | 1,000.00 | 401,500.00 |
| 2 | கிளிநொச்சி இல -02 | 40,000.00 | 1,000.00 | 1,562,000.00 |
| 3 | பரந்தன் | 10,000.00 | 1,000.00 | 220,110.00 |
| 4 | கிளிநொச்சி இல -01 | 40,000.00 | 1,000.00 | 1,430,000.00 |
| 5 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | 97,020.00 |
| | **ஆட்டிறைச்சிக் கடை** | | | |
| 1 | கிளிநொச்சி | 10,000.00 | 1,000.00 | 150,000.00 |
| 2 | பரந்தன் | 10,000.00 | 1,000.00 | 100,000.00 |
| 3 | தர்மபுரம் | 10,000.00 | 1,000.00 | 100,000.00 |
| | **துவிச்சக்கர வண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம்** | | | |
| 1 | கிளிநொச்சி | | | 1,244,211.10 |

**நிபந்தனைகள்**

1 உரிய காலத்தில் சமர்பிபிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்

2 கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும் , கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்

3 கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு

4 சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்

5 மேலதிக விவரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்

வைத்திலிங்கம் குகராசா
தவிசாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C14225)(2.6.3)

## பகிரங்க ஏலவிற்பனை

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டு உரிமை கோரப்படாத சான்றுப் பொருள்கள் எதிர்வரும்சனிக்கிழமை பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. ஏல விற்பனை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்படும். பொருள்கள் கொள்வனவு செய்பவர்கள் அதற்கான கொடுப்பனவை பணமாகவே செலுத்த வேண்டுமெனவும் காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (ந)

## சிறுவர் சித்திரப் போட்டி

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் வடமாகாண சிறுவர்களது உளவள ஆற்றலை மேம்படுத்தும் சிறுவர் சித்திரப் போட்டி

போட்டியின் எண்ணக் கருக்கள்:
* சிறுவர்களது முன்னேற்றப்பாதைகள்
* சமகால சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
  6 - 12 வயது கீழ்ப் பிரிவு
  13 - 17 வயது மேல் பிரிவு
* ஒருவர் ஒரு ஆக்கம் மட்டுமே அனுப்புதல் வேண்டும்.
* ஆக்கங்கள் பாடசாலை அதிபர் அல்லது கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்ப வேண்டும்.
* படம் வரைந்த மறு பக்கத்தில் சித்திரத்தின் தலைப்பு, வரைந்தவரது பெயர், தரம், பாடசாலை, பிறந்த திகதி, வசிக்கும் இடம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
* வரைவதற்கு A3 தாள் மட்டுமே உபயோகிக்கப்படுதல் வேண்டும்
* சித்திரங்கள் டிசெம்பர் 15 ஆம் திகதிக்குள் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (நேரிலும் தரலாம்)

இரு பிரிவுகளிலும் வெற்றி பெறுபவர்களுக்கு
முதலாம் பரிசு - 10,000.00
இரண்டாம் பரிசு - 5,000.00
மூன்றாம் பரிசு - 3,000.00

**10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்**

பெற்றுக்கொள்ளப்படும் அனைத்துச் சித்திரங்களும் பொது மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டு நடுவர்களால் தெரிவு செய்யப்படும். (40803)(2.6.3)

ஆக்கங்களை வரைந்து அனுப்ப வேண்டிய முகவரி

சிறுவர் சித்திரப் போட்டி, சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்,
இல.60A, பழைய பூங்கா வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**தவறிவிட்டது**

உடுவில் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த செல்வத்துரை குகன் என்பவரின் தேசிய அ.அ.(561891311V), கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்துக்கும், கொக்குவிலுக்குமிடையில் தவறி விட்டது.

(40794) (12.3.6) **தொடர்பு: 077 118 4111/077 975 7500**

## LOLC

## மாபெரும் வாகனச்சந்தை கிளிநொச்சியில்

LANKA ORIX FINANCE

LOLC மைக்ரோ கிறெடிட்

உங்களுக்கு உகந்த வகையில் உபயோகிக்கப்பட்ட அநேகவிதமான மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள் டிமோபட்டா உள்ளடங்கலாக 50 வாகனங்கள்,அவ்விடத்திலேயே கொள்வனவு செய்யக்கூடியதொரு அரிய சந்தர்ப்பம்.

2013 டிசெம்பர் மாதம் 09ம் திகதியிலிருந்து 2013 டிசெம்பர் மாதம் 20ம் திகதி வரை.

A-9 ,கண்டி வீதி,கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில்

(C14125)

தொடர்புகளுக்கு
மயூரன் - 0776 50 68 39
சந்திமா - 0665 11 80 80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலையின் ஒளி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.அசோக்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சற்குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி, கோப்பாய் பங்குத் தந்தை அருட்பணி ஞா.வென்சஸ்லஸ், சங்கம நிறுவன இயக்குநர் அருட்பணி எஸ்.அந்தோணிமுத்து, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், யாழ்.வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் தே.மைதிலி ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

♦ ♦ ♦

நாவாந்துறை றோ.க.வித்தியாலய ஒளிவிழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு றொகேஷன் யோசப் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக திட்ட முகாமையாளர் எஸ்.ரி.பீரிஸ்ஸும், கௌரவ விருந் தினராக தூய சவேரியார் குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் துறைத் தலைவர் அருட்பணி ஜே.சி.போல் றொகானும் கலந்து கொள்வர். (ந)

♦♦♦

கொழும்புத்துறை.டிச.4

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வளர்பிறை இயக்குநர் அருட்திரு அ.அமலதாஸ் அடிகளும், சிறப்பு விருந்தினர்களாக தேசிய பயிற்சி இயக்குநர் இளைஞர் ஊழிய நிலைய அதிபர் ரா.ஹரிஹரன், யாழ்.வலய கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் அன்ரனி பீற்றர் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-135)

♦♦♦

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் கே.கே.தவசீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முக குமார் ஆகியோர் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவர்களான இ.நடராசா, இ.சத்தியானந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

♦♦♦

மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு, பாடசாலை அதிபர் இ.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி இ.இராதா, சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் ந.தமிழ்மன்னன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

# கலை இலக்கிய விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம். நவ.4

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் கலை இலக்கிய விழாவும், மலர் வெளியீடும் நாளை வியாழக்கிழமை மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரு அமர்வுகளாக நடைபெறும் இந்த நிகழ்வு கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறும்.

பொன் கந்தையா அரங்காக, காலை அமர்வு 9 மணிக்கு ஆரம்பமாகும். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் சு.அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் எஸ்.தில்லைநடராஜா, கௌரவ விருந்தினராக வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி ஆகியோர் கலந்து கொள்வர்.

மாலை நிகழ்வுகள் செ.கதிர்காமநாதன் அரங்காக பி.ப. 2.30 மணிக்கு ஆரம்பமாகும். நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண மீன்பிடி துறை முதலமைச்சரின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராசா ஆகியோர் கலந்து கொள்வர். (ந-35)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



சின்னத்துரை மகாலிங்கம் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி நெ.கஜநிதிபாலன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். சுன்னாகம் வடக்கு சின்னத்துரை தம்பதிகளின் புதல்வரான மகாலிங்கம் சுன்னாகம் தி ஞானசம்பந்தர் வித்தியாலயம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் பேராதனைப் பல் கலைக்கழக கலைப்பட்டதாரியும் ஆவார். ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராக வும் உதவிக் கல்விப் பணிப்பாளரா வும் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவ தற்சமயம் சுன்னாகம் ஐயனார் ஆலய நிதி உதவியாளராகவும் ஸ்ரீ கா அம்பாள் ஆலய உப தலைவராகவு உள்ளார். (ந-7)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஐயாத்துரை பூபாலசிங்கம்**

திதி: துதியை (04.12.2013)

தோற்றம்
11 ★ 09 ★ 1931

மறைவு
02 ★ 12 ★ 2005

ஆண்டுகள் எட்டு ஆனபோதும்
எம் உள்ளத்திலின்றும் அணையாது
எம் தந்தையின் நினைவுகள்

11, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (40773)(3.6.4)

குடும்பத்தினர்.

## 28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14.12.1924

மறைவு
04.12.1985

**அமரர் E.K. சண்முகநாதன்**

(முன்னாள் கல்விப்பணிப்பாளர்)

அன்பும் பண்பும் நிறைந்த எம் குல விளக்கே
ஆண்டுகள் பல ஓடி மறைந்தனவோ
பல்லாண்டு சென்றாலும் எம் பந்தம் நீர்தானே
நினைவழியா உம் நினைவுத் தடயங்கள்
என்றும் எம் மனங்களில்

*உங்கள் நினைவுகளோடு என்றும் வாழும்*
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

லண்டன். (40801)(45.6.3)

## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி நடராசா



நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும், இல.07, 6ஆம் ஒழுங்கை, வைரவ புளியங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி நடராசா 01.12.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.12.2013) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெட்சணாமருதங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.07, 6ஆம் ஒழுங்கை,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.
(40580)(12)(3.8)

தகவல்:
குடும்பத்தினர்
0242224741

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா மாணிக்கம்



தம்பாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மாணிக்கம் நேற்று (03.12.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் கனகரெட்ணம், அற்புதராசா (கொழும்பு), காலஞ்சென்றவர் களான மகேஸ்வரி, ரோசாமலர் மற்றும் நேசமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கந்தையா, காலஞ்சென்றவர்களான சதாசிவம், குமாரசாமி (கெரக்குவில்), ஈஸ்வரிதேவி மற்றும் ராஜசுலோசனா, அன்னபூரணம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிறி, பாஸ்கரன் (கனடா), சுகந்தினி (கனடா), ஜேந்தினி (கனடா), யாழினி, மைதிலி (பிரான்ஸ்), பாலேந்திரன் (பிரான்ஸ்), கவீந்திரன் (பிரான்ஸ்), கஜீந்திரன், நிதர்சன் (பிரான்ஸ்), கவிதா (கொழும்பு), நிவாஸ் (பிரான்ஸ்), சசீலன் (பிரான்ஸ்), குமுதா (சுவிஸ்), சுசிதா (பிரான்ஸ்), கார்த்திகா (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), சித்திரா (பிரான்ஸ்), சதாகரன் (ஜேர்மனி), சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கனகசபை, பூமணி மற்றும் ஐயம்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாச்சிமார் வீதி,
தம்பாலை, அச்சுவேலி.
T.P:077 724 2024, 077 852 4819 (40793)(3.6.45)

தகவல்:
குடும்பத்தினர்.

### வல்லிக்குட்டி முருகேசு (திருத்தணி)

(முன்னாள் தலைவர் - பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை)



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வல்லிக்குட்டி முருகேசு (திருத்தணி) நேற்று (03.12.2013) செவ்வாய்க்கிழமை அதிகாலை தமது இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிக்குட்டி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பு- தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், நவநீதன், ஜெகநீதன் (சந்துஜன் அழகுச் சோலை- நெல்லியடி.), குகநீதன் (லண்டன்), றஞ்சநீதன் (சுவிஸ்), வாசுநீதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் றஞ்சிதலேகா மற்றும் பொலின் யசோதா (லண்டன்), பிரபாஜினி (சுவிஸ்), சுஜாதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், நமசிவாயம் - பிள்ளையம்மா, முருகேசு - கனகம்மா மற்றும் சின்னத்துரை- பொன்னம்மா, பொன்னுத்துரை - சிவக்கொழுந்து, அனுபுத்திரன் - மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தெய்வேந்திரம் - கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனனும், தயாளன் - சங்கீதா, பாஸ்கரன் - ஜெயதீபா, ஜெகன் - சுகிர்தா, சந்துஜன், சங்கீர்த்தன், லக்சணன், சங்கவி, அபிராம், திவ்வியா, தார்மீகன், கபிலாஷ், நிதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும், சாருகேஷன், ஜெபிஷன், அக்ஷரா, றாகுல் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2013) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"திருத்தணி",
அல்வாய் வடக்கு, அல்வாய்.
0212263436/0773975030
Vasuneethan@yagoo.com (40033)(12)(3.8)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் -2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE 6/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
5. தொழில்நுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் விதிக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா நூறு (100/-) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாததிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு **"செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு"** என்ற முகவரிக்கு 20.12.2013 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
5. ஆள்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் பின்னவராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரிய வரும் எச்சந்தர்ப்பதிலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**பதவிகள் பற்றிய விவரங்கள்**

| பதவி இல | பதவிகள் |
|---|---|
| 01 | காரியாலய காரியா சகாயர் - தரம் 111 |
| 02 | நூலக பரிசாரகர் - தரம் 111 |
| 03 | வேலைத் தொழிலாளி – தரம் 111 |
| 04 | சுகாதாரத் தொழிலாளி – தரம் 111 |

சம்பள அளவுத்திட்டம் - PL-1-2006A (11730-10X120-10X130-10X145-12X160-17600)

**கல்வித் தகைமை**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு – 01இல் குறிப்பிட்ட கல்வித்தகைமைகளுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் தரம் 8 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.

| பதவி இல | பதவிகள் |
|---|---|
| 05 | ஆயுள்வேத மருந்தாளர் - தரம் 111 |
| 06 | மின்னிணைப்பாளர் - தரம் 111 |

சம்பள அளவுத்திட்டம் - PL-2-2006A (12210-10X130-10X145-10X160-12X170-18600)

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதி திகதியன்று ஆறு மாதத்துக்கு குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் கல்வி நிறுவனத்திலிருந்து துறைசார்ந்த பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

| பதவி இல | பதவிகள் |
|---|---|
| 07 | சாரதி - தரம் 111 |

சம்பள அளவுத்திட்டம் - PL-3-2006A (12470-10X130-10X145-10X160-12X170-18860)

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்குக் குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று(3) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
3. மோட்டார் வாகன சாரதியாக மூன்று(3) வருட அனுபவத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2 1/2 அங்குலம் உயரம் இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விதிமுறை .கொண்டவராக இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதாரி இரவு பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியை கொண்டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையினை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
6. பெருந்தெரு பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**கு. மிதிலைநாதன்,**
**செயலாளர்,**
**பிரதேசசபை புதுக்குடியிருப்பு**

(C/ 239)(10.6.3)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

சண்டிலிப்பாய் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட நவாலிப் பகுதியில் இன்று புதன்கிழமை கட்டாக்காலி நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பு ஊசி ஏற்றப்படவுள்ளன.

நவாலிப் பகுதியில் நாயின் நகக்கீறல் காரணமாக சிறுமி ஒருவர் சாவடைந்ததைத் தொடர்ந்து விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

காலை 9 மணிக்கு நவாலி வை.எம்.சி.எ. மண்டபத்துக்கு அருகிலும், 10 மணிக்கு நவாலி மணி மண்டபத்துக்கு அருகிலும், 11 மணிக்கு சோமசுந்தரம் வீதியிலும், நண்பகல் 12 மணிக்கு ஆனைக் கோட்டை கொத்துக்கட்டி வீதியிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகவும், பொது மக்கள் தமது வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசியை தவறாது ஏற்றுவிக்கும் படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-86)

# வலிகாமம் தென்.மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
# 2014 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

**வலிகாமம் தென்.மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றை 02.11.2013 ஆம் திகதி சனிக்கிழமை உதயன், வலம்புரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்விப் படிவக் கட்டணம் கேள்வி வைப்பு, வாடகை தொடர்பான அதே நிபந்தனைகளுக்கு அமைவாக 2014 ஆம் ஆண்டுக்கான கேள்விகள் பின்வரும் விவரப்படி 01.01.2014 தொடக்கம் 31.12.2014 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. மேலதிக விவரங்களை உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 10.12.2013 பிற்பகல் 1.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 11.12.2013 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி பத்திரம் திறக்கப்படும் திகதி : 11.12.2013 பிற்பகல் 2.00 மணி

| இல. | சந்தைகளின் விவரம் | கேள்வித் தொகை |
|---|---|---|
| 01 | **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | |
| | 1. மானிப்பாய் பொதுச் சந்தை | 1202000.00 |
| | 2. மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 136100.00 |
| 02 | **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | |
| | 1. சாவற்கட்டுச் சந்தை | 182175.00 |
| | 2. ஆனைக்கோட்டைச் சந்தி கோழி இறைச்சிக் கடை | 52500.00 |
| 03 | **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | |
| | 1. மாகியப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 51100.00 |
| | 2. மாகியப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 11000.00 |
| | 3. மாதகல் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 51150.00 |

**சண்முகம் சிவகுமாரன்**
பதில் தவிசாளர்
**வலி.தென்மேற்கு, பிரதேசசபை, மானிப்பாய்.**

03.12.12013 (சி.14240) (2.6.3)

ACTED

European Union

# ACTED இலங்கை
## சமூக மட்ட அமைப்புக்களுக்கான சிறு நன்கொடை திட்டத்திற்கான விண்ணப்பம் கோரல்

ACTED நிறுவனம் 1993 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஓர் அரச சார்பற்ற நிறுவனம் ஆகும். இதன் தலைமையகம் பாரிசில் அமைந்துள்ளது. வெளிப்படைத்தன்மையான பாகுபாடற்ற கொள்கைகளின் பிரகாரம் அரசியல் மற்றும் மத நடுநிலைமையை மதிக்கின்ற சுதந்திரமான, தனிப்பட்ட, இலாபநோக்கு அல்லாது செயற்படும் ஓர் நிறுவனம் ஆகும். டிசெம்பர் மாதம் 2004ஆம் ஆண்டு சுனாமியால் ஏற்பட்ட விளைவுகளின் பின்னர் அக்ரெட் நிறுவனம் தனது பணிகளை இலங்கையில் ஆரம்பித்தது.

இச் சிறு நன்கொடைத்திட்டமானது NSA என்ற திட்டத்தின் ஊடாக சமூகமட்ட அமைப்புக்களை விருத்தி செய்வதற்கான அபிவிருத்தித் திட்டமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ACTED நிறுவனத்தால் அமுல்படுத்தப்படுகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட சமூக மட்ட அமைப்புக்கள் யாவும் இத்திட்டத்தினைப் பெறத் தகுதியுடையவர்கள். விண்ணப்பதாரிகள்.

* சுகாதாரம் ( HIV, Aids, உளச்சமூகப் பிரச்சினைகள், மாற்றாற்றல்)
* பால்நிலை சமத்துவம்.
* சுற்றுச்சூழல் மற்றும் சூழல் மாற்றம்.

ஆகிய மூன்று திட்டங்களினூடாக சிறு நன்கொடைத்திட்டத்தினை பெற தகுதியுடையவர்கள்.

விண்ணப்பதாரிகள் சிறு நன்கொடைக்கான விண்ணப்பப் படிவத்தினை,

1. நான்கு மாவட்டங்களையும் சார்ந்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
2. அக்ரட் அலுவலகம், கந்தசாமி கோவில் அருகில், ஏ9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
3. அல்லது 0777419518 என்ற தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தி மின்னஞ்சல் ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.-


விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து, மின்னஞ்சலில் அல்லது கடிதத்தில் **'சிறு நன்கொடை திட்டபோட்டிக்கான விண்ணப்பப் படிவம்'** எனக் குறிப்பிட்டு கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு (killinochchi.sgcoordinator@acted.org) அல்லது **அக்ரட் அலுவலகம், கந்தசாமி கோவில் அருகில், ஏ9 வீதி, கிளிநொச்சி** விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 15.12.2013

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்துடன் தங்கள் அமைப்பு பதிவு செய்தமைக்கான சான்றிதழின் பிரதி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம், வங்கிக் கணக்கு புத்தகத்தின் பிரதி ஆகியவற்றினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறது. இதனை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில் தங்கள் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 60ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



தோற்றம் 08.11.1951 மறைவு 06.10.2013

### அமரர் கந்தன் ஸ்ரீஸ்கந்தராசா

*கண்ணீருக்கு தடை போட்டது போல*
*உம் நினைவுகளுக்கு தடைபோட முடியவில்லை*
*நினைவுகளை மட்டும் நிறையவே தந்துவிட்டு*
*நீர் எங்கு சென்றீரோ!*

கடந்த 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (04.12.2013) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சிங்கைநகர், புலோலி தெற்கு,**
**புலோலி.**
(C/14248)(10.6)
**குடும்பத்தினர்.**

## ஆச்சிபுரம் கிராமத்துக்கு மின் விநியோகம்

வவுனியா மாவட்டத்தின் ஆச்சிபுரம் கிராமத்துக்கு "வடக்கின் வசந்தம்" திட்டத்தின் கீழ் மின்சார இணைப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரத்தின, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





நாகராசா
மகேந்திரராசா (மகேந்தி)
(அதிபர் - யாழ்.இந்து ஆரம்பபாடசாலை)

எமது கல்வி நிறுவனத்தின் பழைய மாணவனும், புகழ் பூத்த விஞ்ஞான ஆசிரியருமான

**நாகராசா மகேந்திரராசா (மகேந்தி)**
அவர்கள் இலங்கை அதிபர் சேவை பதவி உயர்வு பெற்று, சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலையின் அதிபராகச் சிறப்புடன் பணியாற்றி தற்பொழுது யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபராகக் கடமையேற்றுள்ளார். இவரது பணி சிறப்பதாக. இவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்பான கல்விச் சேவையையும் சமூக சேவையையும் ஆற்ற இறை ஆசி வேண்டி, பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**இயக்குநர் - ஆசிரியர்கள்.**
**குகன் கல்வி நிறுவனம். ஆவரங்கால் - புத்தூர்.**
(C/14245)(2.6)

## அறிவித்தல்

### க.பொ.த உ/த தொழில்நுட்பவியல் பிரிவுக்கான மாணவர் அனுமதிகள் - 2013

### G.C.E A/L Technolog Stream Student's Admission - 2013

வடமாகாணக் கல்விப் பிரதேசத்தில் 2013 இல் க.பொ.த உ/தரத்தில் தொழில்நுட்பவியல் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள கீழ் வரும் பாடசாலைகளில் காணப்படும் மாணவர் வெற்றிடங்களுக்கு மாணவர் அனுமதிக்கென ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் 10.01.2014 வரை விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

| இல | பாடசாலை | வலயம் | மொழிமூலம் |
|---|---|---|---|
| 1. | யா/வேலணை மத்திய கல்லூரி | தீவகம் | தமிழ் |
| 2. | யா/வயாவிளான் மத்திய கல்லூரி | வலிகாமம் | தமிழ் |
| 3. | யா /வட்டு இந்துக்கல்லூரி | வலிகாமம் | தமிழ் |
| 4. | யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி | வலிகாமம் | தமிழ் |
| 5. | யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி | யாழ்ப்பாணம் | தமிழ் |
| 6. | யா /யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | யாழ்ப்பாணம் | தமிழ் |
| 7. | யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | யாழ்ப்பாணம் | தமிழ் |
| 8. | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | வடமராட்சி | தமிழ் |
| 9. | யா/ மெதடிஸ்ட் பெண்கள் உயர்தர பாடசாலை | வடமராட்சி | தமிழ் |
| 10. | யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி | தென்மராட்சி | தமிழ் |
| 11. | கிளி / கிளிநொச்சி இந்துக்கல்லூரி | கிளிநொச்சி | தமிழ் |
| 12. | கிளி / கிளிநொச்சி மத்திய கல்லூரி | கிளிநொச்சி | தமிழ் |
| 13. | மு/ வித்தியானந்தாக் கல்லூரி | முல்லைத்தீவு | தமிழ் |
| 14. | மு/ ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் | துணுக்காய் | தமிழ் |
| 15. | மன்/ எருக்கலம்பிட்டி முஸ்லிம் வித்தியாலயம் | மன்னார் | தமிழ் |
| 16. | மன்/ முருங்கன் மகாவித்தியாலயம் | மன்னார் | தமிழ் |
| 17. | வ/ மடுக்கந்த தேசிய பாடசாலை | வவுனியா தெற்கு | சிங்களம் |
| 18. | வ/தமிழ் மத்திய மகாவித்தியாலயம் | வவுனியா தெற்கு | தமிழ் |
| 19. | வ/ செட்டிகுளம் மகாவித்தியாலயம் | வவுனியா தெற்கு | தமிழ் |

**விண்ணப்ப நிபந்தனைகள்**

1. அனுமதி பெற விரும்புவோர் 2012 க.பொ.த சா/த பரீட்சையில் மூன்று திறமைச்சித்திகளுடன் சித்தியடைந்திருப்பதுடன் கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியாவது கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரத்தில் ஏற்கனவே வேறு பிரிவுகளில் அனுமதி பெற்றுக் கற்றுவரும் மாணவர்களும் அப்பிரிவுகளைவிடுத்து இத்தொழில்நுட்பத்துறையை தெரிவு செய்து கொள்ளலாம். எவ்வாறாயினும் கலைத்துறை சார்ந்த மாணவர்களே இத்துறையை தெரிவு செய்வது பொருத்தமானதாகும்.
3. தகைமையும் விருப்பமும் உள்ள மாணவர்கள் குறித்த பாடசாலைகளின் அதிபர்களுடன் தொடர்பு கொண்டு அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்கள் உதவிகள் தேவைப்படின் வலயக்கல்வி அலுவலக அல்லது மாகாணக்கல்வித்திணைக்கள பிரதிக்கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) உடன் தொடர்பு கொள்ளலாம்.

தொழில்நுட்பப்பிரிவு மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களின் விஞ்ஞான தொழில்நுட்பப்பீடங்களில் தொழில்நுட்ப பட்டப்படிப்புகளுக்கான அனுமதிகளுக்கும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற பல்கலைக்கழக கல்லூரிகளில் அனுமதிகளுக்கும் இலங்கை முழுவதும் உள்ள அங்கீகாரம் கொண்ட தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் அனுமதிகளுக்கும் வாய்ப்புக்கள் உள்ளதுடன் இம்மாணவர்களுக்கு தேசிய தொழிற்றகமை (NVQ) சான்றிதழ் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.

வ. செல்வராஜா
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

## தேவை

சங்கென் வட கிளைக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ். நகர் போன்ற இடங்களுக்கு ஓடுவதற்கு நல்ல தரத்தில் குளிரூட்டி வசதியுள்ள Town Ace Van Or Lite Ace Vanதேவை.

**விவரங்களுக்கு : 021 2224840**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
01.09.1951
மறைவு
17.11.2013

கடந்த 17.11.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கிருஸ்ணபிள்ளை சிறிஸ்கந்தராஜா

(ஓய்வுபெற்ற அதிபர் யா/அல்லைப்பிட்டி, பராசக்தி வித்தியாலயம்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.12.2013) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

372, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (40821)(2.6)
இராஜேஸ்வரி (மனைவி)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வயிரமுத்து செல்லையா

பிறப்பு :- 18*06*1925
இறப்பு :- 22*11*2006
திதி: துதியை (04.12.2013)

ஆண்டு ஏழு ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடதாசி ஏற்றுமதிகளை இடைநிறுத்த வேண்டும்

## வாழைச்சேனை கடதாசி ஆலை அதிகாரி வேண்டுகோள்

கொழும்பு.டிசெ.4
இலங்கையில் பயன்படுத்தப் பட்ட கழிவுக் கடதாசிகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய் வதை இடைநிறுத்த வேண்டும் என்று வாழைச்சேனை கடதாசி ஆலை அதிகாரியான மங்களசெனரத்கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்நாட்டு கடதாசித் தொழில் துறையை மேம்படுத்த வேண்டு மானால் பயன்படுத்தப்பட்ட கழிவுக் கடதாசி ஏற்றுமதி உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டியுள்ளது என்று அவர் கூறினார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை யின் கடதாசி உற்பத் திக்குத் தேவைப்படும் அளவுக்கு மூலப் பொருள்கள் கிடைக்காததால் உற்பத்தி கீழிறங்கிச் செல் கின்றது. அதனால் தனியார் வர்த்தகர்கள் மாதாந்தம் 10 ஆயிரம் மெற்றித் தொன் வரையான கழிவு கடதாசிகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய் கின்றனர். அதற்கமைய கழிவுக் கடதாசி ஏற்றுமதியின் மூலம் வருடாந்தம் 132 கோடி ரூபா வருமானம் கிடைக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை வருடாந்தம் நாட்டின் தேவைகளுக்கான கடதாசித் அலுவலகப் பாவனைக்கு கடதாசி அட்டைகளை வாகும் தொகைகளுடன் ஒப்பிடும்போது 848 கோடி ரூபா நட்டம் ஏற்படுகிறது என்று அவர் குறிப்பிட் டார்.

வாழைச் சேனை கடதாசி ஆலைக்கு மாதாந்தம் 4000 மெற்றித் தொன் கழிவுக் கடதாசி தேவைப்படுகிறது. எனினும் 250 மெற்றித் தொன் கழிவுக் கடதாசிகள் மாத்திரமே கிடைக் கின்றன என்று அவர் தெரிவித்தார்.

எனவே வாழைச்சேனை கட தாசி ஆலைக்குத் தேவைப்படும் கழிவு கடதாசிகளை பெற் றுக் கொள்வதற்கு கழிவுக் கடதாசிகள் ஏற்றுமதி தடுக்கப்பட வேண்டும். கழிவு க் கடதாசிகளை சேமித்துக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி கள் ஒத்துழைக்க வேண் டும்.

இவ்வாறு ஒத்துழைப்பு வழங்கினால் மூடப்படக்கூடிய ஆபத் தில் உள்ள ஆலையின் உற்பத் தியை மேம்படுத்தி ஊழியர் களுக்கான கொடுப்பனவு களை அதிகரிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

# கழிவுத் தேயிலை வாகனம் சிக்கியது 3 பேர் கைது

கழிவுத் தேயிலையை ஏற்றிச் சென்று கொண்டி ருந்த கொள் கலன் வாகனம் ஒன்றை பொலிஸ் விசேட அதிரடிப்படை யினர் மடக்கிப்பிடித்துள் ளனர். இங்குருகொடை பகுதியில் வைத்து பிடிக்கப்பட்ட இந்த கொள் கலனு டன் மூன்று சந்தேக நபர்களையும் அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். இந்த நபர்கள் சுமார் 16 ஆயி ரம் கிலோ கழிவுத் தேயி லையை ஏற்றிச் சென்றனர். களனி. தேவஹூவ.எஹெலிய கொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படை யினருக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல் ஒன்றைய டுத்தே குறித்த கொள்கலன் வாக னத்தை நிறுத்தி சோதனைக் குட்படுத்தியுள்ளனர். இதன் போது குறித்த கொள்கலனிலி ருந்து 16,000 கிலோ எடை யுள்ள கழிவுத் தேயிலையை மீட்டெடுத்துள் ளனர். (ச)


கடை, வீடு வாடகைக்கு
திருநெல்வேலி ஆடியபாதம் றோட்டில் வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
077 791 9160 (40826) (10.14)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



2013 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய யாழ் / சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி செல்வி மோ. அனோஜா 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

மேலும் இதே பாடசாலையில் நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவச்செல்வங்களான

ஜெ.டிலைக்சியா (153), வி.சங்கீதா (152), சு.கயாளன் (150), வி.விதுஷா (148), நா.ரினுஷா (144), சு.சுஜீபன் (143), வி.கிருசாந்தி (143), செ.துஷாந்தன் (142), ஜ.ஜதுமிதா (132), கே.வசீகரன் (127), வி.சதுர்சன் (126), மு. அன்வினி (117), மு.தாரணி (111), ர.ரிசானி (104)

இவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள், மற்றும் தரம் 5 வகுப்பாசிரியர் செல்வி சி. எழிலோவியம் இவர்களோடு பரீட்சைக்கு வழிகாட்டி உதவிய புலமைச்சுடர் கையேட்டு நிறுவனத்தினருக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு. திருமதி. மோகனதாஸ்.



SATRON Web designing 077 123 6813

உங்களுக்கான இணையத்தளத்தினை இன்றே உருவாக்கிடுங்கள்!!
உங்கள் வியாபாரங்கள் மற்றும் சேவைகளை விருத்தி செய்திடுங்கள்!!

வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், விளையாட்டு கழகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் போன்றவற்றிற்கான

இணையத்தளங்கள் (Websites)

2999/= மட்டுமே!!
வருட இறுதி விசேட சலுகை!!

விபரங்களுக்கு: 071 825 3124 | 077 236 1465 | 077 175 8830 | 077 345 6493



பிள்ளையார் மெடி கிளினிக்
விசேட வைத்திய ஆலோசனை நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் புத்தூர்.

- வெளிநோயாளர் சேவை (OPD)
- E.C.G (ஈ.சீ.ஜீ) Ultra Sound (Scanning (ஸ்கானிங்)
- சகல விதமான இரத்த, சல, சளி பரிசோதனைகள்
- ஆய்வு கூடங்கள் (Durdans, Ceymed, Metro Pholish)

வருகைதரும் வைத்திய நிபுணர்கள்

- கண் வைத்திய நிபுணர்
- காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்
- இருதய சிகிச்சை நிபுணர்
- மகப்பேறும் பெண் நோயியல் வைத்திய நிபுணர்
- நரம்பியல் வைத்திய நிபுணர்
- தோல் வைத்திய நிபுணர்
- பொது சத்திரசிகிச்சை நிபுணர்கள்
- பொது வைத்திய நிபுணர்கள்
- குழந்தை வைத்திய நிபுணர்
- மூட்டு வாத வைத்திய நிபுணர்

முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளலாம்.

(C/14252)(10.14)

தொடர்புகளுக்கு:
021 321 8869, 021 205 8881


# காற்றால் டெங்கு பரவும் அபாயம்

கொழும்பு.டிசெ.4
வடகீழ் பருவப் பெயர்ச்சி மழையால் டெங்கு நோய் பரவும் அபாயம் நிலவுவதால் எதிர் வரும் சில வாரங்களை தேசிய டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப் படுத்துவது அவசியம் என்று டெங்கு ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயல ணி தீர்மானித்துள்ளது.

டெங்கு ஒழிப்பு தொடர்பான செயலணி கூடி இந்த டெங்கு ஒழிப்பு வாரங்களில் மேற்கொள்ள வேண்டிய விசேட திட்டங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் ஆராய்ந்துள்ளது.

இதற்கமைய உள்ளூராட்சி சபை களை உள்ளடக்கியதாக ஒரு வார செயற்றிட்டமும் கல் வியமைச்சு. சுகாதார அமைச்சு உட் பட மேற்படி செயலணியில் உள்ளடங்கும் அனைத்து அமைச்சுக்களும் இணைந்து மேலும் இரண்டு வாரங்களுக்கு டெங்கு ஒழிப்பு நடவடிக்கை களை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள் ளது. பாடசாலை விடு முறை முடிவடைவ தற்கு முன்னர் இந் தத்திட்டங்கள் அனைத் தும் நிறைவு பெற வேண்டும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறி சேன வலியுறுத்தி யுள்ளார். (ச)


மத்திய கிழக்கில் உடனடி வேலை வாய்ப்பு
10 நாள்களுக்குள் பயணம்
QATAR (நெஸ்லே வோட்டர்)

| | | |
|---|---|---|
| ★ விற்பனை விநியோகஸ்தர்கள் | 45,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 130 பேர் |
| ★ உற்பத்தி தொழிலாளர் | 45,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 96 பேர் |
| ★ A/C டெக்னீஸியன் | 52,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 04 பேர் |
| ★ சாரதிகள் | 72,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 80 பேர் |
| ★ வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் | 100,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் | 04 பேர் |

கடந்த 16.11.2013 யாழ் மாவட்ட செயலகத்தினால் யாழ் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட தொழிற்சந்தையில் கலந்துகொண்டு பயன்பெற்றோர் அதிகம் அதிகம்.....

நேர்முகப் பரீட்சை 08.12.2013

பதிவுகளுக்கு முந்துங்கள் ....
தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதி இலவசம்
அரச அங்கீகாரம் பெற்றவர்கள் PV72052 LL2502

(40819)(10.6.3)

T.P.No: 077 843 6475
021 221 7085
Email: rifraajaffna@gmail.com
www.rifraa.com

தொடர்புகளுக்கு:
Branch Office
Rifraa International (Pvt) Ltd,
No: 95, Muslim College Road,
Jaffna. Sri Lanka.



கண்ணீர் அஞ்சலி



(சி/14251)(10.14)

எமது கழக அங்கத்தவர்
அ.அன்ரனிதாஸ் அவர்களின்
தந்தையார்
மரியான் அருளப்பு
காலமானதையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி விளையாட்டுக் கழகம்.
இலங்கை வங்கி, சுன்னாகம்



வீடு வாடகைக்குத் தேவை
பல்கலைக்கழக சுற்றாடலில் 3 அல்லது 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு தேவை.
தொ.பே: 077 2105311, 077 3386543



தவறிவிட்டது
சாமிநாதன் முருகானந் ஆகிய எனது 821930456 V இலக்க NIC, லைசன்ஸ், இன்சூரன்ஸ், ரக்ஸ், ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் மானிப்பாய் றோட்டிலிருந்து தட்டாதெரு சந்தி, K.K.S. றோட் ஊடாக சிவன் கோயிலுக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
(40828) (10.14) தொடர்பு: 077 623 7980



ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 26.11.1952
மறைவு 15.12.2012

சின்னவன் இரத்தினம்



அன்பான அப்பாவே!
எம்மோடு உற்ற துணையாய் நின்றாய்
நாம் செல்லும் வழியெல்லாம் வழிகாட்டினாய்
சட்டென எம்மைத் தவிக்கவிட்டு சென்றதனால்
பாசக் கூட்டில் உம் நினைவலைகள்
எம்மைவாட்டுகின்றன
ஓராண்டு சென்றாலும்
நீங்காது உம் நினைவுகள்

"உச்சில் வீதி"
கரவெட்டி தெற்கு.
கரவெட்டி.

என்றும் ... அன்... பிள்ளைகள்.



ST.JOHN'S COLLEGE, JAFFNA.
THE JAFFNA ACADEMY AND SCHOOL OF TECHNOLOGY.
ADMISSION - 2014 FOR A/L
தரம் 12 (A/L - 2016 Batch)இக்கான அனுமதி

01. அ. தரம் 12இற்கு (A/L - 2016 Batch) தமிழ்மொழிமூலம் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை, தொழிநுட்பவியல் கற்பதற்காகவும், (London A/L 2014 / 2015) இற்கும் கற்பதற்காகவும், தரம் 12இற்கு ஆங்கில மொழிமூலம் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் கற்பதற்காகவும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.12.2013 வெள்ளிக்கிழமை. அத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டா.
02. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரையும் பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
03. ஒரு படிவத்துக்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=
04. தரம் 12(A/L - 2016 Batch) விண்ணப்பதாரி 01.02.1997 இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருத்தல் வேண்டும்.
05. தரம் 12 (A/L - 2015 Batch) தொழில்நுட்பவியல்துறை விண்ணப்பதாரி 01.02.1995இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருத்தல் வேண்டும்.
06. அனுமதிப்பரீட்சை 04.01.2014 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும். புதிய வகுப்புக்கள் 06.01.2014 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
குறிப்பு:
01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகின்றது.
02. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
07. O/L, A/L 2ஆம் முறை பரீட்சைக்குத் தோற்றவிரும்புபவர்களிடமிருந்து The Jaffna Academy and School of Technology இனால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

PRINCIPAL,
ST.JOHN'S COLLEGE,
JAFFNA.
(C/14242)(10.6)

DIRECTOR,
THE JAFFNA ACADEMY &
SCHOOL OF TECHNOLOGY.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புலிகளின் மாவீரர் நினைவுத்தூபிகளில் ஒன்றையேனும் விடாது இடித்தழிக்குக

## இராணுவத் தூபிகளையே தமிழரும் வணங்க வேண்மென - சொல்கிறார் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

"புலிகளின் மாவீரர் நினைவுத் தூபிகள் இந்த நாட்டில் எந்த மூலையிலும் இருக்கக்கூடா. அவை அழிக்கப்பட்டே ஆக வேண்டும். அத்துடன், இராணுவத்தினரின் நினைவுத் தூபிகளைத் தமிழர்களும் வழிபட வேண்டும்" என சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியஅவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரினால் வடக்குக்கு மட்டுமல்ல, முழு நாட்டுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வடக்கிலும், தெற்கிலும் மக்கள் கொல்லப்பட்டனர். ஆனால், இன்று மக்கள் சுதந்திரக்காற்றை சுவாசிக்கின்றனர். நகர அபிவிருத்தி அமைச்சால் இன்று நகரங்கள் புது வடிவம் பெறுகின்றன. இதற்கு உதாரணமாக கிளிநொச்சி சென்று பாருங்கள். புலிகளின் நீர்மூழ்கிக் கப்பல்கள், படகுகள், நினைவிடங்களைக் காட்சிப்படுத்தி மக்களிடத்தில் குரோதங்களை வளர்க்கக்கூடாது.

புலிகளின் மாவீரர் நினைவுத் தூபிகள் நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து அவற்றை அழிக்க வேண்டும் என இச்சபையில் கோருகிறேன். அத்துடன், ஆனையிறவு மற்றும் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள இராணுவத்தினரின் நினைவுத் தூபிக்குச் சென்று தமிழ் மக்களும் வழிபடவேண்டும். படையினர் தான் தமிழருக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தனர் - என்றார்.

# றெக்ஷயனின் மனைவி நேற்று மன்றில் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ. 04

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் றெக்ஷயன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில் அவருடைய மனைவியும், பிள்ளையும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று சாட்சியமளித்துள்ளனர்.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் தலைவர் டானியல் றெக்ஷயன் கடந்த 26 ஆம் திகதி பிஸ்ரலால் சுடப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக வழக்கு விசாரணை நேற்று ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராசா முன்னிலையில் விசாரணைகளுக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

> “
> **நெடுந்தீவுப் பிரதேச சபையின் தலைவர் டானியல் றெக்ஷயன் கடந்த 26 ஆம் திகதி பிஸ்ரலால் சுடப்பட்டுப் படுகொலை செய்யப் பட்டார்.**

இதன்போது படுகொலை செய்யப்பட்டவரின் மனைவியும், பிள்ளையும் நீதிவான் முன்னிலையில் சாட்சியமளித்தனர்.

தொடர்ந்து அடுத்த கட்ட விசாரணைகளுக்காக வழக்கு பிறிதொருதினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-4-400)

# றெக் ஷயன் கொலை; அரசியல் பிரமுகர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.4

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் றெக்ஷயன் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் வட பகுதியைச் சேர்ந்த ஆளும் தரப்பு அரசியல் பிரமுகர் ஒருவர் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சில இணையத் தளங்களும் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் இந்தக் கைது தொடர்பில் பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்த முடியவில்லை.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மூதாட்டியின்

மூதாட்டி ஒருவர் ஏறினார். பஸ் சிறிது தூரம் சென்ற பின்னர் பயணச் சீட்டைப் பெறுவதற்காக பணத்தை எடுப்பதற்குத் தனது கைப் பையைத் திறந்துள்ளார், அப்போது அதற்குள் துப்பாக்கி ரவைகள் இருந்ததை அவர் அவதானித்துள்ளார். உடனே பஸ் நடத்துநருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. குறித்த பஸ் உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அவரின் கைப்பைக்குள் இருந்த ரவைகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. அதன் பின்னர் மூதாட்டி தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

முல்லைத்தீவு, முள்ளியவளையில் இருந்து பஸ்ஸில் வவுனியாவுக்குச் சென்றுள்ளார் இந்த வயோதிபப் பெண். வவுனியா பஸ் நிலையத்தில் இறங்கி கைப்பை மற்றும் இதர பொருள்களை ஒரு இடத்தில் வைத்து விட்டு மலசல கூடம் சென்றுள்ளார். பின்னர் வந்து அவற்றை எடுத்துக்கொண்டு கண்டிக்குப் புறப்பட பஸ்ஸில் ஏறியுள்ளார். அவர் மலசல கூடம் சென்ற போதே அவரது கைப்பையினுள் மைக்ரோ பிஸ்டல் ரவைகள் வைக்கப்பட்டிருப்பதாக வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அந்த ரவைகளை அங்கு வைத்தவர்கள் யார் என்பது பற்றியோ, எதற்காக அவற்றைப் பிறர் மூலம் பிறிதொரு இடத்துக்குக் கொண்டு செல்ல முற்பட்டனர் என்பது பற்றியோ எதுவும் தெரியவரவில்லை என்றும் இது குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (த-4)

### தொண்டுப்

ஆம் ஆண்டு மூதூரில் படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்களை இலங்கை இராணுவத்தினர்தான் கொலை செய்தனர் என்று அந்த நிறுவனம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தமது பணியாளர்கள் முழங்காலிட வைக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும், இவர்களை கொன்ற கொலையாளிகளை இலங்கை அரசு பாதுகாத்து வருகின்றது என்றும் அது தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல்கள் நேரில் கண்டவர்களிடமிருந்தும், இரகசிய ஆவணங்களிலிருந்தும், இராஜதந்திர வட்டாரங்களிலில் இருந்தும் கிடைக்கப் பெற்றதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை இதுவரை குறித்த நிறுவனம் வெளியிடாமல் வைத்திருந்ததன் உள்நோக்கங்களை இலங்கை இராணுவத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் கேள்விக்குள்ளாகியிருப்பதாக பி.பி.சி. செய்தி சேவை தெரிவித்துள்ளது. (த-5)

### வலி.வடக்கு

யுள்ள இடத்துக்கு மாற்றம் செய்வது பிழையானது - என்றார்.

அத்துடன் வலி.வடக்கில் காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளுக்கு என்ன நடந்துள்ளது என்பதை ஐ.நா. அதிகாரி பெயானி மக்கள் சமூகத்திடம் கேட்டார்.

'முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவி நீக்கத்தின் மூலம் இங்கு நீதித்துறையின் சுயா தீனம் என்ன நிலையில் இருக்கிறது என்பதை அறிய முடியும். எல்லாமே இராணுவ மயப்பட்டிருக்கையில் எவ்வாறு நீதிமன்றம் செயற்படும்' என்று மக்கள் சமூகப் பிரதிநிதிகள் அவரிடம் தெரிவித்தனர்.

'வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் சொந்த இடத்துக்குத் திரும்ப வேண்டும். உங்களின் வீடுகள் அழிக்கப்பட்டிருந்தால், தொழில் இழப்புகள் ஏற்பட்டிருந்தால் நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிடுவேன்' என பெயானி அங்கு தெரிவித்தார். (த-5)

### கிணற்றுள்

லுள்ள வீடு ஒன்றில் நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அதேயிடத்தைச் சேர்ந்த ஞானசீலன் கிரியோன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவனாவான்.

சிறுவனைக் குளிப்பாட்டுவதற்காக வீட்டுக் கிணற்றடிக்கு அழைத்துச் சென்றுள்ளார் தாயார். சிறுவனைக் கிணற்றடியில் விட்டு விட்டு பாத்திரம் எடுப்பதற்கு வீட்டுக்குள் சென்றுள்ளார் தாயார். அவர் திரும்பி வந்த போது சிறுவனைக் காணவில்லை. வெளியே இருந்த கிணற்று வாளி தாயார் வந்து பார்த்த போது கிணற்றுக்குள் இருந்தது.

சிறுவனே வாளியைக் கிணற்றில் போட்டுவிட்டுஎங்கோ ஒளிந்திருக்கிறான் என்று நினைத்த தாயார் பின்னர் வீட்டுக்குள் சென்று சிறுவனைத் தேடியுள்ளார். பின்னர் மீண்டும் கிணற்றடிக்கு வந்து பார்த்தபோதே கிணற்று வாளியுடன் சிறுவன் கிணற்றுக்குள் விழுந்துவிட்டதைக் கண்டுள்ளார். அவரது வீட்டில் வேறு எவரும் இல்லாததனால் வீதியால் சென்றவர்களை அழைத்து சிறுவனை மீட்குமாறு கூக்குரலிட்டுள்ளார்.

கிணறு ஆழமாக இருந்ததுடன் அதற்கு மேல் வாளி செல்லக் கூடிய அளவு துவாரம் விடப்பட்டு மிகுதி மூடி போடப்பட்டிருந்தது. வீதியால் சென்றவர்கள் உடனடியாகக் கிணற்றடிக்கு ஓடிச் சென்ற போதும் கிணற்றுக்குள் இறங்கி சிறுவனைத் தூக்க எவரும் முன்வரவில்லை. சுமார் 15 நிமிடங்களின் பின்னரே அவ்வழியே வந்த ஒருவர் கிணற்றுக்குள் குதித்து குழந்தையைத் தூக்கியுள்ளார். உடனடியாக அதே வீதியில் உள்ள வாசல்வழியாக யாழ். போதனா வைத்திய சாலைக்குச் சிறுவனைக் கொண்டு சென்றபோதும் சிறுவன் உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-4)

### மீள்குடியமர்வுக்கு

னியுடனான சந்திப்பு முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே ஐ.நா.பிரதிநிதி வருகை தந்தார். வலி.வடக்கில் இராணுவம் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளைப் பிடித்து வைத்துள்ளது. வன்னி மாவட்டத்திலும் இதேநிலைதான். ஏனைய மாவட்டங்களின் விவரங்கள் இல்லை. இவற்றை நான் எழுத்துமூலம் அனுப்பி வைப்பதாக அவரிடம் தெரிவித்தேன்.

இங்கு முக்கிய பிரச்சினை இராணுவம்தான். அவர்கள் வடக்கில் நிலை கொண்டிருப்பதன் காரணமாகவே ஏனைய பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இராணுவத்தை இங்கு வைத்திருப்பவர்கள் அவர்களை எவ்வளவு காலத்துக்கு வைத்திருக்கப் போகின்றார்கள் என்பதையும் தெரியப்படுத்த வேண்டும். இப்பொழுது நடைபெறுவதைப் பார்த்தால் இன்னும் 100 ஆண்டுகளுக்கு இராணுவத்தை வைத்திருப்பார்கள் போல் தெரிகின்றது.

இதன் உள் அர்த்தம் தென்னிலங்கை மக்களை இங்குள்ள இராணுவத்தினருடன் சேர்த்து குடியமர்த்துவதுதான். வடக்கில் முன்பு எவ்வாறு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டார்களோ அதேபோன்று தான் இங்கும் செய்ய முற்படுகின்றனர்.

எம்மால் இதைத் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும் உலக நாடுகள் மூலம் தடுத்து நிறுத்தி நடவடிக்கை எடுக்க முடியும்.

எமது மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அவர்கள் மிகவும் வறியநிலைக்குச்செல்கின்றனர். கடன்பட்டு அவர்கள் வாழ முடியாத நிலை ஏற்படுகின்றது. எமது மக்களின் விவசாய நிலங்களில் இராணுவம் விவசாயம் செய்கின்றது. கடற்றொழிலையும், கடைகளையும் அவர்களே கைப்பற்றி வைத்திருக்கின்றார்கள். இராணுவத்தால் எமது மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

இவற்றை என்னைச் சந்தித்த பிரதிநிதிக்கு தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். இவர்கள் ஐ.நா.சபையூடாக அரசுக்கு நெருக்கடிகள் ஏற்படுத்திஎல்லோருக்கும்விடிவைப் பெற்றுத் தரட்டும்-என்றார். (த-5)

### ராணுவத்

கியுள்ள மக்களின் குடும்ப அட்டைகள் அவர்கள் தற்போது தங்கியுள்ள இடங்களுக்கு மாற்றப்படுகின்றமை குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

அதிகரித்த இராணுவப் பிரசன்னம் காரணமாக, பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுவது, அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படுவது குறித்தும் ஐ.நா. பிரதிநிதியிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட ஐ.நா. அதிகாரி பெயானி, யாழ். மாவட்ட இராணுவத் தளபதியை நான் சந்தித்தபோது, இங்கு இராணுவத்தினர் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகின்றனர் என்று என்னிடம் கூறினார் - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மக்கள் சமூக பிரதிநிதிகள், இராணுவத்தை யாழ்ப்பாணத்தின் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மாற்றுகின்றார்களே தவிர, குறைக்கவில்லை என்று கூறினர்.

'இராணுவத்தினரின் தேவையற்ற தலையீடுகள் தொடர்பில் அழுத்தம் கொடுப்பேன் இறுதி அறிக்கையில் இது பற்றிக் குறிப்பிடப்படும்' என்று பெயானி இதன்போது குறிப்பிட்டார். (த-5)

### சொந்த

தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த ஐ.நா. சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானி, வடக்கு முதலமைச்சரைச் சந்தித்த பின்னர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவைச் சந்தித்தார். இதன் பின்னர் 'பனை நிழல்' (தல்செவன) விடுதியில் மதிய உணவை முடித்துக்கொண்டு, உயர் பாதுகாப்பு வலய வேலியின் உள்பக்கமாகச் சென்று அந்த இடங்களைப் பார்வையிட்ட பின்னர் சுன்னாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்துக்குச் சென்றார்.

#### திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல்

கோணப்புலம் நலன்புரி நிலையத்தின் ஒரு பகுதி மக்களை மட்டும் ஐ.நா. அதிகாரி சந்திப்பதற்குரிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நிலையில் அங்கு வந்த ஐ.நா. அதிகாரியிடம்வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம் மனுவொன்றைக் கையளித்தார்.

இதன் பின்னர் ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் சந்திப்புகளை மேற்கொள்ள விரும்பாத பெயானி, ஒவ்வொரு குடிசைகளாக உள்ளே சென்று பார்வையிட்டார்.

மழையினால் சேறும் சகதியுமாக இருந்த பாதைகள் ஊடாக சென்று மழை ஒழுக்கினால் நனைந்த குடிசைகளையும் அவர் நேரில் பார்வையிட்டார்.

#### சலசலப்பு

அதன் பின்னர் அங்கிருந்த மண்டபத்துக்குள் இருவர் இருவராக உள்ளே அழைத்துச் சந்திப்புக்களை மேற்கொண்டார். இதன்போது குறித்த முகாம் தலைவர் எனக் கூறிக் கொள்பவர், இந்த முகாம் மக்களைத்தான் அவர் சந்திக்க வந்திருக்கிறார். வேறு இடத்தில் இருந்து வந்தவர்கள் சந்திக்கக்கூடாது என்று தெரிவித்தார். இதனால் அங்கு சிறிது சலசலப்பு ஏற்பட்டது. எனினும் எல்லோரையும் அவர் சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்று முகாம் மக்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து அந்தச் சலசலப்பு அடங்கியது.

இதன்பின்னர் அங்குள்ள ஒவ்வொரு இடங்களையும் அந்த மக்கள் படும் கஷ்டங்களையும் பெயானி சலிக்காமல் சென்று பார்வையிட்டார்.

#### நிவாரணம் வேண்டும்

எதுவித அடிப்படை வசதிகளற்று வாழ்ந்துவரும் எங்களுக்கு, நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது. அதனை மீளப்பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் ஐ.நா. அதிகாரியிடம் கூறினர்.

#### சொந்த இடம் வேண்டும்

எங்களைச் சொந்த இடங்களிலேதான் குடியமர்த்த வேண்டும். வேறு இடங்கள் எங்களுக்கு வேண்டாம். இந்த முகாமில் அபிவிருத்திகளைச் செய்து எங்களை இங்கேயே தங்க வைக்க வேண்டாம்.

எங்களைச் சொந்த இடங்களில் வாழ விடுங்கள். எங்கள் பிள்ளைகளாவது அங்கு வாழட்டும்.

23 வருடங்களாக நாங்கள் இடம்பெயர்ந்து அல்லப்படுகின்றோம் என்று மக்கள் அங்கு கூறினர்.

23 வருடங்களாக ஏன் உங்கள் சொந்த இடத்துக்கு போக முடியாமல் இருக்கிறீர்கள்? என ஐ.நா. அதிகாரி பெயானி மக்களிடம் கேட்டார். அதற்கு மக்கள், எங்கள் நிலங்களில் இராணுவம் இருப்பதால் செல்ல முடியாத நிலை இருக்கின்றது என்று பதிலளித்தனர்.

#### ஆத்திரப்படுவது இயல்பு

இதன் பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றிய பெயானி, உங்கள் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கலாம் என்பது தொடர்பில் ஆராயவே நான் வந்தேன். நான் ஐ.நா. அதிகாரியல்ல. சுதந்திரமான இடம்பெயர்ந்தோர் தொடர்பான வல்லுநர்.

நான் உங்களைப் போன்ற இடம்பெயர்ந்த மக்கள் வாழும் ஜோர்ஜியா, தென்சூடான், கொசோவோ போன்ற நாடுகளுக்கும் சென்று வந்துள்ளேன். எப்பொழுதும் இடம்பெயர்ந்த மக்களை சந்திக்கும் போது, அவர்கள் கோப்படுவது இயல்பு. ஏனெனில் பாதிக்கப்பட்ட நிலையில்அவர்கள் இருக்கின்றார்கள். நான் உங்கள் அரசால் இங்கு வரவழைக்கப்பட்டிருக்கின்றேன். இந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு எப்படி முன்னேறலாம் என்பது தொடர்பில் ஆராய்வதற்காக வரவழைக்கப்பட்டிருக்கின்றேன்.

நீங்கள் 23 வருடமாக இடம்பெயர்ந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்று நான் விளங்கிக்கொண்டுள்ளேன். சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் என்பதில் பெரும்பாலான மக்கள் விரும்பமாக இருக்கின்றார்கள் என்பதை விளங்கிக் கொண்டேன் - என்றார். (த-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ். உதைபந்தாட்ட லீக், அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)



மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் உதைபந்தாட்ட லீக்குகளின் செயலாளர்களுக்கான நிர்வாக முகாமைத்துவப் பயிற்சி முகாமில் பங்கு கொள்வதற்காக இலங்கையில் இருந்து சென்றுள்ள இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கீழ் உள்ள உதைபந்தாட்ட லீக்குகளின்

# ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழாவில் வடக்கு மாகாணத்துக்கு 40 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.4

நுவரெலியா நகரசபை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெற்ற ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட விளையாட்டு விழாவில் வடக்கு மாகாணம் 11 தங்கப் பதக்கம், 15 வெள்ளிப்பதக்கம், 14 வெண்கலப் பதக்கம் என மொத்தம் 40 பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள் ளது.

இதில் நெல்லியடி மத்திய கல்லூரி சார்பில் பங்கு கொண்ட எஸ்.அன்ரனி 25-30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான ஆண்களுக்கான 400 மீற்றர், 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றுச் சம்பியனானார்.



கு.மயில்வாகனம்



எஸ். மயில்வாகனம்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சார்பில் பங்கு கொண்ட க.மயில்வாகனம் 51-55 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு எறிதல், தட்டு எறிதல், ஈட்டி எறிதல் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றுச் சம்பியன் ஆனார். (த-23)

# தெல்லிப்பழை யூனியன் எல்லேயில் சம்பியன்

யாழ்ப்பாணம்,டிசெ.4

இலங்கை எல்லே சம்மேளனத்தினால் யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட எல்லே போட்டியில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற எல்லேப் போட்டியின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் தெல்லிப்பழை யூனியன் விளையாட் டுக்கழக அணி 9:0 என்ற புள்ளி அடிப்படை யில் வெற்றிபெற்றது.

போட்டியில் கலந்துகொண்ட அணிகளுக்கு எல்லே விளையாட்டு உபகரணங்கள் வ்ழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கை எல்லே சம்மேளனத்தின் அதிகாரிகள், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி எஸ்.மோகனதாஸ் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-23)

## யாழ். லீக்கின் உதைபந்தாட்டம்



யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 13 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (த-23)

# யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள்

வலி.வடக்கு, டிசெ.4

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் ப.முருகவேல் தலைமையில் நடைபெற்றது.

நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்:-



தலைவர்-செ.சிவசங்கர், உபதலைவர்கள்-ஆர்.செல்வராசா, ப.முருகவேல், என்.ரவீந்திரா, கோ.கோபிகிருஷ்ணா, எஸ்.சிவச் செல்வன், செயலாளர்- ரி.றொபேசன், பொருளாளர்- ந.சிவராசா, நிர்வாகக்குழு-ரி.கிருபாகரன், ரி.நிஷாந்தன், ஆர்.ஸ்ரீதரன், எம்.சிதம்பரப்பிள்ளை, பி.வசிகரன், கணக்காய்வாளர்கள் - ந.சுதேஸ்குமார், எஸ். கோகுலன். (த-86)

# மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.4

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்ட 'சி' மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர் வரும் 16 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான ஆயத்த வகுப்புக்கள் எதிர்வரும் 7 ஆம், மற்றும் 8 ஆம் திகதிகளில் மு.ப 10.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

" - "

எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் மு.ப 10.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் சுரேஸ்குமார் அறிவித்துள்ளார். (த-23)

# கிரிக்கெட்டில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், டிசெ.4

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மை தானத்தில் மின் ஒளியில் நடைபெற்றுவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இதுவரை நடைபெற்று முடிந்த ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும், ஜனசக்தி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் உதயன் 15 ஓட்டங்களையும், சுரேன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜனசக்தி விளையாட்டுக் கழக அணி சார்பில் மிதுலன், அகிலன், பிரகீஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

53 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜனசக்தி விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறை வில் 2 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் அகிலன் 12 ஓட்டங்களையும், யசிந்தன் 8 ஓட்டங்களையும், செந்தூரன் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் கோபால், சிறி ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஐக்கியப் பறவைகள் விளையாட்டுக் கழக அணிக்கும் அம்மன் விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய பறவைகள் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற் றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்மா 45 ஓட்டங்க ளையும், சிவாஜி 6 ஓட்டங்க ளையும் தமது அணி சார்பா கப் பெற்றனர்.

பந்துவீச்சில் அம்மன் விளையாட்டுக் கழக 'பி' அணி சார்பில் சுரன் 2 இலக்கையும், றஜீவ், விஜி ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தி னார்கள்.

64 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அம்மன் விளை யாட்டுக் கழக 'பி' அணி 3.4 பந்துப் பரிமாற் றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 21 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் [illegible] ஓட்டங்களைத் தமது [illegible] கப் பெற்றார்.

பந்துவ்ச்சில் ஐக்[illegible]ப் பறவை[illegible] விளையாட்டுக் கழக அணி சார்பில் சிவாஜி 2 இலக்கையும் தர்மா, விஜி ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

ஐக்கியப் பறவைகள் விளையாட்டுக் கழக அணி 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பரலோகமாதா விளையாட்டுக் கழக அணிக்கும் றணசூரிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பரலோகமாதா விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எதுவித இலக்குகள் இழப்பின்றி 49 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் வேணுஷன் 26 ஓட்டங்களையும், துசி 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றணசூரிய விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் டிலான் 14 ஓட்டங்களை யும், தனுஷன் 6 ஓட்டங்களை யும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பரலோகமாதா கழக அணி சார்பில் விக்கி 2 இலக்கையும், ரெம்சி , நிக்சன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பரலோகமாதா விளையாட்டுக் கழக அணி 18 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.



அல் - மாதர் விளையாட்டுக் கழக அணிக்கும் மருதநிலா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அல் - மாதர் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்கை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிப்லி 33 ஓட்டங்களையும், சாப்றா 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மருதநிலா விளையாட்டுக் கழக அணி சார்பில் கோபி 2 இலக்கை வீழ்த்தினார்.

57 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மருதநிலா விளையாட்டுக் கழக அணி 4.3 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 27 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் அகிலன் 12 ஓட்டங்களையும், குட்டி 6 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அல் - மாதர் விளையாட்டுக் கழக அணி சார்பில் சிப்லி, சாதி முசாகில் ஆகியோர் தலா ஓர் இலக்கைள வீழ்த்தினர்.

அல் - மாதர் விளையாட்டுக் கழக அணி 29 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
04/12/2013



## முதலாவது போட்டியில் வில்லியம்சன் இல்லை



நியூசிலாலந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ற் போட்டியில் நியூசிலாந்து அணியின் இளம் வீரர் கேன் வில்லியம்சன் பங்குபெறமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.


அவருக்கு ஏற்பட்ட பெருவிரல் உபாதையிலிருந்து அவர் குணமடையாததன் காரணமாகவே அவர் இப்போட்டியில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பங்களாதேஷில் இடம்பெற்ற தொடரில் அவர் காயமடைந்திருந்ததோடு, அதன் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற தொடரில் பங்குபற்றியிருக்கவில்லை.

எனினும் முதலாவது போட்டியில் பங்குபற்றக் கூடியவாறு அவர் உடற்தகுதியை அடைந்து விடுவார் என்ற நம்பிக்கை காணப்பட்டது. எனினும் அவர் 95 சதவீதமே குணமடைந்துள்ளதாகவும் ஆனால் நீண்ட தொடர்கள் இடம்பெறவுள்ள நிலையில் அவரை இப்போட்டியில் விளையாட வைத்து அதன் மூலம் ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக முதலாவது போட்டியில் அவர் பங்குபற்றமாட்டார் என நியூசிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்த முடிவு கடினமான முடிவாக அமைந்ததாக குறிப்பிட்ட நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் பிரெண்டன் மக்கலம், ஆனால் இறுதியில் கேன் வில்லியம்சனை விளையாடவைப்பதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

அவருக்குப் பதிலாக உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தி வரும் ஆரொன் றெட்மொன்ட் இற்கு வாய்ப்பு வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ற் போட்டி நாளைய தினம் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## முகமது ஹபீஸ் அதிருப்தியில்



வீரர்களைத் தெரிவு செய்வது குறித்து தன்னிடம் யாரும் கலந்து ஆலோசிக்கவில்லை என அணித் தலைவர் முகமது ஹபீஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான்(ஒரு போட்டி) மற்றும் இலங்கைக்கு(2 ஆட்டம்) எதிராக விளையாடும் பாகிஸ்தான் 20/20 கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வீரர்களை தெரிவு செய்வது குறித்து தன்னிடம் தெரிவுக் குழுவினர் கலந்து ஆலோசிக்கவில்லை என அணித்தலைவர் முகமது ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கூறுகையில், ஆப்கானிஸ்தான், மற்றும் இலங்கைக்கு எதிரான 20/20 போட்டியில் விளையாடும் பாகிஸ்தான் அணியில் இடம் பெற்று இருக்கும் வீரர்கள் யார் என்று எனக்கு தெரியாது. ஏனென்றால் நான் விமானத்தில் இருந்தேன். வீரர்களைத் தெரிவு செய்வது தொடர்பாக குழுவைச் சேர்ந்த யாரும் என்னிடம் கலந்து ஆலோசிக்கவில்லை. அணியில் இடம் பெற்ற வீரர்கள் யார் யார் என்பது இனித்தான் எனக்கு தெரிய வரும்என்றுதெரிவித்துள்ளார்.

அணி விவரம்-

முகமது ஹபீஸ்(அணித்தலைவர்), அகமது ஷேசாத், சர்ஜில்கான், சோயிப் மசூத், உமர் அமின், உமல் அஜ்மல், அப்ரிடி, சுல்பீகார் பாபர், பிலாவல், ஜுனைத்கான், சொகைல் தன்வீர், அன்வர் அலி, சயித் அஜ்மல், சொகைல். (த)

## மிரட்டுகிறது தென்னாபிரிக்கா

### டி வில்லியர்ஸ்



இந்திய வீரர்களை எங்கள் வேகப் பந்துவீச்சாளர்கள் மிகக் கடுமையாக எதிர்கொள்வர் என்று தென்னாபிரிக்க அணித்தலைவர் டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையிலான ஒரு நாள் தொடர் தென் னாபிரிக்காவில் நாளை தொடங்குகிறது. முதல் போட்டி ஜோஹன்னஸ்பர்க்கில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தனது அணியின் வேகப் பந்து வீச்சாளர்கள், இந்திய வீரர்களுக்கு சிம்ம சொர்ப்பனமாகத் திகழ்வார்கள் என்று டி வில்லியர்ஸ் எச்சரித்துள்ளார்.

போட்டி குறித்து டி வில்லியர்ஸ் கூறுகையில், இந்திய தொடக்க வரிசை ஆட்டக்காரர்களை விரைவாக ஆட்டமிழக்கச் செய்வதே எங்களது முதல் நோக்கம். இதற்கு எங்களது வேகப் பந்து வீச்சாளர்கள் கைகொடுப்பார்கள்.

எங்களது வேகப் பந்து வீச்சாளர்கள் சற்றும் இரக்கம் காட்டமாட்டார்கள். பந்து வீச்சு மிகக் கடுமையாகவே இருக்கும். அதில் இந்திய வீரர்கள் திணறப் போவது உறுதி எனவும் கூறியுள்ளார். (த)

## நடிகராகிறார் ஆசிப்



சூதாட்டப் புகாரில் சிக்கித் தவித்த பாகிஸ்தான் அணியின் வீரர் முகமது ஆசிப் சினிமாவில் நடிக்க உள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு கிரிக்கெட் சூதாட்டப் புகாரில் சிக்கிய பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஆசிப்புக்கு 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கி இருக்கும் அவர், தனது புதிய இன்னிங்சைத் தொடங்க உள்ளார். அதாவது சினிமா படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

ஒன்ஸ்மோர் இன்ரர் நஷனல் நிறுவனம் தயா ரிக்கும் இந்த படத்தை பொலிவுட் இயக்குநர் இக்ரம் அக்தர் இயக்குகிறார். (த)

## கிளார்க் காயம்

அடிலெய்ட் டெஸ்ட் பயிற்சிப் போட்டியின்போது ஆஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் மைக்கல் கிளார்க்குக்குக் காயம் ஏற்பட்டது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி பாரம்பரியமிக்க டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகிறது. பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்டில் 381 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றஆஸ்திரேலியஅணி, தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது.



இந்நிலையில் இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் நாளைஅடிலெய்டில் தொடங்குகிறது. இதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, ஆஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் மைக்கல் கிளார்க்குக்கு வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. (த)

## சச்சினின் 4 ஆவது இடத்தில் களமிறங்கப்போபவர் யார்?





தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தின் போது டெஸ்ட் போட்டியில் சச்சின் இறங்கிய 4ஆவது இடத்தில் யார் களமிறங்குவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். சச்சின்ஓய்வுபெற்றபின் முதன்முறையாக இந்திய அணி அன்னிய மண்ணில் டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது. இதனையடுத்து சச்சினின் 4ஆவது இடத்தில் யார் களமிறங்குவார் என்ற கேள்வி எழுந்துள்ளது.


ஒருநாள் தொடரைக் காட்டிலும் இந்திய டெஸ்ட் அணியில் யார் யார் எந்தெந்த இடத்தில் களமிறங்குவர் என்று நிபுணர்கள் இப்போதே கருத்துத் தெரிவிக்க தொடங்கி விட்டனர். அதன்படி, சச்சின் களமிறங்கிய 4ஆவது இடத்தில் யார் இறங்க வேண்டும் என்றும் விவாதம் நடக்கிறது. ஷிகர் தவான்- முரளி விஜய் ஆகியோர் இந்திய அணிக்குத் தொடக்கம் தருவர்.

சமீபத்திய [illegible] களில் அடுத்தடுத்து சதம் அடித்து சிறப்பான நிலையில் இருக்கும் புஜாரா 3ஆவது இடத்தில் இறங்கு வார். சச்சின் இல்லாததால் விராத் கோஹ்லி அல்லது ரோஹித் சர்மா ஆகிய இரு வரில் ஒருவர் 4ஆவது வீர ராக களமிறங்கலாம். விராத் கோஹ்லியை விட ரோஹித் சர்மாவே அந்த இடத்துக்கு பொருத்தமானவர் என கிரிக் கெட் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சமீபத்தில் மும்பையில் நடந்த சச்சினின் கடைசி டெஸ்ட் போட்டியில், ரோஹித் சர்மா சதம் அடித்தார். அப்போது ஓய்வு அறையில் இருந்த சச்சின் சில நிமிடங்கள் தொடர்ந்து கைதட்டி உற்சாகப்படுத்தினார். தனக்கான இடத்தை நிரப்ப ரோஹித் [illegible] என்று சச்சின் கருதியிருக்கக் கூடும். முன்னாள் இந்திய அணியின் அணித்தலைவர் திலிப் வெங்சர்க்கார் இது குறித்துக் கூறுகையில்,

டெஸ்ட் போட்டியில் முதல் 3 இடங்கள் முக்கியமானவை. கோஹ்லி, ரோஹித் சிறந்த வீரர்கள் என்றாலும், 4ஆவது இடத்துக்கு ரோஹித்தே பொருத்தமானவர் என்று தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் தொடக்க வீரர் அன்சுமன் கெய்க்வாட் கூறுகையில், ரோஹித் அதிக பந்துகளைச் சந்தித்து நீண்ட நேரம் களத்தில் இருப்பார். பொறுத்திருந்து நான்கு, ஆறு விளாசுவார். கோஹ்லி வித்தியாசமானவர். தான் களமிறங்கியது முதல் ஓட்டங்களை அதிகரிக்க வேண்டும் என்று விரும்புவார். எனவே சச்சின் இறங்கிய இடத்தில் ரோஹித் இறங்கினால் நன்றாக இருக்கும் என்றார். (த)



## முதல் 10 இடங்களுக்குள் முதல்முறையாக தவான்

ஐ.சி.சி ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலில் முதன்முறையாக முதல் 10 வரிசையில் இடம்பிடித்துள்ளார் ஷிகர் தவான்.

ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை ) டுபாயில் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் ஷிகர் தவான் 736 புள்ளிகளுடன் 11ஆவது இடத்தில் இருந்து 9ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இதன்மூலம் முதன்முறையாக முதல் 10 வீரர்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

முதல் மூன்று இடங்களை இந்தியாவின் விராத் கோஹ்லி (876 புள்ளி), தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ்(859), ஆஸ்திரேலியாவின் ஜோர்ஜ் பெய்லி (835) ஆகியோர் தக்கவைத்துக் கொண்டனர்.

அடுத்து நடக்கவுள்ள இந்தியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் கோஹ்லி, முதலிடத்தைத் தக்கவைத்துக் கொள்ளலாம். ஒருவேளை டி வில்லியர்ஸ் சாதிக்கும் பட்சத்தில், முதலிடத்துக்கு முன்னேற லாம்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் பாகிஸ்தானின் சயீத் அஜ்மல், மேற்கிந்திய தீவுகள் அணியின் சுனில் நரைன், இந்தியாவின் ரவிந்திர ஜடேஜா ஆகியோர் நீடிக்கின்றனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஸ்னன் பங்கேற்பார்



ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரில் பங்குபற்றி வரும் இங்கிலாந்து அணி சார்பாக இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ரிம் பிரெஸ்னன் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தில் இடம்பெற்ற ஆஷஷ் தொடரில் கீழ் முதுகு உபாதைக்குள்ளான ரிம் பிரெஸ்னன், முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றியிருக்கவில்லை. அதன் பின்னர் இந்த ஆஷஷ் தொடருக்கான குழாமிலும் அவர் இடம்பெற்றிருக்கவில்லை. முதலாவது போட்டியிலும் அவர் பங்குபற்றியிருக்கவில்லை.

எனினும் இங்கிலாந்தின் திறமை வெளிப்பாடு அணியில் ரிம் பிரெஸ்னன் இடம்பெற்றிருந்திருந்தார். குயீன்ஸ்லாந்து இரண்டாவது பதினொருவர் அணிக்கெதிராக போட்டியில் பங்குபற்றிய ரிம் பிரெஸ்னன், அப்போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டிருந்ததோடு, தனது முழு உடற்தகுதியையும் நிரூபித்திருந்தார்.

இதன் காரணமாக டிசெம்பர் 5ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ரிம் பிரெஸ்னன் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த போட்டியில் பங்குபற்றிய கிறிஸ் ட்ரெம்லெட்டிற்குப் பதிலாகவே அவர் இரண்டாவத போட்டியில் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிறிஸ்பேணில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி 381 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்ததோடு மூன்றாவது வேகப் பந்து வீச்சாளராகக் களமிறங்கிய கிறிஸ் ட்ரெம்லெட் எதிர்பார்த்தளவு பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

# சச்சினின் வெற்றிடத்தை நிரப்ப வேண்டும் டோனி



சச்சின் இடத்தை டோனி தான் பூர்த்தி செய்ய வேண்டுமென இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார். சென்னையில் தனியார் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், பாரத ரத்னா விருதுக்கு மிகச் சரியானவர் சச்சின். அதற்கான எல்லா தகுதிகளும் அவருக்கு உண்டு. இதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில், சகீர்கான் இடம் பெற்றிருப்பது நல்ல விடயம்.

வளர்ந்து வரும் வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது ஷமி, புவனேஷ்வகுமாரும் இடம் பெற்றதால் திறமையான அணியாக உள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில், இந்திய அணி நிச்சயம் கிண்ணத்தைக் கைப்பற்றும். சச்சின் ஓய்வு பெற்றதால், டெஸ்ட் அணியில் நான்காவது இடத்தில் யார் களமிறங்குவது என விவாதிக்கப்படுகிறது. இந்த இடத்தில் டோனி வர வேண்டும் என்பது என் விருப்பம். ஆனால் விராத் கோஹ்லி களமிறங்க வேண்டும் என டோனி நினைப்பதாகத் தெரிவித்துள்ளார். (த)

CIMA
CLASSES @ SPECTRA
Starts on 07th Dec 2013 (Saturday)
No. 19, Stanley Road, Jaffna.
T.P: 021 222 1422
021 320 2728

# 2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த அணிகள் அறிவிப்பு

2013ஆம் ஆண்டுக்கான சிறந்த ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளின் விவரத்தை சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதன்படி சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கான சிறந்த அணியில் இலங்கை வீரர்கள் மூவர் இடம்பெற்றுள்ளனர். எனினும் டெஸ்ட் போட்டிகளில் இலங்கை வீரர்கள் இடம் பிடிக்கவில்லை.

**சிறந்த ஒருநாள் சர்வதேச அணி விபரம்-**
திலகரட்ன டில்சான் (இலங்கை) சகிர் தவான் (இந்தியா)
ஹாஷிம் அம்லா (தென்னாபிரிக்கா)
குமார் சங்கக்கார (இலங்கை)
ஏ.பி.டி வில்லியஸ் (தென்னாபிரிக்கா)
எம்.எஸ். டோனி (இந்தியா - தலைவர் - விக்கெட் காப்பாளர்)
ரவீந்திர ஜடேஜா (இந்தியா)
சயீத் அஜ்மல் (பாகிஸ்தான்)
லசித் மலிங்க (இலங்கை)

டெஸ்ட் அணி விவரம்- அலஸ்டைர் குக் (இங்கிலாந்து)
சேவாக் புஜரா (இந்தியா)
ஹஷிம் அம்லா (தென்னாபிரிக்கா)
மைக்கல் கிளார்க் (ஆஸ்திரேலியா)
மிசல் குசே (ஆஸ்திரேலியா)
ஏ.பி.டி வில்லியஸ் (தென்னாபிரிக்கா)
எம்.எஸ். டோனி (இந்தியா - விக்கெட் காப்பாளர்)
சுவான் (இங்கிலாந்து)
டேலி ஸ்ரேன் (தென்னாபிரிக்கா)
ஜமீர் அன்டெஸ்ரன் (இங்கிலாந்து)
வேனோன் பிலான்டர் (தென்னாபிரிக்கா) (ஙு-400)

சந்தன மரக்கன்றுகள் விற்பனைக்கு

சிறப்பான சந்தன மரக்கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உள்ளன. உங்கள் சொந்த காணியில் சந்தன மரங்களை இலகுவாக நட்டு பராமரிப்பதற்கான சகல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் நாம் வழங்குவோம்.
சந்தன மரங்கள் உங்கள் காணிகளுக்கு அதிக பெறுமதியை பெற்றுக்கொடுப்பதுடன் 12 - 15 வருடங்களில் ஒரு மரத்தின் பெறுமதி சுமார் ரூ. 5 இலட்சமாக மதிப்பிடப்படும்.
இம்மாதம் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் விநியோகம் ஒரு கன்றின் விலை ரூபா 1000/= மட்டுமே
தொடர்புகளுக்கு : 077 3436927, 077 8979990

# நியூசிலாந்து முன்னிலையில்

நியூசிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் அணி, 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில், மேற்கிந்தியத்தீவு, நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி, டுனிடின் பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. நியூசிலாந்து வீரர்கள் புல்டான்-ரூதர்போர்டு தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இவர்கள் இருவரும் அணிக்கு நல்ல தொடக்கத்தை கொடுத்தனர். ரூதர்போர்டு 62 ஓட்டங்களும், புல்டான் 61 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இவர்களின் சிறப்பான தொடக்கத்தால் உற்சாகத்துடன் அதிரடியாக ஆடிய மெக்குல்லம், டெய்லர் இருவரும் சதம் அடித்து அசத்தினர். முன்னதாக ஆரோன் ரெட்மாண்ட் 20 ஓட்டங்களில் பவிலியன் திரும்பினார்.

இதனால் முதல் நாள் ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 367 ஓட்டங்களைக் குவித்துள்ளது. மெக்குல்லம் 109 ஓட்டங்களுடனும் டெய்லர் 103 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் பெஸ்ட், சமி ஷில்லிங்போடு தலா ஓர் இலக்கினை [illegible] (ஙு-400)

பொருளியல்
M.C. சுதாகரன்
* புதிய அலகுகள் ஆரம்பம்
* A/L 2014 PAPER CLASS ஆரம்பம்
07.12.2013 சனிக்கிழமை

| கல்வி நிலையங்கள் | A/L 2014 | A/L 2015 |
|---|---|---|
| * MODERN நெல்லியடி | தேர்ச்சி - 09 8.30 A.M | தேர்ச்சி - 03 9.30 A.M |
| * MODERN பருத்தித்துறை | 6.30 A.M | 7.30 A.M |
| * HAC சித்தன்கேணி | தேர்ச்சி - 08 2.30 P.M | தேர்ச்சி - 03 4.00 P.M |
| * ஞானோதயா - சாவகச்சேரி | 11.00 A.M | 12.00 P.M |
| * NAC மானிப்பாய் | 5.00 P.M | 1.30 P.M |
| * NEC கிளிநொச்சி (திங்கள், புதன், வெள்ளி) | 2.00 P.M | 3.30 P.M |

மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
(3 Year Contract (Work Permit) Furniture Factory மரத்தளபாட உற்பத்தி உதவியாளர் Helpers -Nos 20 அதி உயர் சம்பளம் +OT+ மேலதிக உற்பத்திக்கு Commission 3வருட முடிவில் கை நிறைய சம்பளத்துடன் தொழில் ஒன்றையும் கற்றுக்கொள்ள அரியதோர் சந்தர்ப்பம் வயதெல்லை 22 - 38 ( ஒரு மாதத்துக்குள் பயணம் விரையுங்கள்)
உங்கள் Passport சகிதம் எதிர்வரும் 7 ஆம் திகதி இல. 24 Station Road வவுனியா Lanka Voice லும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் Hospital வீதி ஆசிர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள Green Grass Hotel இலும் காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
வீட்டுப்பணிப்பெண்களும் உடன் தேவை. ( 2 Years work permit செய்து கொடுக்கப்படும்)
தொடர்பு : Lanka Voice 075 0650084, 024 5615610

IMMDIATE VACANCIES
ESOFT Join Sri Lanka's #1
VACANCIES @ ESOFT
STUDENT ADMINISTRATOR
Able to speak and write in English. Should be have good contacts in public and private sector. Age not more than 30. Experience is not complusory.
Accounts Assistant
Able to handle the Capital and petty cash expenses and manage the accounts related works.
MARKETING EXCUTIVE
With or without part qualifications in marketing. Must have a pleasant, outlooking personallity. shoud be have a motor bike.
HOW TO APPLY
Send your CV within 07 Days to reach The Manager. Mark the position that you are applying for on the top left corner of the Envelope. (Reg.Post)
ESOFT METRO CAMPUS -JAFFNA
No.137, K.K.S Road Jaffna | www.esoft.lk
Tel:021 750 1120 | Mail : jaffna@esoft.lk 077 3099308

யாழ். நகரில் எண்கணித நிபுணர்

உலகெங்கும் புகழ் பெற்ற எண்கணித நிபுணர் வாஸ்து ஆலோசகர்
கலாநிதி
JNS. செல்வன்
இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நேரில் ஆலோசனை தருகிறார்
தொடர்புகளுக்கு : Dr. JNS செல்வன்
இல. 20 இந்துக்கல்லூரிசாலையில் (மைதானத்திற்கு முன்பாக) சந்திக்கலாம்
3 நாள்கள் மட்டும் (06.12.2013 வரை மட்டும்)
கைபேசி எண் : 071 4211484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

விதைத்த விதை
முளைக்கத்
தவறினாலும்
தவறும்.
பெரும்பாலோர்
எண்ணும் எண்ணம்
செயலாகத் தவறாது.
- மு.வ.

# புதன் பொய்கை

உதயன் | டிசெம்பர் 04 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# இயற்கையுடன் இணங்கிச் செல்வோம்


ராஜராஜன்



மனிதன் இயற்கையுடன் மோதுவதற்குத் துணிந்து விட்டான். நவீன விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சி அவனுக்கு இந்தத் துணிவை வழங்கிவிட்டது. ஆனால் எத்தகைய விஞ்ஞானமும் இயற்கைக்கு ஈடாகாது என்பதை அவன் ஏனோ மறந்து விட்டான். எம்மை உருவாக்கியதும், பாதுகாத்து வருவதும் ஈடு இணையற்ற அந்த இயற்கை தான் என்பதை அவன் ஒரு கணம் சிந்திப்பானேயாகில், இத்தகைய தவறான செயலில் அவன் ஈடுபட்டிருக்கவே மாட்டான். நாம் வாழுகின்ற பூமி, அங்கு உருவாக் கப்பட்டிருக்கும் கடல், பாய்ந்து செல்லும் ஆறுகள், அமைதியாக ஓடிக் கொண்டிருக் கும் நதிகள், மலைகள், பள்ளத்தாக்குகள், பாலை நிலங்கள், துருவப் பிரதேசங்கள், எண்ணிக்கை தெரியாத மரங்களைக் கொண்டுள்ள காடுகள், ஆகாயம், சூரியன், நிலவு, நட்சத்திரங்கள், காற்று இவை யாவும் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை அல்ல. இவை எல்லாமே இயற்கை அன்னையின் படைப்புக்களே. இவற்றுக்கு மனிதன் ஒருபோதுமே உரிமைகோர முடியாது. இந்த நிலையில் அவன் இயற்கையுடன் மோதுவதற்கு எத்தனிப்பதுதான் வேதனையைக் கொடுக்கின்றது.

பெரு வெடிப்பு மூலம் உடைந்து பிரிந்து சென்ற ஒரு சிறு துண்டுதான் இந்தப் பூமி என்று நம்பப்படுகிறது. நெருப்புக் கோளமாகக் கனன்று கொண்டிருந்த பூமி உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்றதாக மாறுவதற்கு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் எடுத்தன. உயிரினங்கள் இயற்கையால் உருவாக்கப்பட்டபோது, மனித இனம் ஒத்ததாகவே காணப்பட்டது. மனிதர்களுக்கும் மிருகங்களுக்குமிடையில் பெரிதளவில் வேறுபாடுகளும் காணப்படவில்லை. காலம் செல்லச் செல்ல மனிதர்கள் மாற்றமடைய ஆரம்பித்தனர். அவர்களிடத்தில் நாகரிக வளர்ச்சி ஏற்பட்டது. பகுத்தறியும் ஆறாவது அறிவும் வளர்ந்தது. இதுதான் இயற்கைக்கு விரோதமாக அவனைத் திருப்பிவிட்டது என்று துணிந்து கூறலாம்.

இயற்கையுடன் மோதுகின்ற ஆற்றல் மனிதர்களுக்கு கிடைக்கவே கிடைக் காது. ஏனென்றால் மனிதர்களைப் படைத்துப் பாதுகாப்பது காருண்யம் மிக்க இயற்கை அன்னைதான். இயற்கையை நோகடிக்கச் செய்யும் ஒவ்வொரு செயலும் எம் மைப் பாதிக்கும் என்பதை மனிதர்கள் இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும்.



இயற்கையை அதன் போக்குக்கு ஏற்ற விதத்தில் விடும் போதுதான் உலகம் உய்ய முடியும். இதைவிடுத்து அதனைக் கட்டுப் படுத்துவதற்கு மனிதர்கள் நினைத்தால் பெரும் அழிவுகள் தான் அவர்களுக்கு மிஞ்சும். மலையில் பிறந்து நிலத்தில் தவழ்ந்து கடலில் கலப்பது தான் ஆறுகளின் இயல்பு. இயற்கை வகுத்த நியதியும் இதுதான். ஆனால் இன்றைய மனிதர்கள் தமது சுயலாபத்துக்காக ஆறுகளை மறித்து அணைகளைக் கட்டுவதுடன் பெருமளவு நீரையும் தேக்கி வைக்கின்றனர். இதனால் பூமியின் தகடு களில் சம நிலை பாதிக்கப்பட்டு பூமியதிர்வுகள் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. இன்று அணைகள் இல்லாத நாடுகளே இல்லை என்ற அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. இதன் விளைவுகளை நாம் வாழுகின்ற பூமி தாங்கிக் கொள்ளுமா என்பது சந்தேகமே.

இவ்வாறுதான் வகை தொகையின்றி அழிக்கப்படும் காடுகளாலும் பூமியின் சம நிலை பாதிக்கப்படுகின்றது. காலநிலையில் தாறுமாறான மாறுதல்கள் தோன்றுகின்றன. கொடிய வறட்சி, திடீர் வெள்ளப்பெருக்கு, அதிக உஷ்ணமென் பன இந்த உலகை வாட்டி வருகின்றன.

இயற்கையன்னை மனிதர்களின் தாகத் தைத் தணிப்பதற்கென்றே பூமிக்கடியில் என்றும் வற்றாத வகையில் தூய நீரைப் படைத்தாள். ஆனால் மனிதர்களின் தீய செயற்பாடுகளால் அதற்கும் மாசு ஏற்பட்டு விட்டது. எதிர்காலத்தில் அருந்துவதற்குத் தூய நீர் கிடைக்குமா என்ற சந்தேகமும் ஏற்பட்டு விட்டது. இனியொரு உலக பெரும் போர் ஏற்படுமேயானால் அது நீருக்காகவே இருக்குமென ஏற்கெனவே ஆரூடம் கூறப் பட்டு விட்டது. இதிலிருந்து எதிர்காலத்தில் நீருக்கு ஏற்படப்போகும் தட்டுப்பாடும், மதிப்பும் தெளிவாகத் தெரிகின்றன. இத்தகையதொரு நிலைக்கு மனிதன் தன்னைத்தானே இட்டுச் சென்றுள்ளான்.

நிலவை விரும்பாதவர்கள் எவருமே இங்கு இல்லையென்றுதான் கூற வேண்டும். அதைத் தெய்வமாகக் கூட வணங்குவர். சந்திரபகவான் என்ற சிறப்புப் பெயரும் இதற்குண்டு. ஆனால் மனிதர்கள் இதில் தமது காலடியைப் பதிப்பதற்குத் துணிந்து செயலிலும் காட்டி விட்டனர். இது தொடர்பாக எவ்வளவோ வாதப்பிரதிவாதங்கள் உள்ள போதிலும் பலர் நிலவில் காலடி வைத்ததை நம்புகின்றனர். தற்போது நிலவில் நீரும், காற்றும் இல்லையென்பதை காரணமாகக் கூறி செவ்வாய்க் கிரகத்தின் மீது மனிதர் களின் பார்வை பதிந்துள்ளது. மனிதர்களை அங்கு குடியமர்த்தும் முயற்சிகளிலும் பலர் ஈடுபட்டுள்ளனர். விஞ்ஞானத்தின் உதவி யுடன் இயற்கையை வெல்ல முடியுமென்ற வெறி மனிதனுள் ஆழப் பதிந்து விட்டது. இதனால் இயற்கை தனக்கு வழங்கிய ஆறாவது அறிவை அவன் இயற்கைக்கு எதிராகவே பயன்படுத்துவ தற்குத் துணிந்து விட்டான்.

இவ்வாறுதான் உணவுப் பொருள்களிலும் அவன் கைவைத்து விட்டான். உணவுப் பயிர்களில் இருந்து செயற்கையான வகையில் அதிக விளைச்சலைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் இத்தகைய உணவுப் பொருள்கள் மனிதர்களுக்குத் தீங்கானவை என்றும் கூறப்படுகின்றது. மனிதர்களே மனிதர் களுக்குத் தீங்கிழைக்கும் செயலாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.

இவ்வாறுதான் செயற்கையாக மழையை உருவாக்கும் முயற்சிகளும் இடம்பெறுகின்றன. மேலும் விஞ்ஞானத்தின் மூலமாக மனிதர்களின் ஆயுளை அதிகரிக்கச் செய்ய லாம் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் இதனால் ஏற்படப்போகும் எதிர் விளைவுகள் தொடர்பாக மனிதர்கள் கவனத்தில் கொள்வதே இல்லை. இவற்றுக்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இயற்கையன்னை அடிக்கடி சீற்றம் கொண்டு கிளர்ந்தெழுவதைக் காண முடிகின்றது. சுனாமி, பூகம்பம், சூறாவளி, கடல் கொந்தளிப்பு, பெருவெள்ளம் என்பன இயற்கையின் சீற்றத்தின் அடையாளங்களே. ஆனால் நாம் இவற்றையெல்லாம் அலட்சியம் செய்து வருகின்றோம். விஞ்ஞான வளர்ச்சியின் மமதையில் கொக்கரிக்கின்றோம்.

ஆனால் இயற்கையுடன் மோதுகின்ற ஆற்றல் மனிதர்களுக்கு கிடையவே கிடைக்காது. ஏனென்றால் மனிதர்களைப் படைத்துப் பாதுகாப்பது காருண்யம் மிக்க இயற்கை அன்னைதான். அவளின் மனதை நோகடிக்கச் செய்யும் இயற்கையை எம்மைப் பாதிக்கும் என்பதை மனிதர்கள் இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும். தொடர்ந்தும் மனிதர்கள் இதனை உணர்ந்து கொள்ளாது செயற்படுவார்களாயின் அழிவு கள் அவர்களுக்குத்தான்.

இயற்கையை எவராலுமே வெல்ல முடியாது. ஏனென்றால் இந்த உலகையே படைத்து, காத்து வருபவள் அந்த இயற்கை அன்னை தான். அவளைப் போற்றுவோம். அவள் நிழலில் ஆறுதல் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் எடை அதிகரிக்க...


இன்றைய சூழலில் உடல் எடையைக் குறைக்க பலரும் முயற்சி செய்து கொண்டிக்கும் அதேவேளை, உடல் எடையை அதிகரிக்கவும் பலர் முயற்சிகளை எடுக்கின்றனர். அதற்காக சகல உணவுகளையும் உண்ணக் கூடாது.
உடல் ஆரோக்கியமாக இருக்கும் விதத்தில் உணவுகளை உட்கொண்டால் தான், உடல் எடை அதிகமாவது, குறைவது போன்றவை ஏற்படுவதோடு, உடலை எந்த ஒரு நோயும் தாக்காமல் இருக்கும்.

## ஓட்ஸ்




காலையில் சாப்பிட ஓட்ஸ் மிகவும் சிறந்த ஊட்டச்சத்துள்ள உணவு. அதிலும் இதில் அதிக அளவு இரும்புச்சத்து இருக்கிறது. இதனால் உடலில் சீரான இரத்த ஓட்டம் பேணப்படுவதோடு, உடலும் பருமனடையும்.

## முட்டை




அனைவருக்குமே முட்டையில் அதிக அளவு புரோட்டீன் உள்ளது என்பது தெரிந்ததுதான்.
அத்தகைய முட்டையை தினமும் ஒன்று அல்லது இரண்டு சாப்பிட்டு வந்தால், உடலுக்கு அதிகமான அளவு புரோட்டீன், விற்ற மின் ஏ, டி, ஈ மற்றும் நல்ல கொலஸ்ட்ரோல் போன்றவை கிடைத்து, உடல் எடையும் அதிகரிக்கும்.

## வெண்ணெய்



அனைவரும் வெண்ணெய்யை தினமும் உட்கொண்டால் உடல் பருமனடையும் என்று நினைக்கின்றனர்.
உண்மையில் வெண்ணெய்யை சாப்பிட்டால், உடல் எடை அதிகரிக்கும் தான்.
ஆனால் தினமும் சாப்பிட்டால் அது இதயத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

## ஜூஸ்



உடல் ஆரோக்கியமாகவும், எடை அதிகரிக்கவும் தினமும் ஏதேனும் ஒரு பழத்தை ஜூஸ் போட்டு குடித்தால் உடலுக்கு போதிய ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதோடு, உடல் எடையும் அதிகரிக்கும்.

## தயிர்



பழங்களை விட, தயிரில் 118 கலோரிகள் இருக்கின்றன.
ஆகவே இதனை தினமும் உணவில் சேர்த்து வந்தால் உடல் எடை விரைவில் அதிகரிக்கும்.

## வாழைப்பழம்




வாழைப்பழத்தில் காபோவைதரேற்று மற்றும் ஊட்டச் சத்துக்கள் மட்டும் இல்லை, குறைந்தது 100 கலோரிகளும் உள்ளன.
எனவே உடல் எடையை அதிகரிக்க நினைப்பவர்கள், வாழைப்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் நல்லது.


## உருளைக்கிழங்கு



உருளைக்கிழங்கை வேக வைத்து தினமும் சாப்பிட்டு வந்தால், உடல் எடை விரைவில் அதிகரிக்கும்.




# சத்தமில்லாத ஹெலிகொப்டர்



சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாத வகையில் பறக்கும் ஹெலிகொப்டரை ஜேர்மன் நிறுவனம் வடிவமைத்துள்ளது.
பொதுவாக ஹெலிகொப்டர்கள் புறப்படும் போதும், பறக்கும் போதும் கடுமையான அதிர்வுகளையும், சத்தத்தையும் எழுப்புகின்றன.
இவை பறக்கும்போது தூசு, சத்தம் போன்றவற்றால் சுற்றுப்புற சூழலுக்கு பாதிப்புகள் ஏற்படுகின்றன.
சத்தம் ஏதும் இல்லாமல், அதிர்வுகள் இன்றி பறக்கும் ஹெலிகொப்டரை ஜேர்மனியின் இ-வாலோ என்ற நிறுவனம் வடிவமைத்துள்ளது.
விமானத்தை போன்று இந்தவகை ஹெலிகொப்டர் செங்குத்தாக விண்ணில் பாய்ந்து, அதேபோன்று தரையிறங்கும் தன்மை கொண்டது.இந்த ஹெலிகொப்டரின் முதல் சோதனை பயணம் கடந்த 17 ஆம் திகதி ஜேர்மனியில் உள்ள கரிஷ்ருக் பகுதியில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குறைந்த செலவில் வீடு கட்டிய விவசாயி



அதிகளவில் இயற்கையான பொருள்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் வீடு ஒன்றைக் கட்டியுள்ளார் 59 வயதான விவசாயி. இரண்டு வருடங்களாக மேற்கொண்ட முயற்சியின் பயனாக உருவாக்கப்பட்ட இந்த வீட்டுக்கு 250 டொலர்கள் மட்டுமே அவர் செலவு செய்துள்ளாார்.

# வயிற்று வலியை மாற்ற சில வழிகள்...

சிலருக்கு வயிற்று வலி உப்புச்சத்தால் ஏற்படும். உடலிலுள்ள குடல் நாம் உள்ளே தள்ளும் எல்லா உணவுகளையும் ஏற்றுக் கொள்ளாதபோதும், உடலின் செரிமான அமைப்பில் கோளாறுகள் ஏற்படும் போதும் வரும் எரிச்சலூட்டும் குடல் நோயினாலேயே இந்த வயிற்று வலி உண்டாகிறது.
இந்த வயிற்று வலியைத் தவிர்க்க சில மருந்துகளும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் உள்ளன. அவையாவன:-

பானங்கள் பருகுதல்

சோடா குடிப்பதன் மூலம் வயிறு தொடர்பான பல்வேறு கோளாறுகளை சரி செய்ய முடியும்.
உங்கள் வயிறு எப்பொழுதெல்லாம் கனமாகவும், கடினமாகவும் இருக்கிறதோ அப்பொழுதெல்லாம் இந்தப் பானங்களை குடிப்பதால் பலன் கிடைக்கும்.

மருந்துகள்

இயற்கை வைத்தியத்தையும் மீறி வலி அதிகமிருந்தால், வயிற்று வலிக்கான மருந்துகளை எடுத்துக் கொள்ளவும். உடனடியாக நிவாரணம் தரக்கூடிய பல்வேறு செரிமான மருந்துகள் கடைகளில் கிடைக்கின்றன.
மெதுவாக மற்றும் சரியாக மென்று சாப்பிடுவதன் மூலமாக வயிற்றில் உணவு தங்கி விடுவதைத் தவிர்க்க முடியும். இதன் மூலம் வாயுக்கள் உருவாவதைத் தவிர்த்திட முடியும். உணவு முறையும், தொடர்ந்த உடற்பயிற்சியும் செரிமானம் தொடர்பான பிரச்சினைகள் வராமல் தவிர்க்க உதவுகின்றன.
மேலும், சுகாதாரமில்லாத உணவுகளை தவிர்த்து விட்டு, ஆரோக்கியமான உணவை உண்பதும் மற்றும் சரியான வாழ்க்கை முறையை பின்பற்றுவதும் வயிற்று வலியை விரட்ட நாம் கடைப்பிடிக்க வேண்டிய முறைமைகளாகும்.
இந்த செயற்பாடுகளில் எதுவும் உங்களுக்கு பலனளிக்கவில்லை என்றால், உடனடியாக மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரேடாருக்கு புதிய யுக்தி கொடுத்த டொல்பின்கள்

டொல்பின்கள் பாலூட்டி வகையைச் சார்ந்தவை. அவை சமுதாயமாக வாழும் தன்மை கொண்டவை. உணவைப் பெறுவதிலும் குட்டிகளைப் பராமரிப்பதிலும் அவை ஒன்றுக் கொன்று கூட்டாகச் செயற்படும்.

உலகில் 37 வகை டொல்பின்கள் இருக்கின்றன. இவற்றில் 32 வகை டொல்பின்கள்கடலில்வாழ்கின்றன. 5வகைடொல்பின் இனங்கள் ஏரிகளில் காணப்படுகின்றன.

டொல்பின்கள் கடல் மட்டத்தில் இருந்து 260 மீற்றர் ஆழத்தில் கூட வாழும் தன்மை பெற்றவை. அவை சுவாசிப்பதற்காக அடிக்கடி கடல்மட்டத்துக்கு வந்து 'டைவ்' அடித்துவிட்டுச் செல்லும். ஆபத்துவேளைகளில் 15 நிமிடம் வரை தண்ணீரில் மூழ்கியிருக்கும். அத்துடன் டால்பின்கள் 'எகோலொகேசன்' எனும் முறையில் எதிரொலி முறைப்படி உணவு தேடல் மற்றும் இடப் பெயர்ச்சியைமேற் கொள்கின்றன. மொத்தத்தில் மிகவும் அமைதியான விலங்கான டொல்பின்கள், மனிதர்களுக்கு பல்வேறு வழிகளில் உதவி வருகின்றன. எனவே டொல்பினை வைத்து பல ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுவாக டொல்பின்கள் நீரில் மூழ்கி உள்ள பொருள்களை ஒலி அலைகளை அனுப்பி அவை என்ன பொருள்கள் என்று கண்டறிகின்றன. இந்த யுக்தி பயன்படாத நேரங்களில் நீர்க் குமிழிகளை எழுப்பி பொருள்கள் மீதுள்ள தூசுகளை அகற்றிவிட்டு இரையை அடையாளம் காண்கின்றன.



உலகில் 37 வகை டொல்பின்கள் இருக்கின்றன. இவற்றில் 32 வகை டொல் பின்கள் கடலில் வாழ்கின்றன. 5 வகை டொல்பின் இனங்கள் ஏரிகளில் காணப்படுகின்றன.

டொல்பின்களின் இந்த ஆய்வு முறையைப் பின்பற்றி வெடி பொருள்களை துல்லியமாகக் கண்டறிய உதவும் புதிய ரேடார் ஒன்றை லண்டன் தெற்கு ஆம்ப்டன் பல்கலைகழக விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர். தற்போதுள்ள ரேடார் முறையில் நீரில் மூழ்கியுள்ள அனைத்துப் பொருள்களுமே தெரிய வரும்.

இதன் மூலம் பல நேரங்களில் தவறான பொருள்கள் அடையாளம் காணப்படுகின்றன. இந்நிலையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ரேடார் மூலம் நீரில் மூழ்கியுள்ள வெடி பொருள்களை துல்லியமாக அறிந்து கொள்ள முடியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.



# யூகலிப்டஸ் இலையில் தங்கத் துகள்

## ஆஸி. விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு


மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள கல்கூர்லி என்ற பகுதி தாது வளம் நிறைந்த பகுதி. இங்கு தங்கம் அதிகளவில் இருப்பதாக 1800 ஆம் ஆண்டுகளிலே ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. இங்கு பொது நலவாய அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி மையத்தின் விஞ் ஞானிகள் ஆய்வு மேற் கொண்டனர். மண் வளத்துக்கும் அங்குள்ள தாவரங்களுக்கும் உள்ள தொடர்பு குறித்து இவர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டனர். கல்கூர்லி பகுதியில் உள்ள யூகலிப்டஸ் மரத்தின் இலைகளை அதிநவீன எக்ஸ்ரே கருவி மூலம் படம் பிடித்துப் பார்த்த போது அதில் மிக நுண்ணிய அளவில் அதாவது தலைமுடியின் அகலத்தில் 5 இல் ஒரு பங்கு அளவுக்கு தங்கத் துகள் படிந்திருந்ததைக் கண்டு பிடித்தனர்.

இதுகுறித்து புவிவேதியியல் நிபுணர் மெல் லிண்டர்ன் கூறுகையில், யூகலிப்டஸ் மரத்தின் வேர்கள் தரையில் 100 அடி ஆழம் வரை ஊடுருவி தங்கத் துகள் அடங்கிய நீரை உறிஞ்சுகின்றன. தங்கத் துகள் இலைகள் மற்றும் பக்கக் கிளைகளுக்குக் கடத்தப்படுகின்றன. அவை பின்னர் காய்ந்து உதிர்ந்து விடுவதால் மரத்துக்கு பாதிப்பில்லை" என்றார்.

இந்த ஆராய்ச்சிக் கட்டுரை 'நேச்சர் கம்யூனிகேஷன்' என்ற ஆய்வு இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதன்மூலம் பூமிக்கு அடியில் உள்ள தாது வளங்களைத் தோண்டிப் பார்க்காமலேயே அங்குள்ள தாவரங்களின் மாதிரிகளை ஆய்வு செய்வதன் மூலம் கண்டுபிடித்துவிடலாம் என்று ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியில் பொதிந்துள்ள தாமிரம் மற்றும் துத்தநாகம் போன்ற வளங்களையும் இதே முறையில் அங்குள்ள தாவரங்களை ஆராய்வதின் மூலம் கண்டுபிடித்துவிடலாம் என ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

யூகலிப்டஸ் தங்கம் காய்க்கும் மரங்களா என்று ஆஸி. விஞ் ஞானிகளிடம் கேட்டால் 500 மரங்களை அழித்தால்தான் சிறிய மோதிரம் செய்யும் அளவுக்கு தங்கம் கிடைக்கும் என்கின்றனர்.



*யூகலிப்டஸ் மரத்தின் வேர்கள்' தரையில் 100 அடி ஆழம் வரை ஊடுருவி தங்கத் துகள் அடங்கிய நீரை உறிஞ்சுகின்றன. தங்கத்துகள் இலைகள் மற்றும் பக்கக் கிளைகளுக்கு கடத்தப்படுகின்றன. அவை பின்னர் காய்ந்து உதிர்ந்து விடுவதால் மரத்துக்குப் பாதிப்பில்லை" என்றார்.*




சமூக வலைத்தளங்களில் கணக்கு வைத்திருப்பது என்பது தற்போது அனைவரதும் கட்டாயக் கடமையாக மாறிவருகிறது எனலாம். இதே போல் பேஸ்புக்கில் கணக்கு வைத்திருக்கும் ஒரு நபர் இறந்து விட்டால் அவரது கணக்குக்கு என்ன நடக்கும் என்று தெரியுமா? அது செயற்படாத கணக்காக மாற்றம்பெறாது. மாறாக பின்வருமாறு பயன் படுத்தலாம். பொதுவாக, இறந்தவரின் குடும்பத்தினர், அவரின் பேஸ்புக் கணக்கு, அவரின் புகைப்படம், அவர் பதித்த புகைப்படங்கள், தெரிவித்த தகவல்கள் என அனைத்தும் தொடர்ந்து உயிர்ப்புடன் இருக்கவே விரும்புவார்கள்.

பேஸ்புக் கணக்கு ஒன்றை, அதற்கானவரின் மரணத்துக்குப் பின்னால் நினைவாக வைத்திருக்க வழியொன்று உள்ளது. இதனை memorialize- அவரது கணக்கு என அழைப்பர். இந்த வகை கணக்கு வழக்கமான கணக்கு நடைமுறையிலிருந்து வேறுபட்டது. இந்தக் கணக்கில் யாரும் லொக் இன் செய்ய முடியாது. புதியதாக எந்த ஒரு நண்பரின் வேண்டுகோளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இந்த கணக்கில் அதனை உருவாக்கியவரின் தனிப்பட்ட செட்டிங்ஸ் பாதுகாக்கப்படும்.




எனவே இறந்தவரின் கணக்குக்கு அவருடைய நண்பர்கள், 'டைம்லைனில்' தகவல்களைப் பதியலாம். குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அதில் தங்கள் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளலாம். 'தனிப்பட்ட தகவல்' எனப்படும் தனிப்பட்ட தகவல் களையும் பகிர்ந்து கொள்ளலாம். இறந்தவர் பகிர்ந்து கொண்ட தகவல்கள் அப்படியே வைக்கப்படும். நண்பர்கள் அவற்றை எந்த நேரத்திலும் பார்க்கலாம். புகைப்படங்கள், தரநிலை பதிவேற்ற தகவல்கள், இணைப்பு, காணொலிகள் இன்னும் பிற நண்பர்களின் பார்வைக்கு எப்போதும் கிடைக்கும். இருப்பினும் நண்பர்களுக்கு சிறப்பு நிகழ்வுக்கான நினைவுக் குறிப்புகள் கிடைக்கா . நீங்கள் அறிந்த நண்பர்கள் என்ற பட்டியலில், இறந்தவரின் பெயர் இருக்காது. அக்கவுண்ட் ஒன்றை நினைவக அக்கவுண்ட்டாக அமைக்க அதற்கென்று இருக்கும் முகவரியில் உள்ள விண்ணப்பத்தை இறந்தவர்களின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் நிரப்பி அனுப்பலாம்.

இதில் கேட்டுள்ள இறப்புச் சான்றிதழ்களையும் அனுப்ப வேண்டியிருக்கும். இல்லை எனில் உயிரோடு இருக்கிறவர்களின் நெருங்கிய உறவினர் என பொய்யாக, பலர் விண்ணப்பத்தை அனுப்பி விடுவார்கள்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலிப் பிராணிகள்

**மனிதக்குரங்கு**

மனிதர்கள் குரங்குகளிலிருந்து தான் வந்தனர் என்பது உண்மை போலும். ஏனெனில் அந்த மனிதக் குரங்குகள் மிகவும் புத்திசாலிகளாக உள்ளன. மேலும் அவை என்ன சொன்னாலும் அதனை விரைவில் கிரகித்துக் கொண்டு, அவற்றைச் சரியாகச் செய்யும் இயல்பு படைத்தவை. சில சமயங்களில் இந்த மனிதக்குரங்குகளுடன் மனிதர்கள் போட்டிப் போட்டால் இவை மனிதர்களையே தோற்கடித்துவிடும். அந்த அளவுக்கு இவை புத்திக்கூர்மையுடன் உள்ளது.



**எறும்பு**

எறும்புகளும் புத்திசாலித்தனத்தில் குறைந்தவை அல்ல. ஏனெனில் மனிதர்களுக்குக் கூட எந்த ஒரு பாதையிலும் சரியாகப் பயணிக்கத் தெரியாது. ஆனால் இவை எப்போதும் ஒரே நேரத்தில் தமக்குரிய உணவுகளை எடுத்துச் செல்லும் போது, மற்றவை களுடனும் சரியாக தொடர்பு கொண்டு, நேரான பாதையையே சரியாகக் கடைப்பிடித்துச் செல்லும். மேலும் எந்த ஒரு பிரச்சனை வந்தாலும் இவை எளிதில் தப்பித்துக் கொள்ளும் புத்திசாலித் தனமான திறனைக் கொண்டது.



**கிளி**

'சொன்னதை சொல்லுமாம் கிளிப்பிள்ளை' என்று சாதாரணமாகச் சொல்லவில்லை. கிளியும் மிகவும் புத்திசாலியான ஒரு பறவைதான். அதிலும் அவைகளுக்கு மனிதர்களைப் போலவே குரலும் உண்டு. மேலும் அவை நாம் பேசுவதைக் கூர்மையாகக் கவனித்து அவற்றையே பேசும் தன்மையும் கொண்டவை. எதைச் சொல்லிக் கொடுத்தாலும், அதை நன்கு ஞாபகம் வைத்திருக்கும் திறமை கொண்டவை.




**டொல்பின்**

அனைவரையும் எளிதில் தமது குணத்தால் கவருபவை டொல்பின்கள். அதிலும் அவை மனிதர்களுக்கு மிகவும் பிடித்த விலங்குகளுள், நண்பர்கள் போன்று பழகுவதில் வல்லமை கொண்டவை. குழந்தைகளுக்கு மிகவும் பிடித்ததாகவும் இருப்பவை. மேலும் அவைகளுக்கு தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை தாமாகவே எளிதில் சரிசெய்துவிடும் அளவு புத்திசாலித்தனம் உள்ளது. அதிகமான ஆய்வில் புத்திசாலியான விலங்குகளில் நாம் பேசுவதை எளிதில் புரிந்து கொண்டு அதற்கமையச் செயற்படுவதில் டொல்பின்கள் மிகவும் சிறந்தவை என்று கூறப்படுகிறது.



**பென்குயின்**

பென்குயின்கள் சுதந்திரப் பறவைகள். இது சொல்வதை விரைவில் புரிந்து கொள்ளும் தன்மை வாய்ந்தவை. அவை பார்க்க மிகவும் அழகாக இருக்கும். மேலும் இவற்றிடம் எதைச் சொன்னாலும் அதை அப்படியே திருப்பிச் சொல்லும் திறன் உள்ளது. இவற்றுக்கு வேறு எதைச் சொல்லிக் கொடுத்தாலும், விரைவில் அதனைப் பழகிக் கொள்ளும் திறமையுள்ளது.



**யானை**

யானைகளும் ஒரு வகையில் மனிதர்களைப் போன்றவை தான். அதிலும் விலங்குகளில் மிகவும் சிறந்தவை என்று சொல்லலாம். மேலும் இவற்றுக்கு எம்மால் நம்பமுடியாத அளவு ஞாபக சக்தி உண்டு. இவற்றுக்கு மனிதர்களைப் போலவே உணர்ச்சிகளும் உள்ளன.

**நாய்**

நாய்கள் வீட்டில் வளர்க்கும் ஒரு சிறந்த புத்திசாலியான செல்லப்பிராணிகள். ஏனெனில் அவை, அவற்றுக்கு எதைச் சொல்லிக் கொடுத்தாலும், அதை நினைவில் வைத்துக் கொள்ளும் திறன் கொண்டவை. மேலும் அவை மனிதர்களின் உணர்ச்சியைப் புரிந்து, அதற்கேற்ப நடக்கத் தெரிந்த சிறந்த புத்திசாலியான விலங்குகள். அதிலும் இவை மிகவும் நன்றியுள்ளவை.





மனிதர்களை விட மிருகங்கள் புத்திசாலிகள் மட்டுமல்ல போட்டி, பொறாமை போன்ற குணங்கள் இன்றி சிறப்பாகச் செயற்படுகின்றன




வீசா இல்லாமல் படகு மூலம்
அவுஸ்திரேலியாவுக்கு வரும்
எவருமே அங்கு
குடியமர முடியாது

ஆட்கடத்தல்காரர்களின் பொய்யான வாக்குறுதிகளைக் கேட்டு ஏமாற வேண்டாம். நீங்கள் கொள்வனவு செய்வது, அவுஸ்திரேலியாவுக்கான பயணச்சீட்டு அல்ல.

நீங்கள் ஒரு அகதியாக அடையாளம் காணப்பட்டாலும், இப்போது நீங்கள் பப்புவா நியூகினி அல்லது நௌறு போன்ற நாடுகளிலேயே குடியமர்த்தப்படுவீர்கள்.

அகதிகள் அல்லாத அனைத்துப் புகலிடம் கோருவோரும் மீண்டும் இலங்கைக்கே அனுப்பப்படுவர்.

அவுஸ்திரேலியாவுக்கு படகில் போக வேண்டாம்

Australian Government

அவுஸ்திரேலிய அரசாங்கம் விடுக்கும் செய்தி
மேலதிக விபரங்களுக்கு www.australia.gov.au/novisa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவிருக்கும் வரை நினைவிலிருக்கும்

## நீல் ஆம்ஸ்ட்ரோங்



நீல் ஆம்ஸ்ட்ரோங் 1930 ஒகஸ்ட் 5 ஆம் திகதி அமெரிக்காவின் ஓஹியோ மாநிலத்தில் ஸ் ரீபன் கோனிக் ஆம்ஸ்ட்ரோங் வயோலோ லூயிஸ் ஏஞ்சல் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவரது தந்தையார் ஒரு கணக் காளர். எனினும், வான் பரப்பிலும் அக்கறை கொண்டவர்.

1969 ஆம் ஆண்டு தனது 39 ஆவது வய திலே நிலவில் தன் காலடியைப் பதித்து முழு உலகை யுமே அண்ணாந்து பார்த்துப் பிர மிக்க வைத்தார். மனிதன் இதுவரை நிகழ்த் திய சாதனைகளுள் ஆம்ஸ்ட்ரோங் நிலவில் உலாவியது. அதியுச்ச அசுர சாதனையாக இன்றுவரை போற்றப்படு கிறது.

ஆம்ஸ்ட்ரோங் நிலவில் இறங்கியவுடன் மமதை கொள்ளாது "இது மனிதன் தடம் பதித்த சிறிய காலடி; ஆனால் மனு குலத்துக்கு இராட்சதப் பாய்ச்சல்" என்று கூறினார்.

இதய அறுவைச் சிகிச்சையைத் தொடர்ந்து ஏற்பட்ட உடல் நலக் கோளாறு காரணமாக கடந்த ஆண்டு 2012 ஒகஸ்ட் 25 ஆம் திகதி இறந்தார். எனினும் நிலவிருக்கும் வரை ஆம்ஸ்ரோங் நினைவிலிருப் பார் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ. நிருஷா, தரம்-9,
கிளி/ உருத்திரபுரம் ம.வி.

## பார்ஹீடேடு கூசே



உலகில் மிக உயரமாகப் பறக்கும் பறவை பார்ஹீடேடு கூசே என்ற பறவை ஆகும். இது வியக்கவைக்கும் உயர மான 10,175 மீற்றருக்குப் பறக்கும்தன்மை கொண்டது. வருடத்துக்கு 3 முதல் 8 முட்டைகளை இடும் இந்தப் பறவையால் உலகின் மிக உயரமான எவரெஸ்ட் மலையின் உயரத்தை வெகு இலகுவாகப் பறக்க முடியும். இதனால் ஒக்சிசன் மிகக் குறைந்த இடத்தில் சுவாசிக்கவும், அதனுடைய உடல் வெப்பநிலையை இழக்காமல் கட்டுபடுத்தவும் முடியும்.

இந்தப் பறவையால் ஒரு நாளைக்கு 1000 மைல் தூரத்தை ஜெட் வேகத்தில் பறக்க முடியும். இதனுடைய நீளம் 71 முதல் 76 செ.மீற்றர் ஆகும். நிறை 1.87 முதல் 3.2 கிலோ கிராம் ஆகும்.

சி.சிந்து, சுதுமலை.

## பழமொழிகள்

- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
- அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
- அடாது செய்பவர் படாது படுவர்.
- அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
- அடியாத மாடு படியாது.
- அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்.
- அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
- அழுத பிள்ளை பால் குடிக்கும்.
- அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

ஜீ. ஸ்ரீபன் ராஜ், தரம்-3,
யா/ நவாலி சென் பீற்றர் றோ.க.த.க. பாடசாலை





## கற்றிடுவோம்

பள்ளிக்கூடம் போகலாம்
பாடங்கள் பல படிக்கலாம்
நல்லாசிரியர் துணையுடன்
நிதமும் அறிவைப் பெருக்கிடுவோம்
திங்கள் முதல் வெள்ளிவரை
தினமும் பள்ளி சென்றிடுவோம்
சனியும் ஞாயிறும் ஓய்வு நாள்
தனியே வீட்டில் தங்கும் நாள்
அம்மா, அப்பா நல்வழி கேட்டு
நாளும் அறிவைக் கூட்டிடுவோம்
காலை 'உதயன்" புதினம் படித்து
உலக அறிவைக் கற்றிடுவோம்
மேலும் மேலும் அறிவை வளர்த்து
நாடு போற்றும் நல் மேதையாவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காதுகளை பாதுகாப்பது எப்படி?

**கா**துக் குறும்பியை அகற்றுவது எப்படி? இப்படிக் கேட்பவர்கள் பலர், குப்பை வாளிக்குள் இருக்கும் குப்பைகளை அகற்றுவது போல காதுக் குறும்பியையும் அகற்ற வேண்டும் என அவர்கள் நினைக்கிறார்கள். உண்மையில் காதுக் குறும்பி என்பது காதையும் செவிப்பறையையும் பாதுகாப்பதற்காக எமது உடல் தானாகவே உற்பத்தி செய்யும் பாதுகாப்புக் கவசம் போன்றது.

பொதுவாக இது ஒரு மென்படலம் போல காதுக் குழாயின் சுவரின் தோலில் படிந்திருக்கும். இதனால் கிருமிகள், சிறுகாயங்கள், நீர் போன்றவை காதைத் தாக்காது பாதுகாக்கிறது. அத்துடன் காதை ஈரலிப் பாகவும் வைத்திருக்கவும் உதவுகிறது. அதிலுள்ள கிருமி எதிர்ப்பு (antibacterial properties) பண்பானது வெளிக் கிருமிகள் தொற்றி, காதின் உட்புறத்தில் நோயை ஏற்படுத்துவதையும் தடுக்கிறது. காதுக் குறும்பி (Cerumen) என்பது இயல்பாக எண்ணெய்த்தன்மை உள்ள ஒரு திரவமாகும். சருமத்தில் உள்ள சில சுரப்பிகளால் (Sebaceous and Ceruminous glands) இது சுரக்கப்படுகிறது.

ஒவ்வொருவரது உடல் நிலைக்கும் ஏற்ப இது நீர்த்தன்மையாகவோ, பாணிபோலவோ, திடமான கட்டியாகவோ இருக்கக்கூடும். காதின் சுவரிலிருந்து உதிரும் சருமத் துகள்கள், முடித் துண்டுகள், ஆகியவற்றுடன் கலந்து திடப் பொருளாக மாற்றமுறும். முடியின் உதிர்ந்த கலங்கள் அதிகமாக இருப்பதும் எவ்வளவு நீண்ட காலம் வெளியேறாது காதினுள்ளே இருந்தது என்பதும் எந்தளவு இறுக்கமாகிறது என்பதற்கு முக்கிய காரணங்களாகச் சொல்லலாம்.




காதுக் குறும்பி காதின் பாதுகாப்புக்கு மிக அவசியமானது என்பதால் வழமையாக எவரும் அதனை அகற்ற வேண்டியதில்லை. தினமும் புதிது புதிதாக உற்பத்தியாகி வர பழையது எம்மையறியாது தானாகவே சிறிது சிறிதாக வெளியேறிவிடும்.

மென்மையான குறும்பியானது முகம் கழுவும் அல்லது குளிக்கும் நீருடன் கலந்து வெளியேறிவிடும். அல்லது காய்ந்து உதிர்ந்துவிடும். சிலருக்கு, பல்வேறு காரணங்களால் வெளியேறாது உள்ளேயே தங்கி இறுகி விடுவதுண்டு. காதுக்குழாய் ஒடுங்கலாக இருப்பதும் சற்று வளைந்திருப்பதும் காரணமாகலாம். சிலருக்கு அது இறுகி, கட்டியாகி வெளியேற மறுப்பதுண்டு. அது அதிகமாகி செவிக்குழாயின் விட்டத்தின் 80 சதவீதத்தை அடைத்துக்கொண்டால் காது கேட்பது மந்தமாகும். ஒரு சிலருக்கு வலி ஏற்படலாம். வேறு சிலருக்கு கிருமித் தொற்றும் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. காதுக் குறும்பிப் பிரச்சினை என மருத்துவர்களிடம் வருபவர்கள் அநேகர். வருடாந்தம் கிட்டத்தட்ட 12 மில்லியன் அமெரிக்க மக்கள் இந்தப் பிரச்சினைக்காக மருத்துவ உதவியை நாடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் மூன்றிலிரு பேருக்கு அதாவது 8 மில்லியன் பேருக்கு மருத்துவ ரீதியாக அதனை அகற்ற வேண்டிய தேவை ஏற்படுகிறது.

## இதை அகற்றுவது எப்படி?

1. பஞ்சு முனையுள்ள இயர் பட்ஸ் நல்லதா, சட்டைப் பின் நல்லதா, நெருப்புக் குச்சி நல்லதா?

2. இவற்றைக் காதுக்குள் விடுவதைப் போன்ற ஆபத்தான செயல் வேறெதுவும் கிடையாது. அவை காதிலுள்ள மென்மையான சருமத்தை உராசி புண்படுத்தக் கூடும் அல்லது அவை உரசிய இடத்தில் கிருமி தொற்றிச் சீழ்ப் பிடிக்கக் கூடும் அல்லது அவை காதுக் குறும்பியை மேலும் உட்புறமாகத் தள்ளி செவிப் பறையைக் காயப்படுத்தலாம். இதனால் நிரந்தரமாக காது கேட்காமல் செய்து விடவும் கூடும். எனவே இவற்றை உபயோகிப்பது அறவே கூடாது.

3. காதுக் குறும்பியை கரைத்து இளகவைத்தால் தானாகவே வெளியேறிவிடும். மிகவும் சுலபமானது குறும்பி இளக்கி நீர்தான். உப்புத் தண்ணீர், சோடியம் பைகாபனேட் கரைசல், ஒலிவ் ஓயில் போன்றவையும் உதவக் கூடும். அதற்கெனத் தயாரிக்கப்பட்ட விசேட காதுத்துளி மருந்துகளும் உள்ளன.

ஐந்து நாள்கள் காலை, மாலை அவ்வாறு விட்டபின் சுத்தமான வெள்ளைத் துணியை திரி போல உருட்டி அதனால் காதைச் சுத்தப்படுத்துங்கள். பட்ஸ், குச்சி போன்றவற்றைப் பாவிக்க வேண்டாம். அல்லது சுத்தமான நீரை காதினுள் விட்டும் சுத்தப்படுத்தலாம்.

இவ்வாறு வெளியேறாது விட்டால் மருத்துவர் சிறிய ஆயுதம் மூலம் அகற்றக் கூடும். அல்லது அதனை கழுவி வெளியேற்றுவார். இதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஊசி போன்ற குழாய்கள் மூலம் நீரைப் பாய்ச்சிக் கழுவுவார்கள். இதன்போது எந்தவித வலியும் இருக்காது. சில விசேட சிறு ஆயுதங்கள் மூலம் அல்லது உறிஞ்சி எடுக்கும் உபகரணம் மூலம் சுலபமாக அகற்றவும் முடியும். தற்போதுள்ள குறும்பி அகற்றப்பட்ட போதும் சிலருக்கு இது மீண்டும் மீண்டும் சேரக் கூடிய சாத்தியம் உண்டு. மீண்டும் ஏற்படாமல் தடுக்க முடியுமா?

அதற்கென மருந்துகள் எதுவும் கிடையாது. வாரம் ஒரு முறை குளிக்கும்போது கையால் ஒரு சிரங்கை நீரை காதுக்குள் விட்டுக் கழுவுவது அதனை இறுகாமல் தடுக்கக் கூடும். ஆயினும் காதில் கிருமித் தொற்றுள்ளவர்களும் செவிப்பறை துவாரமடைந்தவர்களும் அவ்வாறு சுத்தம் செய்வது கூடாது.

அடிக்கடி குறும்பித் தொல்லை ஏற்படுபவர்கள் 6 முதல் 12 மாதங்களுக்கு ஒருமுறை மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெறவோ குறும்பியை அகற்றவோ நேரலாம். ஆயினும் காதுக்குறும்பியை நாமாக அகற்றுவதை விட, தன்னைத் தானே சுத்தம் செய்யும் படி காதின் பாதுகாப்பை அதனிடமே விட்டு விடுவது தான் உசிதமானது.

---

# பூமி எவ்வாறு தோன்றியது?



ஸோலார் நெபுலா வெடிப்பிலிருந்து தான் நாம் வாழும் பூமி உருவானது. இந்த ஸோலார் நெபுலா என்பது சூப்பர் நொவா எனனும் முதல் பெருவெடிப்பு பிரிந்து வந்தது. சற்று விரிவாக பார்த்தால் சூபர் நொவா தான் இந்த யூநிவர்ஸ் அல்லது பிரபஞ்சத்தின் தாய். சுமார் 13.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு சூப்பர் நொவா எனும் மிகப்பெரிய எரியும் கோளம் வெடித்துச் சிதறியது. அதிலிருந்து அண்டம் முழுவதும் எறியப்பட்ட சிதறல்கள் தான் நாம் இப்போது காணும் மில்லியன் கணக்கிலான நட்சத்திரங்கள். அதில் ஒன்று தான் ஸோலார் நெபுலா எனும் தூசு மற்றும் ஹீலியம், ஹைட் ரஜன் நிரம்பிய நெருப்புப் பந்து.

ஏறக்குறைய சுமார் 4.5 பில்லி யன் ஆண்டுகளுக்கு முன்பு, ஸோலார் நெபுலா வெடித்துச் சிதறியதால் உருவானதுதான் சூரிய மண்டலம். ஸோலார் நேபுலாவின் மையப்பகுதி சூரியனா ஆனது. அதன் சிதறல்கள் ஏனைய கோள்காளாகவும் அதிலிருந்து துணைக் கோள்களும் உருவாகின. இந்தக் கோள்களில் ஒன்று தான் பூமி. பூமியின் வயது 450 கோடி ஆண்டுகள். பூமி அதன் தாயான சூரியனை மணிக்கு 100,000 கி.மீ. வேகத்தில் சுற்றி வருகிறது. இதற்குக் காரணம் சூரியனின் ஈர்ப்புவிசை என்பது எமக்குத் தெரியும். இந்த ஓயாத சுழற்சியால் தான் பூமி உட்பட அனைத்தும்கோள [illegible] பெற்றன. பூமியின் மேற் பரப்பு [illegible] தொடங்கியது. ஆனால் உட்பகுதியில் இருந்த வெப்ப அழுத்தத்தின் காரணமாக எரிமலைகள் வெடித்து காபனீரொக்சைட், நீராவியை பெருமளவில் [illegible] [illegible] ணியாவும் வெளியேறின. ஆரம்ப காலத்தில் பூமியில் ஒட்சிசன் இல்லை.

இவ்வாறு வெளியேறிய நீராவி காலப் போக்கில் குளிர்ந்து நீராக மாறி பூமியின் ஆரம்பக் கடல் தோன்றியது. பூமியிலிருந்து நீராவி வெளியேறு வது இன்றும் சில இடங்களில் நிகழ்கிறது. கடலுக்குள் நிகழும் ஓர் இயற்கையான நிகழ்வு ஹைட்ரோ தெர்மல் வெண்ட். அதாவது பூமியிலிருந்து வெப்பம் மற்றும் கனிமங்கள் கடல் நீரில் வெளியேறும். இந்தப் பகுதியில் கடல் நீர் வெப்பமாகவும் கனிம சத்துகள் மிகுதியாகவும் இருக்கும். இது ஆழத்தில் நிகழ்வதால் சூரியனின் புற ஊதா கதிர்கள் இந்தப் பகுதியை அடைந்திருக்க முடியாது.

எனவே கடலில், இப் பகுதியில் தான் உலகின் முதல் உயிரினம்- சயனோ பக்ரீறியா தோன்றியது. இந்த சயனோ பக்ரீறியா ஒரு ஒளிசேர்க்கை செய்யும் உயிர். இது உயிர்வாழ $CO_2$, நீர், சூரிய ஒளி போதுமானவையாக உள்ளன.

இவை அனைத்தும் கடலில் கிடைத்ததால் இந்த ஒளிச் சேர்க்கை செய்யும் சயனோ பக்ரீறியா முதல் உயிரியாக இந்த உலகில் உருவானது.

இது பல்கிப் பெருகத்தொடங்கியது. அப்போது பூமிக்கு சுமார் 700 மில்லியன் ஆண்டுகள். இந்த ஒளிசேர்க்கை செய்யும் ஸயனோ பக்ரீரியா பல மில்லியன் ஆண்டுகளாக மாற்றம் அடைந்து நீர் வாழ் தாவரமாக மாறின. அங்கிருந்து நிலத்துக்குப் பரவின. தவரங்களுக்கு ஒட்சிசன் தேவை இல்லாததால் அவை, அப்போது பூமியில் இருந்த $CO_2$, மழை நீர் சூரிய ஒளி கொண்டு வளரத் தொடங்கின. இவ்வாறு பூமி முழுவதும் உண்டான தாவரங்கள் காபனீரொக்ஸைட் ஐ கிரகித்து, ஒட்சிசனை வெளியிட்டன. இதனால் காபனீரொக்ஸைட் அளவு குறையத் தொடங்கி அவை பிராண வாயுவாக மாறின. மேலும் ஒரு பகுதி $CO_2$ படிமங்களாக, கடலிலும் கரைந்தன. இவ்வாறாக $CO_2$ அளவு குறைந்து போனது. $O_2$ அளவு அதிகரித்தது. இந்த $O_2$ UV ஊதாக் கதிர்கள் எனும் புற ஊதா கதிர்களால் தாக்கப்பட்டு $O_3$ எனும் ஓசோன் மண்டலம் உருவானது.

இந்த ஓசோன் மண்டலம் தான் பூமியை புற ஊதாக் கதிர்களிடம் இருந்து காப்பாற்றி பூமியில் மேலும் பல வகையான உயிர்கள் தோன்றக் காரணம் ஆகின.

இந்த மாற்றங்கள் நிகழ பூமிக்கு நானூறு கோடி ஆண்டுகள் தேவைப்பட்டன. நானூறு கோடி ஆண்டுகளில் நிகழ்ந்த மாற்றங்களே நெருப்பு கோளமாக இருந்த பூமியில் உயிர்கள் உருவாகி நாம் வாழும் உலகமாக மாற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல்:- கலைமுகம்



தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு நினைவாக திருமறை கலாமன்றத்தின் கலை இலக்கிய சமூக இதழான 56 ஆவது கலைமுகம் வெளிவந்துள்ளது.

தமிழ், தமிழர், தமிழ்த் தேசியம், தனிநாயகம் அடிகளார் ஒரு பார்வை என்ற தலைப்பில் முதல் 9 பக்கங்களில் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு எழுதிய கட்டுரையுடன் மேலும் பல கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள், பத்தி, நூல் மதிப்பீடுகள் என்பன 68 பக்கங்களை நிறைத்துள்ளன.

மேலும் திருமறைக் கலாமன்றத்தில் இடம் பெற்றநிகழ்வுகள்புகைப் படத்துடன் பதிவுகளாகவும், அமரர் அருள் பணி வி.பி.தனேந்திராவின் வாழ்க்கைக் கட்டுரை அவரை நினைவுபடுத்தியும் நிற்கிறது.

குமார்

## இறுவட்டு:- எம் தாயே முத்துமாரி



யாழ்.வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் மீது பாடப் பட்ட 'எம் தாயே முத்துமாரி' இறுவட்டின் முதலாவது பாகம் வெளி வந்துள்ளது. தென்னிந்திய புகழ் பூத்த பின்னணிப் பாடகர்களும், ஈழத்துப் பாடகர்களும் பாடல்களைப் பாடியுள்ளனர். இசையை முரளி அமைக்க இறுவட்டில் உள்ள 12 பாடல்களையும் வேலணையூர் சுரேஷ் எழுதியுள்ளார். பாடல்களை தென்னிந்தியப் பாடகர்களாக மனோ, கிருஸ்ணராஜ், ரி.எல்.மகாராஜன், மாலதி ஆகியோருடன் ஈழத்துப் பாடகர்களான எஸ்.ஜி.சாந்தன், ஜெயா சுகுமார், சந்திரமோகன், சிவதர்சிகா போன்றோர் பாடியுள்ளனர்.

செல்வம்

# பனிமனித மர்மத்தை சீண்டிய ஓர் ஆதாரம்!

றொஜர் பீட்டர்ஷன் ஹொலிவூட் சினிமாவில் பிரசித்தி பெற்ற சினிமாத் தயாரிப்பாளர். 1967 ஆம் ஆண்டு அவர் தனது நண்பருடன் படங்களுக்கான இடங்களைத் தெரிவு செய்யும் நோக்குடன், கமரா சகிதம் பல இடங்களுக்கு சென்று காணொலி எடுத்தார்.

ஒரு காடு சார்ந்த பள்ளத்தாக்கின் அருகில் வந்த போது அவர்கள் பயணித்த குதிரை திடீரென திமிறியதால் தடுக்கி விழுந்துவிட்டார்கள். எழுந்து பார்த்தவர்களுக்கு ஆச்சரியம். குறிப் பிட்ட தூர இடைவெளியில் சுமார் 7 அடிக்கும் மேலான உயர முடைய ஓர் உருவம் காட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. உடனே, தனது கமராவின் உதவியுடன் அந்த உருவத்தை ஃபிலிம் ரோல் தீரும்வரை படம் எடுத்துக்கொண்டார் எனினும், அவரது அந்த வீடியோ, பலரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காரணம், குறிப்பிட்ட அந்தக் கால கட்டத்தில் கொட்சில்லா போன்ற திரைப்படங்கள் வந்திருந்ததால், இது ஒரு குறிப்பிட்ட நபருக்கு வேடமிட்டு திட்டமிட்டு எடுக்கப்பட்ட காட்சியாகவே இருக்க வேண்டும் என்ற வாதம் வலுவாக இருந்ததால் அவரது அந்த காணொலி விடயம் அமுங்கிப் போனது. 1990 களில், மைக்ரோசொப்ட் நிறுவனம் பல புதிய மென் பொருள்களைப் பாவனைக்கு விட்டது. அந்தத் தருணத்தில் குறிப்பிட்ட காணொலியை ஆராய்ந்தார்கள். மொத்தமாக 952 பிரேம்கள் கொண்டதாக அமைந்தது அந்தக் காணொலிப் பதிவு.

மனித உடலு டன் மிக நெருக்கமான தொடர்பு களைக் கொண்ட கொரில்லா-சிம்பன்சிகளின் அசைவு களுக்கும் மனித அசைவுகளுக்கும் பெரியள வில் வேறுபாடுகள் உள்ளன. இதனடிப்படையில் குறிப்பிட்ட அந்தக் காணொலியை ஆராய் கையில் அந்த உருவின் அசைவுகள் மனித னுடனோ அல்லது அறியப்பட்ட விலங்குகளுடனோ ஒத்துப்போகவில்லை.

ஒவ்வொரு பிரேமாக ஆராந்த விஞ்ஞானிகள் அது மனித அசைவு அல்ல, கொரில்லாவினதும் அல்ல. இது வரை இனங் காணப்படாத ஒருவகை புதிய உயிரினமாகவே இருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறினார்கள். சாதாரணமாக ஒவ்வொரு விலங்கினதும் தசை நார்கள், எலும்புக்கூட்டு அமைப்புக்கள் என்பன வித்தியாசமானவை. அதனால், எந்த ஒரு விலங்கும் இன்னொரு விலங்கின் அசைவுடன் ஒத்துப் போவதில்லை. உதாரணமாக மனித உடலுடன் மிக நெருக்கமான தொடர்பு களைக் கொண்ட கொரில்லா- சிம்பன்ஸிகளின் அசைவுகளுக்கும் மனித அசைவுகளுக்கும் பெரியளவில் வேறுபாடுகள் உள்ளன. இதனடிப்படையில் குறிப்பிட்ட அந்தக் காணொலியை ஆராய்கையில் அந்த உருவின் அசைவுகள் மனிதனுடனோ அல்லது அறியப்பட்ட விலங்குகளுடனோ ஒத்துப்போகவில்லை. எனவே அது ஒரு அறியப்படாத விலங்குதான் என்பதை அடித்துக் கூறினார்கள். மேலும், அந்த காணொலியில் பதிவாகி இருப் பது 7 அடி 4 அங்குல உயரமும் 225 கிலோ கிராம் நிறையும் கொண்ட ஓர் பெண் விலங்கு என்பதும், முன்புறமாக அது தனது குட்டியைக் காவிச் சென்றுள்ளது என்பதும் தெரியவந்தது.



# வாசகர் திருமுகம்

## கலப்படம் இல்லாத பால் கிடைக்குமா?

பால் உற்பத்தியாளரின் நன்மை கருதியும் நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யவுமென ஆங்காங்கே பால் கொள்வனவு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த நிலையங்கள் பாலைக் கொள்வனவு செய்யும்போது மீற்றர் வைத்து, நீர் கலந்துள்ளதா என்று பரிசீலித்து வாங்குகிறார்கள். எனினும் பாலை நுகர்வோருக்கு வழங்கும்போது இந்த நடைமுறையைக் கடைப் பிடிப்பதில்லை.

தயிர் போடுவதற்காக சங்கத்தில் கொள் வனவு செய்த பாலை நன்றாகக் காய்ச்சி புளிப்பதற்காக உறையும் போட்டு வைத்து, அடுத்த நாள் பார்த்த போது மிகச் சொற்ப அளவு தயிரும், வாங்கிய பாலில் அரைவாசிக்குக் கூடிய தண்ணீரும் இருக்கக்கண்டு அதிர்ச்சியடைந்தேன்.

எனவே நுகர்வோருக்கு பால் வழங்கும் போது மீற்றர் வைத்துப்பார்த்து வழங்கும் முறையைக் கையாள்வது நன்று. பணியாளர்களும் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

சம்பந்தப்பட்ட துறைசார் உத்தியோகத் தர்களும் விவசாய கால்நடை அமைச்சர் ஐங்கரநேசனும் இந்த விடயம் தொடர்பாகக் கவனமெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மங்கை

## சமயத்தலைவர்களும் முன்வரவேண்டும்

இந்து சமயத் தலைவர்கள் பண்டிகைகளுக்கு ஆசிச் செய்தி அனுப்புவதோடு தமிழ் மக்களைத் தாம் பாதுகாப்பதாக நினைக்கிறார்கள். மக்களுக்காகப் போராட, நீதி கேட்க, இவர்களும் மக்களுடன் இணைந்து செயற்பட தயாராக இருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் எமது மக்களை பாது காக்க முடியும். இன்று எமது பிரதேசத்தில் சிறுவர், பெண்கள் பிரச்சினை அதிகரித்துக் காணப் படுகிறது. இவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகான நாம் அனைவரும் ஒன்று திரண்டு போராட வேண்டும். அந்தப் போராட் டத்தில் சமயத் தலைவர்களும் பங்குபற்ற வேண்டும்.

கிறிஸ்தவ சமயத் தலைவர்கள் எமது பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்த முன் நின்று உழைக்கிறார்கள். சர்வதேசத்துக்கு எமது பிரச்சினை தொடர்பில் அறிக்கை விடுகிறார்கள். எனவே இந்து சமயத் தலைவர்களும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முகம் கொடுத்து செயலாற்ற முன் வரவேண்டும்.

பொதுப்பணத்தில் சமய விழாக்களை சிறப்பாக நடத்தி பத்திரிகையில் செய்தி வெளியிடுவதோடு அவர்கள் பணி நின்று விடக்கூடாது. களத்தில் இறங்கிப் போராட முன் வாருங்கள். இதுதான் இன்றைய தேவையாகும்.

தி.நடராசா,யாழ்ப்பாணம்

## அந்தணர்களில் இப்படியும் ஒரு சிலர்

ஆலயம் என்பது ஒரு புனிதமான இடம். தமது மனக்குறைகளை ஓரளவுக்கேனும் குறைப்பதற்கு ஆண்டவனைத் தேடி ஆலயத்துக்குச் சென்று வருகின்றனர் அடியார்கள். அடியார்களின் மனம் நோக வைக்கும் நடவடிக்கைகளை சில அந்தண ஆச்சாரியர்கள் மேற்கொள்வதால், அடியார்கள் படும் வேதனைகள் இவர்களுக்குப் புரிவதில்லை.

இவ்வாறான ஒரு சம்பவம் வலி.மேற்கில் அமைந்துள்ள சிவன் கோயிலில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

சனீஸ்வரனுக்கு எள்ளுப் பொட்டலம் எரித்து வழிபடும் கடைசி நாள் அன்று ஆலயத்தில் பெருந்திரளான அடியார்கள் ஒவ்வொரு திருவுருவத்துக்கும் அந்தணர் பூசையை மேற்கொள்கின்றார். அடியார்கள் அர்ச்சனைக்கான பற்றுச்சீட்டைப் பெற்று வரிசையில் நிற்கின்றனர். வயோதிபப் பெண் ஒருவர் தனது சிட்டையைக் கொடுத்து எவர் எவரது பெயர்களில் அர்ச்சனை செய்ய வேண்டும் என அந்தணரிடம் கூறுகின்றார். இப்பெண் தனது கணவன் பெயரை அடுத்து தன் பெயரைச் சொல்லிக் கொண்டு வருகின்றார். அடுத்து பிள்ளைக ளின் பெயரைச் சொல்ல முற்படுகின்றார். இவ்வேளை அந்தணர் 5 ரூபாவிற்கு சிட்டையை வாங்கி, ஐம்பது பேருக்கு அர்ச்சனை செய்வதாகக் கூறி அந்தப் பெண் மணி கூறிய பிள்ளைகளின் பெயரில் அர்ச்சனை செய்வதற்கு மறுத்து அடுத்தவரிடம் சென்றுவிடுகின்றார். இந்த நிகழ்வானது அப்பெண்ணை விட ஏனைய அடியார்களை மனம் கோண வைத்ததுடன் இத்தகைய விதத்தில் அந்த அந்தணர் நடந்து கொள்ளலாமா? என தங்களுக்குள் பேசிக் கொள்கின்றனர்.

அத்துடன் அந்தப் பெண்ணை அணுகி விடயத்தைக் கேட்கின்றனர். அந்தப் பெண் மணியும் தனக்கு ஐந்து பிள்ளைகள் என்றும் மொத்தமாக குடும்பத்தில் ஏழுபேருக்கும் அர்ச்சனை செய்து கொள்ளவே வந்தேன். இவ்வாறு அந்தணர் செய்தது தன்னை வெகுவாகப் பாதிக்கிறது என்றும் இவ்வாறான சனீஸ்வரன் வழிபாடுஒருவருடத்திற்கு ஒருமுறைவருவதால் குடும்ப நலன்களுக்கான அர்ச்சனை செய்யவே வந்தேன் என்றும் எல்லோருக்கும் அர்ச்சனை செய்ய இன்னும் ஒருவருடம் காக்க வேண்டியுள்ளதே எனக் கூறி மனம் வெதும்புகிறார்.

அந்தணர்கள் இப்படிச் செய்யலாமா? வருமானம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படலாமா? இதனால் இந்தப் பெண்மணி போல் எத்தனையோ அடியார்கள் வேதனைப் படுவார்கள் என்பது இவர்களுக்குப் புரியவில்லையா? பொறுமையைக் கடைப்பிடிக்காமல், அடியாரை வருத்தலாமா?

குமார்

## குற்றச்சாட்டுக்கு விளக்கம்

கடந்த 20.11.2013 ஆம் திகதிய உதயனில் அரியாலை மனோகரியால், இரண்டு பரப்புக் காணி கேட்டு எழுதப்பெற்ற கடிதம் சில தவறான விடயங்களை உள்ளடக்கியுள்ளதால் கீழ்க்காணும் திருத்தங்களை தாங்கள் பத்திரிகையில் பிரசுரித்து உண்மையைத் தெளிவுபடுத்துமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

1. இலந்தைக்குளம் பிள்ளையார் ஆலயம் கொழும்புத்துறையிலேயே உள்ளது. அரியாலையில் அல்ல.

2. எமது ஆலயத்தை தற்போதைய நிர்வாகம் பொறுப்பு ஏற்ற பின் ஆலயக் காணிகளை வேற்று மதத்தவர்க்கு வழங்கவில்லை என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறோம்.

3. பிள்ளையாரின் ஆலயக் காணிகள் வெற்றிடமாக வரும்போது, மனோகரி போன்றவரின் கோரிக்கை நிச்சயமாக பரிசீலிக்கப்படும்.

ஆலய நிர்வாகம் சார்பில், செயலாளர்,
ஸ்ரீ வதிரிபீட விநாயகர் ஆலயம்.

## தேசிய சேமிப்பு வங்கியின் "சல்லி சல்லி"

வானொலியில் தேசிய சேமிப்பு வங்கியின் "சல்லி சல்லி" என்ற விளம்பரம் அடிக்கடி ஒலிபரப்பாகின்றது. தமிழ் ஒலிபரப்பில் பிற மொழிச் சொற்களைத் தவிர்த்திருக்கலாம். தேசிய சேமிப்பு வங்கியில் இப்போதெல்லாம் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர்எனஎண்ணத் தோன்றுகிறது. உதாரணமாக "ரிதிரேகா" என்ற பரிசூதிய சேமிப்பு குறித்து பல விதங்களில் பரப்புரை செய்யப்பட்டு பெரும் சீட்டுக்கள் விற்பனையாகின. ஓரிரு மாதங்கள் குலுக்கல் முறையில் அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு வெற்றியாளர்களின் பெயர் விவரங்கள் பத்திரிகையில் பிரசுரமாகின. பின்னர் அதைப் பற்றி தகவல்கள் எதுவும் பத்திரிகையில் பிரசுரமாகவில்லை. வங்கியின் யாழ்.கிளையில் தொடர்பு கொண்ட போது அது மேலிடத்தின் செயற்பாட்டிற்கு உட்பட்டது என்று மட்டும் பதில் கூறப்பட்டது. பொது மக்களை இவ்வாறு ஏமாறச் செய்வது உகந்ததல்ல. பத்திரிகை மூலமாக தகவல் வெளியிட்டால் உதவியாக இருக்கும். சீட்டிழுப்பு நிறுத்தப்பட்டுள்ளது என்றால் சீட்டு வைத்திருப்பவர்கள் அவற்றை பணமாக மாற்றுவதற்கு அறிவுறுத்தலாம். இதுவே மக்களது எதிர்பார்ப்பாகும்.

ஏமாந்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவு சம்பளம் வாங்கிய முதல் இயக்குநர் ஜான்வூ




துப்பாக்கியில் இருந்து வெளி வரும் குண்டு போல் அதிரடி யாக நகரும் காட்சிகளில் இயந்திரத் துக்கு மனிதன் சளைத்தவன் இல்லை என்பதனை வெளிப்படுத்தி இருக்கும் படங்களில் இயக்குநர் ஜான்வூவின் படங்களும் இடம்பிடித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. துப்பாக்கி கொண்டு சண்டை பிடிக்கும் காட்சிகளை தத்ரூபமாக எடுத்து பார்வையாளர் களை விழிப்படைய வைக்கும் விதத்தில் திரைப்படக் கதையை மையம் கொள்ள வைப்பதில் திறமை வாய்ந்தவர்.

எல்லைகளில் காவலுக்கு நிற்கும் இராணுவ வீரர்களை தவறாமல் பார்க்கத் தூண்டும் அளவுக்கு புது வியூகம் அமைத்து காட்சிகளை நகர்த்தும் திறன் இவரிடமே உள்ளதாக விமர்சகர்கள் இவரது படங்கள் பற்றி தெரிவிக்கின்றனர். அந்தள வுக்கு இவரது படத்தில் துப்பாக்கி சண்டைக் காட்சிகள் நிஜமாகவே இடம்பெறுவது போல் இருக்கும். துப்பாக்கி முனையில் துப்பாக்கி, நேருக்கு நேரே குண்டு களை வெளிப்படுத்தும் போது அந்தப் படங்களின் பின்னணி இசை, ஒளிப்பதிவில் கூட இவரது கவனம் முழுமையாக இருக்கும்.


படங்களின் காட்சிகளுக்கு அமைய பின்னணி இசை பின்னிப் பிணைந்திருப்பதால் அடுத்தது என்ன, அடுத்தது என்ன என்று பார்க்கத் தூண்டும் அளவுக்கு திரையரங்குகளில் பார்வையாளர்களை இருக்கையில் எழும்ப விடாது கட்டிப் போட்டு விடும் என்று இவரது பட ரசிகர்கள் பெருமையாகச் சொல்வார்கள். இதனால் இவரது படங்களை பார்க்காதவர்கள் என்று எவரையும்சொல்வதற்கு இடமில்லை. தனக்கான பாணியில் வித்தியாசமான முறையில் படத்தை எடுப்பதற்கு இரவு பகலாக உழைப்பவர். இவரது கடின உழைப்புத்தான் இவரை உல குக்கு அடையாளப்படுத்தியது என லாம். தனது சொந்த விருப்பு வெறுப்புக்களைக் கடந்து தனது படம் தரமானதாக வெளிவருவதற்காக களத்தில் இறங்கிப் பணியாற்றுபவர்.

தொழிலாளர் தினமான 01.05.1943 இல் சீனாவில் பிறந்த ஜான்வூ, கொங் கோவில் வசித்து வருகிறார். கிராமப் பகுதியில் பிறந்து வளர்ந்ததால் அந்தப் பகுதி மக்களின் கஷ்டங்களை நன்கு அறிந்தவர். இதனால் பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் முன்நின்று உழைத்தவர் என்ற பெருமையும் இவரிடம் உள்ளது.

இவரது படக் காட்சிகளில் முகத்துக்கு நேரே துப்பாக்கி வைத்துப் பேசும் காட்சிகள் பறந்து கொண்டே துப்பாக்கியால் சுட்டபடி சண்டை போடும் காட்சிகள் நம்பும் படியாக இருக்கும். இவரின் அக்ஷன் படங்கள் எல்லாம் உலக மக்களால் கொண்டாடப்படுபவை. இவரது படங்களில் மோட்டார் சைக்கிள் ஓட்டம் அதிகமாக இருக்கும். வாகனம் ஓடும் காட்சிகளை எடுப்பது இலகுவான காரியம் அல்ல. எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாக வாகனம் ஓடுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு கமராவும் பின் தொடர வேண்டும். அப்பொழுது தான் வாகனம் ஓடும் காட்சிகளை தரமாக எடுக்க முடியும். அதாவது கமராவை இன்னொரு வாகனத்தில் பூட்டி வாகனத்தை பின் தொடர்ந்து கமரா ஆடாதபடி காட்சியை எடுக்க வேண்டும் அல்லது 3, 4 கமராவை பயன்படுத்தி இந்தக் காட்சியை இலகுவாக எடுக்க முடியும். ஆனாலும் வாகனத்தை பின் தொடர்ந்து காட்சியை கமராவில் எடுத்தால் நம்பக் கூடிய அளவுக்கு காட்சியை எடுக்க முடியும் என்பதால் தயக்கம் காட்டாமல் அந்தப் பணியில் இறங்கி விடுவார்.

அதனால் தான் என்னவோ தரமான திரைப்பட வரிசையில் 10 இடங்களுக்குள் இவரது படமும் ஒரு இடத்தைப் பிடித்து விடுவது வழக்கம். இவரை அமெரிக்காவில் அடையாளப்படுத்திய திரைப்படம் என்று பார்த்தால் 1989 இல் இவர் இயக்கத்தில் வெளிவந்த கில்லர் படத்தைக் குறிப்பிடலாம். புரூஸ்யின் லீ எண்டர் த டிராகன் படத்துக்குப் பிறகு கில்லர் படம் அமெரிக்காவில் உள்ள திரையரங்குகளில் நீண்டநாள் ஓடிய பெருமையைச் சேர்த்தது. இந்தப் படங்களின் அக்ஷன் காட்சிகளை எடுத்த விதம் ரசிகர்களிடையே பாராட்டைப் பெற்றன. இவரது முதல் படமான த யங் டிராகன்ஸ் படத்தின் சண்டைக் காட்சிகளை அமைத்துக் கொடுத்தது நடிகர் ஜாக்கிதான். அதே போல் அந்தப் படத்தை தயாரித்தது ஜாக்கியின் பெரும்பாலான ஆரம்ப கால படங்களை எடுத்த ஹாங்காங் பட நிறுவனமான கோல்டன் ஹார்வஸ்ட் நிறுவனம் தான். இவர் எடுத்த புரோக்கன், ஏரோவ், பேஸ் ஆப், பேசெக், மிஷன் இம்பாசிபல் போன்ற படங்கள் பாராட்டைப் பெற்றன. இவர் எடுத்த படங்கள் பிரபல இயக்குநர் மார்ட்டின் ஸ்கார்சசி படங்களோடு ஒப்பிட்டு ரசிகர்கள் பேசினார்கள்.

இவர் 1993 இல் இருந்து அமெரிக்கா வாசியாக மாறிவிட்டார். இவருக்கு 3 குழந்தைகள் உள்ளனர். இவரது முதல் அமெரிக்கப் படம் ஜென் குலுட் நடித்த ஹாட்டார்கெட் படம் தான். அப்போது தான் இவரது அக்ஷனை ரசிகர்கள் கண்டு கொண்டார்கள். இந்தப் படத்தில் இருந்து ஜான்வூவை ஆசிய மார்ட்டின் ஸ்கார்சி என்று கொண்டாடுகிறார்கள். இதனால் தனக்கென தனிப்பட்ட அடையாளம் இல்லாதது போல் சிறு கவலைப்பட்டிருக்கிறார்.



> "–"
> பல தொலைக்காட்சி நாடகங்களை எடுத்தும் உள்ளார். ஸ்கிரீன் பிளேரைட்டர், இயக்குநர், தயாரிப்பாளர், எடிட்டர் போன்ற தளங்களில் இயங்குபவர். நகைச் சுவைப் படங்களை எடுப்பதிலும் வல்லவர்.

பல தொலைக்காட்சி நாடகங்களை எடுத்தும் உள்ளார். இயக்குநர், தயாரிப்பாளர், திரைக்கதையாசிரியர், படத்தொகுப்பாளர் போன்ற தளங்களில் இயங்குபவர். நகைச் சுவைப் படங்களை எடுப்பதிலும் வல்லவர். பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள கிராமத்தில் வாழ்க்கையை ஆரம்பித்து சினிமா உலகில் மிளிர்ந்து அதிகளவு சம்பளம் வாங்கிய முதல் ஆசிய இயக்குநர் ஜான்வூ ஆவார்.

பார்வையாளன்.

---

# இயற்கையுடனுமா இந்தச் சீண்டல்?

## கோப்பாய் சண்முகம்
### கதையோடு செய்தி

சின்னச் சின்ன மழைத்துளிகள் சேர்த்து வைப்போமே, மின்னலொளியில் நூல் எடுத்து கோர்த்து வைப்போமே, சக்கரவானமே மழையை அருந்துமா?... என்று நடு வீதியில் முன்னாலோ பின்னாலோ வாகனம் வரும் என்ற பயம் கூட இல்லாமல் மழையில் நனைந்த படியே அதனை ரசித்துக் கொண்டு பாடிக் கொண்டு செல்கிறான் ஓர் சிறுவன்.

அந்த வழியே மோட்டார் சைக்கிளில் "றெயின் கோட்" அணிந்து கொண்டு மழையில் நனையாமல் சென்ற நான் மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் குறைத்து அவனைப் பார்க்கிறேன். ஒரு 10 வயது மதிக்கலாம். மழையில் நனைந்து கொண்டு செல்கிறான். தனது இரு கைகளையும் உயர்த்தி வானத்தை நோக்கி நீட்டியபடி செல்கிறான். மழை போதாது மழையே வாவா என்று அவன் அழைப்பது போல இருந்தது அந்தக் காட்சி.

தன்னை நான் பார்ப்பதை அவன் உணர்ந்து கொண்டான் போலும். வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவன் உடனே என்னைப் பார்த்தான். மழையில் நனைந்த மரக்கிளை காற்றில் அசைந்து தனது ஈரத்தை உலர்த்தியது போல தனது தலையை அசைத்துவிட்டு, என்னைப் பார்த்தான். வைத்த கண் வாங்காமல் பார்த்து விட்டுச் சிரித்தான். இவன் ஏன் என்னைப் பார்த்து சிரிக்கிறான் என்று தெரியாமல் கடுப்பாகி நான் மீண்டும் அவனைக் கூர்ந்து பார்க்க, அவன் என்னை அடையாளம் கண்டு விட்டவன் போல் எனக்கு நேரே கையை நீட்டிக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தான்.

அந்த இடத்தில் நின்றால் தேவையற்ற பிரச்சினையாகி விடும் என்ற காரணத்தால் மோட்டார் சைக்கிளின் வேகத்தை அதிகரித்தேன். ஆனாலும், ஏன் இவன் என்னைப் பார்த்து சிரித்தான்? என்று மனதுக்குள் குழப்பம். அந்த வழியே எனக்குப் சமாந்தரமாக மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் என்னைப் பார்த்து "என்ன அண்ணை அந்தச் சிறுவன், உங்களைப் பார்த்துச் சிரித்ததால் குழம்பிப் போய் இருக்கிறியளா?" என்று கேட்டார். நானோ அது சரிதான் என்பது போல் தலையை ஆட்டினேன்.

அதற்கு அவரோ "இந்த ஆண்டு மழை பெரிதாகப் பெய்யவில்லை. அப்படி இருக்கும் போது, பெய்கிற மழையில் நனைய மனம் இல்லாமல் இருக்கிறியளே என்று உங்களைப் பார்த்து அந்த சிறுவன் சிரித்திருப்பான்" என்றார். அந்த சிறுவன் வெகு ஆழமாகச் சிந்தித்திருப்பான் போலும் எனத் தோன்றியது. மழை வீழ்ச்சி குறைவுக்கான காரணத்தை நாங்கள் கண்டறிவதில்லை. மழை வேண்டிக் கடவுளுக்கு யாகம் செய்கிறோம். வேண்டுதல் செய்கிறோம். இதில் என்ன பயன் ஏற்படப்போகிறது. மரத்தை வளர்ப்போம் என்று நாங்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் மரங்களை வளர்ப்பதற்கு முயற்சிப்பதில்லை. மரங்கள் இல்லாததாற்றான் மழை வீழ்ச்சி இல்லாமல் சுற்றுச் சூழலில் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதனால் மரங்களை நட்டு வளர்க்க வேண்டும். அதுவும் மழை காலங்களில் கூடுதலாக மரங்களை நட்டால் இலகுவாக வளர்ந்துவிடும் என்பதால் மழை காலங்களில் மரங்களை நட வேண்டும்.

வன்னியில் மரங்களைக் கண் மூடித்தனமாக வெட்டி எடுத்துச் செல்கிறார்கள். இதனால் சுற்றுச் சூழலுக்கு ஏற்பட[illegible] பாதிப்புகள் பற்றி எவருமே கண்டுகொ[illegible]வதில்லை. தென்னிலங்கையில் இருந்[illegible]வருபவர்கள் வன்னியில் மரங்கள் வெட்டியெடுத்துச் செல்லப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கவலைப்படுகின்றனர். இராணுவத்தினரின் உதவியுடன்தான், அவர்கள் மரங்களை வெட்டுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முட்கொம்பன், வன்னேரிக்குளம், கரிகாலநாகபடுவான், ஜெயபுரம் போன்ற பகுதிகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், ஐயன்கன் குளம் போன்ற பகுதிகளிலும், மாந்தை கிழக்கு சிறாட்டிகுளம், பெரிய காடு போன்ற பகுதிகளிலும், கூடுதலாக மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. இப்போதும் வெட்டிவருகிறார்கள். இதற்கு இராணுவத்தினம் அரச அதிகாரிகளும் துணை போவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். வவுனியா வடக்குப் பிரதேசங்களில் மரங்கள் பெருமளவில் வெட்டப்படுகின்றன. வெட்டிய மரங்களுக்குப் பதிலாக மரங்களை அந்த இடத்தில் நடவேண்டும், மழை காலம் அதற்கு வாய்ப்பானது என்றாலும், மரங்களை நடுவதற்கும் இப்பொழுது பிரச்சினையாகப் போய் விட்டது. மாவீரர் நாளில் மரங்களை நடுகின்றார்கள் என்று கூறி மரங்கள் நடுவதைத் தடுப்பதற்கு இராணுவம் தடைபோட்டது. ஆனாலும் அந்த நாள்களில் மரங்கள் நடப்பட்டன. மரங்கள் நாட்டிய மாகாண சபை உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் வீடுகளின் மீதும் கல்லெறி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மாவீரர் நாள்களில் தீபம் ஏற்றக் கூடாது என்று தடை உத்தரவு போட்டவர்களால் இன்று மரங்கள் நடக்கூடாது என்றும் தடைபோடப்பட்டது. நாளை வேறு எது எதற்குத் தடை வருமோ தெரியாது. அனைத்துத் தடைகளும் இயற்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூட சிந்திக்கத் தெரியாதவர்கள் இருக்கும் நிலையில் நாட்டில் பருவ மழை எப்படிப் பெய்யும்? தமக்கு வேப்பங்காயாகக் கசக்கும் ஒரு நிகழ்வைத் தடுத்து நிறுத்திவிட வேண்டுமென்ற பேரின வாதச் சிந்தனை படைத்தோர் இயற்கையை பாதுகாக்கக் கூடிய இத்தகைய மரம் நடும் நிகழ்வுகளை தடுப்பதில் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

இலங்கை இயற்கை வனப்புமிக்க நாடு என்று தான் பாடப் புத்தகங்களில் நாம் படித்திருக்கிறோம். நேரில் கண்டுகளித்தும் இருக்கிறோம். ஆனால் இப்பொழுது இலங்கை இயற்கை அழிவுகளுக்கு உட்பட்ட நாடாக மாறியுள்ளது. மனிதன் தான் இதற்குக் காரணம். தமிழரின் பிரதேச இயற்கை வளங்களை சூறையாடுவதால், ஒட்டுமொத்த இலங்கைக்கும் பாதிப்பு ஏற்படும் என்று கூட சிந்திக்கத் தெரியாதவர்களால் எப்படி இந்த நாட்டில் இயற்கை அழிவு ஏற்படாது கட்டிக்காக்க முடியும்? இயற்கையை அழிப்பவர்களைத் தடுப்பதற்கு முடியாமல் இருக்கும் இந்த அரசால் எப்படி இந்த நாட்டில் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படும்? இது ஒரு வகையில் தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. எதிரிக்குச் சகுனப் பிழையாக வேண்டும் எனக் கருதிச் செயற்படுவதற்கு ஒப்பான ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org